பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI


விலை
20/=

புதுமை : 01 | 04 மார்ச் 2017 | விதி : 38





**பரவிப்பாஞ்சான் :
விடுவித்தும்
விடிவில்லை**



**நெடுவாசல்:
இயற்கையைக் காக்க
இன்னொரு புரட்சி**



**காத்திருந்து...
காத்திருந்து...**



**ஒஸ்மானியாக்
கல்லூரி**




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ சயந்தன்

# ஆறாவடு

"உனக்குத் தெரியும்தானே. செத்துப் போனதென்று கைவிட்ட எத்தினை பேர் திரும்பி எழும்பி வந்திருக்கினம்" அவர் தனது சொற்களுக்கூடாகவே தன்னைத் தைரியப்படுத்தினார். ஒரு தடவை குரல் தழுதழுத்தவாறு அவர் இப்படிச் சொன்னார். "எனக்கு இவனைப் பார்க்கும்போதெல்லாம் என்ரை கடைக்குட்டியின்ரை ஞாபகம்தான் வருகுது"

சின்னப்பெடியன் செத்து விட்டான் என்பதை இவன் நம்பத் தொடங்கினான். பெரியய்யாவிடம் அதைச் சொல்ல முடியாமலிருந்தது. அவர் அதனை வெகு சீக்கிரமாக உணர்ந்து கொள்ள வேண்டும் என மனது நினைத்தது.

சின்னப்பொடியன் தன் மனதிற்குள் இவனை நெருக்கமாக உணர்ந்திருக்க வேண்டும். பயணத்தின் முதல் நாளிலிருந்து வாகனத்திற்குள், கடற்கரையில், வள்ளத்தில் இவனது அருகாமையை அவன் விரும்பியிருந்தான். கடலின் முதல் இரவு இவனைக் கட்டிப்பிடித்து செருகிக் கொண்டு படுத்திருந்தது. நேற்றுப் போன்று இருக்கின்றது. அவனது கண்களில் தெரிந்த குழந்தைத்தனத்திற்குப் பொருந்தாத மாதிரி எங்கேனும் வெறித்துக் கொண்டும் கண்களைத் தாழ்த்திக் கொண்டும் அவன் இருந்தான். நோய் வந்து படுத்த படுக்கையாகிய தொடக்க நாட்களிலும் மேலே வெறித்தபடியிருந்த கண்களில் நீர்கசிந்து கொண்டிருந்தது.

இவன் மேலேறி வந்த கொஞ்ச நேரத்தில் கடல் வெளி வழமையை மாற்றியிருந்தது. மேலே இருட்டியிருந்தது. மோதும் அலைகளின் வேகமும் சத்தமும் அதிகரித்திருந்தன. இவன் தளத்தின் நடுவில் உட்கார்ந்திருந்தான். ஓங்காளிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

இருட்டிய பிறகு பெரியய்யா மேலேறி வந்தார். இன்றைக்கு முழுவதும் அவர் சின்னப் பெடியனின் அருகிலேயே இருந்தார். சாப்பிட்டதாகவும் தெரியவில்லை.

"ஒருக்கா அவனைப் பார்த்துக் கொள், நான் கக்கூசுக்குப் போட்டு வாறன். வயித்துக்கை என்னவோ செய்யுது..." என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

இவன் 'ம்' என்றான்.
சின்னப்பெடியன் செத்துப் போனதாக வள்ளத்துக்குள் மெதுவாகப் பரவியிருந்தது. சாவுப்பயம் வானத்தை மூடுகிற கரிய இருளைப் போல எல்லோரிலும் கவிந்திருந்தது. எவரும் எவருடனும் பேசியதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு கால்வாயைக் கடந்தால் போதுமென்று காலையில் ஓட்டி சொல்லியிருந்தான். அதைப்பற்றி யாரும் அக்கறைப்பட்டிருக்கவில்லை.

பெரியய்யா கக்கூசிலே போய் உட்கார்ந்ததை இவன் கண்டான். முன்னால் தொங்கிய கயிற்றை இழுத்து அவர் தனது கையில் சுற்றிக்கொண்டார். இன்னொரு கை அடிக்கடி வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டது.

அலைந்து கொண்டிருந்த இவனது பார்வை ஓர் இடத்தில் நிலைகுத்திய முதற்கணத்தில் மூளை அதை உடனடியாக கிரகித்துக் கொள்ளவில்லை. பிறைநிலாவின் மெல்லிய வெளிச்சம், ஒரு பெரிய மலையைப் போல நகர்ந்து வந்த அலைத்திரளில் படிந்திருந்தது. பெரியய்யாவுக்கு பின்னால் ஒரு பூதம் வருவதைப் போல அதனை இவன் கண்டான். கம்பமொன்றை இறுக்கிப் பற்றியபடி "போட் கவிழப் போகுது" என்ற இவனின் கதறல் அடங்குவதற்கு முன்னர் வள்ளம் காற்றில் தூக்கப்பட்டு அந்தரத்திலே விழுந்தது. பிடியைத் தளர்த்தாமல் கண்களை இறுக்க மூடினான். ஒரு வெடிப்புச் சத்தத் துடன் லைற் அணைந்திருந்தது. "என்ரை அம்மா" என்ற ஓலத்தையும் "அம்மே.." என்ற பெருங்குரலையும் இவன் சம நேரத்தில் கேட்டான்.

சட்டென்று பெரியய்யாவின் நினைப்பு வந்தபோது என்னவோ நடந்துவிட்டது என்ற உணர்வும் ஓடி வந்தது. அலை பெரியய்யாவின் பின்முதுகில் மோதியது. அவர் வள்ளத்தின் உள்ளேயே எங்காவது விழுந்திருக்க வேண்டும்.

"பெரியய்யா..." என்று இவன் கத்தினான். "அண்ணையாக்கள், பெரியய்யா உள்ளை எங்காவது விழுந்து கிடக்கிறாரோ எண்டு பாருங்கோ..." என்று குளறினான்.

"ஐயோ அங்கை பாருங்கோ..." என்று இரண்டு பேர் ரொய்லட் அருகே ஓடினார்கள். அவர்கள் கை காட்டிய தூரத்தில், கடலில் பெரியய்யா கைகளை உயர்த்தி வீசியடித்தபடியிருந்தார்.

வார்த்தைகள் ஏதுமற்ற ஓலத்தை அவர் எழுப்பினார். அலைகள் அவரை அலைக்கழித்தன. தண்ணீருக்குள் மூழ்குவதும் திரும்ப எழும்புவதுமாக அவர் தத்தளித்தார்.

"போட்டை நிப்பாட்டச் சொல்லுங்கோ" என்று இவன் கத்தினான். பிரதீபன் ஓடிப் போய் ஓட்டிகளில் ஒருவனைக் கூட்டி வருவதற்கிடையில் பெரியய்யாவுக்கும் வள்ளத்திற்குமிடையிலான இடைவெளி அதிகரித்தது. அவரது குரல் தேயத் தொடங்கிய பொழுதில் பெரியய்யா கடலுக்குள் மட்டுமில்லாமல் இருளுக்குள்ளும் மூழ்கிக்கொண்டிருந்தார்.

"அண்ணை... போட்டைத் திருப்புங்கோ.. அவரைத் தேடுவம்" என்று இவன் ஓட்டியிடம் கத்தினான். அவனும் இருண்ட கடலுக்குள் ஏதேனும் அசுமாத்தம் தெரிகிறதா என்று கண்களை அலைய விட்டிருந்தான்.

"இப்படியே நிற்காமல், ஏதாவது செய்யுங்கோ" என்று ஓட்டியைப்பிடித்து உலுக்கினான். இதற்கிடையில் இரண்டொருபேர் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கியிருந்தனர். "இப்படி நடுக் கடலில ஒரு சாதிக்கும் தெரியாமல் சாகத்தானோ நாங்கள் வந்தனாங்கள்..."

ஓட்டி இவன் தோள்களை ஆதரவாகப் பற்றினான். பிறகு நிதானமாகச் சொன்னான். "எதிராக அடிக்கின்ற அலைகளின் நடுவே எங்கேயென்று தெரியாமல் தேட முடியாது. மற்றது இந்த அலைகளுக்கு நடுவே நாங்கள் தேடுகின்ற நேரமளவுக்கு அவரால் தாக்குப்பிடிக்க முடியாது"

அன்றைய இரவு முழுவதும் அழுகையொலிகளும் கேவல்களும் பெரும் குரலில் பிரார்த்தனைகளும் வள்ளத்தை நிறைத்திருந்தன. சில மணி நேரத்திற்கு முன்னர் பெரியய்யா உட்கார்ந்திருந்து வயிற்றைத் தடவியபடியிருந்த காட்சி கண்ணுக்குள்ளேயே விரிந்து நின்றது.

இவன் அகிலாவின் தொலைபேசி இலக்கத்தை இவனுக்குத் தெரிந்த ஆறு பேரிடம் கொடுத்து "எனக்கு ஏதாவது நடந்தால், நீங்கள் எவ்வளவு நாளானாலும் பரவாயில்லை, இந்த நம்பருக்கு அடிச்சு தகவல் சொல்லவேணும்" என்றான். இவனைப் போலவே ஆளாளுக்கு தங்களது இலக்கங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அடுத்த காலை விடிந்தபோது சின்னப் பெடியனின் சடலத்தைக் கீழறையில் இருந்து மேலே கொண்டு வந்தார்கள்.

பண்டாரா கீழ்த்தளத்தில் இருந்து தூக்கி உயர்த்த, இவன் சடலத்தின் கமக்கட்டுக்குள் பிடித்து உயர்த்தினான். சடலம் தலையைத் தொங்கப் போட்டிருந்தது. அதனை மேல் தளத்தில் வளர்த்தினார்கள். நேற்றைக்கு இரவு அழுதவர்கள் திரும்பவும் தலையில் அடித்துக் குளறத் தொடங்கியிருந்தார்கள்.

சின்னப் பெடியனின் ட்ரவலிங் பையிலிருந்த புதுக்காற்சட்டையையும் சேட்டையும் இவன், அவனுக்கு அணிவித்தான். பையில் இத்தாலி முகவரிகள் எழுதிய டயறியொன்றும் சில படங்களும் பாவித்த சேலை ஒன்றும் இருந்தன. டயரியை இவன் பத்திரப்படுத்திக் கொண்டான்.

படங்களை மடித்து அவன் சேட்டுப் பொக்கற்றுக்குள் வைத்தான். சேலையால் சின்னப் பெடியனை முழுவதுமாகச் சுற்றினான்.

நான்கு பேர் சடலத்தைத் தூக்கிக் கொண்டார்கள். இரண்டு நிமிடங்களாவது வள்ளத்தை மெதுவாக ஓட்டும்படி இவன் கேட்டான். நிறுத்தி வைத்தார்கள். பெரியய்யா ரொய்லெட் இருந்த பக்கமாக சடலத்தைக் கொண்டு சென்றார்கள். கால் பக்கம் பிடித்திருந்தவர்கள் முதலில் தண்ணீருக்குள் இறக்கினார்கள். இவன் தோள்களைத் தாங்கியிருந்தான். படகின் விளிம்போடு குனிந்து சடலத்தில் தனது கடைசிப்பிடியைத் தளர்த்திய போது அது தண்ணீருக்குள் வேகத்தோடு இறங்கியது.

வள்ளம் புறப்பட்ட சற்றைக்கெல்லாம் தூரத்தே சேலையொன்று மிதந்ததை இவர்கள் கண்டார்கள்.

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேகம் தொலைத்த தேசக் குயில்



■ தமிழரசன்

## எஸ்.ஜி.சாந்தன்...

ஈழத்தமிழரின் உணர்வின் குரலாக இறுதிவரை ஒலித்தவர். எமது தேசத்தின் தனித்துவ அடையாளம் - தமிழக இசை, ஈழத்தில் சினிமா ஊடாக ஆதிக்கம் செலுத்திய போதும் ஆலமரமாக வளர்ந்து விழுதூன்றிய பெரு விருட்சம்.

எஸ்.ஜி.சாந்தன் என அறியப்பட்ட குணரத்தினம் சாந்தலிங்கம் 1960 டிசெம்பர் 20 ஆம் திகதி புங்குடுதீவில் பிறந்தார். தனது பன்னிரண்டு வயதிலேயே கொழும்பு கதிரேசன் ஆலயத்தில் "மருதமலை மாமணியே..." பாடலைப் பாடிப் பாராட்டுப் பெற்றார். தொடர்ந்து இலங்கை வானொலியில் பாடல்களைப் பாடியதுடன், நாடகங்களும் நடித்து வந்தார்.

தென்னிந்திய சினிமா, பக்திப் பாடல்களைப் பாடி வந்த சாந்தன் விடுதலைப் புலிகளுக்கு அறிமுகமான சமயம் விடுதலைப் புலிகள் முதன் முதலாக 1989 நவம்பர் 27 மாவீரர் நாளை கொண்டாட ஆயத்தமாக இருந்தனர். இதன்போது தலைவர் பிரபாகரன் பாடல் ஒலிப்பேழை ஒன்றை வெளியிட விரும்பினார். அந்த சமயத்தில்தான் சாந்தன் எழுதிப் பாடிய "வானம் பூமியானது பூமி வானமானது புழுதியெங்கும் குருதியாறு ஓடுது" பாடலைக் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

இதைக் கேட்ட தலைவர் பிரபாகரன் "இவ்வாறான ஒருவரைத்தான் எதிர்பார்த்தேன். இவர் மிக நன்றாகப் பாடுகிறார்" என்று கூறியிருக்கிறார். இதையடுத்து புதுவை இரத்தினதுரையின் எழுத்தில் உருவான "இந்த மண் எங்களின் சொந்த மண்..." பாடலைப் பாடினார் சாந்தன். இப்பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து "ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன்...", "கரும்புலிகள் என நாங்கள்", "புதிய வரலாறு எழுதும் புலி வீரன்", "விண் வரு மேகங்கள் பாடும் மாவீரரின் நாமங்கள் கூறும்" வெளியான பாடல்கள் அனைத்தும் சாந்தனை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

புதுவை இரத்தினதுரை, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் வாஞ்சிநாதன் ஆகியோரின் எழுத்துகளில் உருவான பாடல்களுக்கு சாந்தனின் காந்தக் குரல் வலுச் சேர்த்தது. தமிழீழ விடுதலையை வலியுறுத்தியும், அரசும் இராணுவமும் தமிழ் மக்களுக்கு இழைக்கும் கொடூரங்களையும் அவற்றால் மக்கள் படும் துன்ப, துயரங்களையும் தன் உணர்ச்சிக் குரலால் வெளிப்படுத்தினார் சாந்தன். அவரின் எழுச்சிப் பாடல்களால் ஈர்க்கப்பட்டும் மக்கள் படும் துன்பங்களையும் உணர்ந்த இளைஞர், யுவதிகள் அணியணியாக புலிகளின் பாசறைகளில் இணைந்தனர்.

மண்ணிற்காக உயிர்நீத்த வீரமறவர்களுக்காக சாந்தன் பாடிய பாடல்கள் உயிரோட்டம் நிறைந்தவையாகவும் மனதில் நெருடச் செய்பவையாகவும் அமைந்தன. "கார்த்திகை மாதம் பூத்திடும் போது கார்த்திகைப் பூக்களும் பூத்திடும்..." "கல்லறைகள் விடை திறக்கும்", "கல்லறை மேனியர் கண் திறப்பார்களே கார்த்திகை நாளிலே" பாடல்கள் உதாரணம். புலிகளின் ஆஸ்தான பாடகராக சாந்தன் வலம் வந்தபோதும் ஏனைய பாடகர்களான மேஜர் சிட்டு, சுகுமார், திருமலை சந்திரன், நிரோஜன், தேனிசை செல்லப்பா, வர்ணராமேஸ்வரன் ஆகியோருடன் உறவுகளையும் பேணியிருந்தார்.

சாந்தன், சிட்டு, சுகுமார் ஆகியோருடன் இணைந்து பாடிய "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று நீ கூறு..." பாடல் மிகப்பெரும் எழுச்சியையும் வரவேற்பையும் பெற்றிருந்தது. மேஜர் சிட்டு வீரச்சாவு அடையவே, சாந்தனும் சுகுமாரும் இணைந்து பாடல்களைப் பாடினர். இந்த உறவு இறுதி வரை நீடித்து வந்தது. இருவரும் இணைந்து பாடிய "ஈடு வைத்து ஈடு வைத்து நந்தலாலா தமிழீழம் வரப் போகிறதே..." ஆனையிறவு வெற்றிச் சமர் பாடல் ஈழத் தமிழர்களிடத்தே மகிழ்ச்சிப் பிரவாகத்தை ஏற்படுத்தியது.

யுத்தத்தால் சொந்தங்களை இழந்தும் இடம்பெயர்ந்தும் பெரும் அழிவுகளை சந்தித்தும் துன்ப, துயரங்களில் மூழ்கியும் தொடர்புகள் ஏதுமின்றியும் தனித்துக் கிடந்த மக்களுக்கு புலிகளின் குரல் வானொலி, தெருக்கூத்துக்கள், அரசியல் கூட்டங்கள், இசைக் கச்சேரிகளில் ஒலித்த சாந்தனின் குரல்தான் அருமருந்தாக அமைந்தது.

வெறுமனே புரட்சிப் பாடல்களை இசைப்பவராக மட்டும் சாந்தன் இருக்கவில்லை. விடுதலைப் போருக் காக தனது இரு புதல்வர்களை ஈந்தளித்துள் ளார். இவரின் புத்ல்வரான 2ஆம் லெப். கானகன் ஜெயசிக்குறு பெருஞ்சமரில் தாய் மண்ணுக்காக உயிர் நீத்தார். தந்தையைப் போன்றே இசையுலகில் சாதிக்கப் புகுந்த இசையரசன் இறுதிப் போரில் புலியாகி மாவீரரானார்.

இறுதிப் போர் காலத்தில் வன்னி மக்களை தொடர்ந்து துரத்திய யுத்தத்தில் இராணுவத்தின் எறிகணை வீச்சுக்கு ஒரு மகளைப் பறிகொடுத்த போதும், முள்ளிவாய்க்காலில் இருந்தபடி மனஉறுதியுடன் சாந்தன் கொடுத்த நேர்காணல் பலருக்கும் உந்துசக்தியையும் தேசம் மீதான நேசத்தையும் அதிகரித்தது. உணவின்றி, நீரின்றி வாடி நின்ற நேரத்திலும் தமிழர் விடுதலைக்கு ஆதரவு வேண்டியும் மக்களை ஆற்றுப்படுத்துவதாகவும் சாந்தனின் குரல் ஓங்கி ஒலித்தது.

சாந்தன் எழுதிப் பாடிய "வானம் பூமியானது பூமி வானமானது புழுதியெங்கும் குருதியாறு ஓடுது" பாடலைக் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

இதைக் கேட்ட தலைவர் பிரபாகரன் "இவ்வாறான ஒருவரைத்தான் எதிர்பார்த்தேன். இவர் மிக நன்றாகப் பாடுகிறார்" என்று கூறியிருக்கிறார். இதையடுத்து புதுவை இரத்தினதுரையின் எழுத்தில் உருவான "இந்த மண் எங்களின் சொந்த மண்..." பாடலைப் பாடினார் சாந்தன்.

இறுதிப் போர் முடிவுக்கு வந்த பின்னர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த சாந்தனை ஒரு கலைஞனாகப் பார்க்கத் தவறிவிட்டது இராணுவம். மிகப்பெரும் எதிரியாகவே அவரைப் பார்த்த இராணுவம் தடுப்பு முகாமில் வைத்திருந்து பின்னரே விடுதலை செய்தது. இசைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்தக் கலை ஞன் புரட்சிப் பாடல்களில் இருந்து மீண் டும் தத்துவப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் பாட ஆரம்பித்தார்.

இச்சமயத்தில்தான் அந்த மகத்தான கலைஞனின் இரு சிறுநீரகங்களும் செயலிழக்கத் தொடங்கின. அவரைக் காப்பாற்ற பெரும் முயற்சிகளை தமிழ் சமூகம் எடுத்த போதும் அது பலனளிக்கவில்லை. இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதி சாந்தன் சாவை அரவணைத்துக் கொண்டார். மரணமான தங்கள் அபிமானப் பாடகருக்கு பெருந்திரளென மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தேசத்தின் குயில் தனது தேகத்தை தொலைத்தபோதும் அதன் குரல் தமிழர் வாழும் தேசம் எங்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழகத்தின் தஞ்சைப் பகுதியில் மீத்தேன் திட்டம் என்று பெரிய கருவிகளைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். மக்கள் எதிர்த்து முடக்கிய பிறகு புதுக்கோட்டை பகுதியில் ஹைட்ரோகார்பன் திட்டம் என்று கருவிகளைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொறியியல் படிப்பின் போது படித்த வேதியியல் மறந்துவிட்டது. இணையத்தில் துழாவி, வேதியியல் படித்த நண்பர்களை விசாரித்தால் ஹைட்ரோகார்பன் மீத்தேன் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றுதான். பெயரே சொல்வது போல ஹைட்ரஜனும் கார்பனும் சேர்வது ஹைட்ரோ கார்பன். அது ஒரு கார்பன் அணுவும் நான்கு ஹைட்ரஜன் அணுவும் சேர்ந்த மீத்தேனாகவும் ($CH_4$) இருக்கலாம் அல்லது ஈத்தேனாகவோ, புரேப்பேனாகவோ கூட இருக்கலாம். கார்பன் மற்றும் ஹைட்ரஜன் அணுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பெயரும் பயன்பாடும் மாறுகிறது.

அப்படியென்றால் மீத்தேன் திட்டம் என்ற பெயரை மட்டும் ஹைட்ரோகார்பன் திட்டம் என்று சற்றே மாற்றிவிட்டு கடப்பாறையைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. அப்பொழுது தஞ்சாவூர். இப்பொழுது புதுக்கோட்டை நெடுவாசல்.

ஹைட்ரோகார்பனை எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்துகிறார்கள். 'நாடு வளர்கிறது. தேவை பெருகிறது. இதைக் கூட எடுக்க அனுமதிக்கவில்லையென்றால் எப்படி?' என்று சில அரசியல்வாதிகள் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். ஹைட்ரோகார்பனை எடுப்பது என்பது புத்தம் புதிய திட்டமில்லை. உலகின் பல இடங்களில் நிலத்துக்கடியிலோ அல்லது கடலுக்கடியிலோ துளையிட்டு பல நிறுவனங்கள் தோண்டி எடுக்கின்றன. நடுக்கடலுக்குள் ஆழ்துளையிட்டு தோண்டியெடுக்கும் போது நமக்கு தெரியவா போகிறது? எங்கேயோ நடக்கிறது என்று அமைதியாக இருந்து கொள்வோம். ஆனால் மக்கள் வாழ்கிற பகுதிகளிலும் விவசாய நிலத்திலும் கருவிகளைக் கொண்டு வந்து உள்ளே இறக்கும் போது மக்கள் அலறத்தான் செய்வார்கள்.

### எது தியாகம்?

பா.ஜ.கவின் இல.கணேசன் 'ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் ஒரு மாநிலம் தியாகம் செய்ய வேண்டாமா? ஒரு மாநிலம் நன்றாக இருக்க வேண்டுமானால் ஒரு மாவட்டம் தியாகம் செய்ய வேண்டாமா? ஒரு மாவட்டம் நன்றாக இருக்க வேண்டுமானால் ஒரு கிராமம் தியாக செய்ய வேண்டாமா? ஒரு கிராமம் நன்றாக இருக்க வேண்டுமானால் ஒரு தனிமனிதன் தியாகம் செய்ய வேண்டாமா?' என்று பேசிய வீடியோ இணைப்பைப் பார்க்க நேர்ந்தது. தியாகம் என்பது தாமாக முன்வந்து செய்வது. அரசாங்கத்தின் அதிகாரக் கரங்களால் வலுக்கட்டாயமாகத் துரத்தியடித்து அதற்கு தியாகம் செய்கிறார்கள் என்று பெயரையும் சூட்டுவார்கள் போலிருக்கிறது.

அரசியல்வாதிகள் மனசாட்சியில்லாமல் ஒரு திட்டத்தை ஆதரித்துப் பேசும் போது திட்டத்தின் பின்னணியில் இருக்கும் அரசியலையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நெடுவாசல் கிராமத்தில் ஹைட்ரோகார்பனை எடுக்கும் உரிமத்தை பெங்களூரைச் சார்ந்த ஜெம் லேபரட்டரீஸ் என்ற நிறுவனத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

### இதுதான் பின்னணி

ஜெம் லேபரட்டரீஸ் நிறுவனமானது கர்நாடகா மாநிலத்தைச் சார்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.மல்லிகார்ஜூனப்பாவுடையது. மத்திய கர்நாடகாவில் மிகப்பெரிய தொழிலதிபர் இவர். ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினராக இருந்து பிறகு பாஜகவின் சார்பில் மக்களவை உறுப்பினர் ஆனார். மல்லிகார்ஜூனப்பாவின் மகன் ஜி.எம்.சித்தேஸ்வரா 2016 ஆம் ஆண்டு வரைக்கும் மோடியின் மத்திய அமைச்சரவையில் கனரக தொழில்துறை இணையமைச்சராக இருந்தார். இவரது சகோதரர்கள்தான் ஜெம் லேபரட்டரீஸ் நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இல.கணேசன் நெடுவாசல்காரர்களைப் பார்த்து 'தியாகம் செய்' என்று சொல்வதை இதனோடு இணைத்துத்தான் புரிந்து கொள்ளச் சொல்கிறது மனம். தம் கட்சிக்காரரின் நிறுவனத்திற்காக தியாகம் செய்யச் சொல்கிறார் போலிருக்கிறது என்று யோசிக்கத்தானே தோன்றும்?

இந்த வருடம் பெப்ரவரி 15 அன்று பொருளாதார விவகாரத்திற்கான நிறைவேற்றுக் குழுக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் 44 இடங்களில் ஹைட்ரோகார்பன்களைத் தோண்டியெடுக்கும் ஒப்பந்தங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 28 இடங்கள் நிலத்திலும் 16 இடங்கள் கடலுக்குள்ளும் இருக்கின்றன. இந்த ஒப்பந்தங்களை வென்றவர்களுள் நெடுவாசலைத் தோண்டுவதற்கான அனுமதியைப் பெற்ற மேற்சொன்ன ஜெம் லேபரட்டரீஸ் நிறுவனமும் ஒன்று.

### கொட்டப்போகும் 46 ஆயிரம் கோடி

பொதுவாகவே மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்துக் கொண்டுவரப்படும் இத்தகைய திட்டங்களில் தனியார் நிறுவனங்கள்தான் கொழிக்கிறார்கள். ஒப்பந்தத்தை வென்றவற்றுள் பத்து நிறுவனங்கள் அரசு சார் நிறுவனங்கள். பத்தொன்பது நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள். இது தவிர ஒரு வெளிநாட்டு நிறுவனமும் பட்டியலில் இருக்கிறது. இப்படி நாற்பத்து நான்கு இடங்களில் தோண்டுகிறார்கள் அல்லவா? இதில் மொத்த வருமானம் 46,400 கோடி ரூபாய் இருக்கும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். இதில் வெறும் 14,300 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம். மிச்சமெல்லாம் தோண்டியெடுக்கிற நிறுவனங்களின் பொக்கற்றுக்குத்தான் செல்லும். அரசாங்கம் கணக்குப் போட்டதே 46,400 கோடி ரூபாய் என்றால் உண்மையான வருமானம் எவ்வளவு இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? சரி அரசாங்கம் கணக்கிடுற தொகையையே வைத்துக் கொண்டாலும் கூட அதில் பெரும்பங்கு தனியார் நிறுவனங்களுக்குத்தானே செல்கிறது?

அரசாங்கம் வருமானம் சம்பாதித்தால் கூட 'சரி நாட்டு மக்களுக்கு பணம் போய்ச் சேரட்டும்' என்று நெடுவாசல் மக்களிடம் தியாகம் செய்யச் சொல்லலாம். கர்நாடகக்காரரின் நிறுவனம் பிழைக்க, பா.ஜ.க. காரன் சம்பாதிக்க 'நெடுவாசல்காரன் தியாகம் பண்ணினா தப்பில்லை' என்று இல.கணேசன் பேசுவதை எப்படிச் சரியென்று சொல்ல முடியும்?

வளர்ச்சித்திட்டங்களுக்கு நான் எப்பொழுதும் எதிரியில்லை. "எல்லோரும் நன்றாக இருப்போம்" என்பதுதான் தாரக மந்திரமாக இருக்க வேண்டுமே தவிர மும்பைவாலாக்களும் உத்தரப்பிரதேசத்துக்காரனும் நன்றாக இருக்க தமிழகத்தின் ஒரு கிராமமோ அல்லது மாவட்டமோ தியாகம் செய்வதில் தவறில்லை என்று பேசுவதாக இருக்கக் கூடாது.

### குரலெழுப்புவதில் தவறில்லை

விவசாய நிலங்களை அழிப்பது, மரங்களை வெட்டுவது, மண்ணை மலடாக்குவது, குடிநீரை காலியாக்குவது போன்ற விளைவுகளை உண்டாக்குமானால் அது எத்தகைய திட்டமானாலும் நாம் நம்முடைய எதிர்ப்புணர்வை பதிவு செய்யத்தான் வேண்டும். தனியார் நிறுவனம் வருமானம் சம்பாதிப்பதற்காக ஒரு கிராமத்தை தொங்கவிட்டால் கிராம மக்களுக்காக குரல் எழுப்புவதில் என்ன தவறு?

வேலை வாய்ப்பை உருவாக்குகிறோம், தொழில்வளத்தைப் பெருக்குகிறோம் என்று காலங்காலமாகப் பேசிப் பேசியே வாழ்வதற்குத் தகுதியற்ற நிலமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். அது எவ்வளவு பெரிய வளர்ச்சியாக இருந்தாலும் பரவாயில்லை. சற்றே பொறுத்திருக்கட்டுமய்யா!

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

# எது வெற்றி?

கேப்பாபுலவு மக்களின் போராட்டம் முடிவுக்கு வந்து இருக்கிறது. விமானப்படையினரால் அத்துமீறி, மார்ச் முதலாம் திகதி பிலக்குடியிருப்பைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. 'பெர்மிட்' உள்ள 42 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்னும் 10 குடும்பங்களுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை. அவர்களுக்கு காணிக்குரிய பெர்மிட் இல்லையென்பதாலேயே அவர்களுக்கான காணிகள் விடுவிக்கப்படவில்லையென்று கூறப்படுகின்றது.

காணி விடுவிக்கப்பட்டதாக அறிவிப்பு வந்ததும், தங்கள் நிலங்களைத் தேடி ஓடிய மக்கள், இத்தனை நாளும் கூட நின்று போராடிய ஏனைய 10 குடும்பங்களின் காணிகளும் விடுவிக்கப்படவில்லை என்றதும் மீண்டும் போராடுவதென முடிவெடுத்தார்கள். "தந்தால் எல்லோரின் காணிகளையும் ஒரேயடியாகத் தாருங்கள். இல்லாவிட்டால் எங்கள் போராட் டம் தொடரும்" என்று கூறி, பழையபடி போராட்டக் களத்தில் வந்தமர்ந்துவிட்டார்கள். பிலக் குடியிருப்பு மீட்புபோராட்டத்தை முடித்துக்கொண்டு, இப்போது கேப்பாபுலவை மீட்கும் போராட்டம் தொடங்கியிருக்கிறது.

ஏதோ கிடைத்ததை இப்போதைக்கு வாங்கிக் கொண்டு போராட்டத்தைக் கைவிடுவோம் என்று கேப்பாபுலவு மக்கள் நினைத்திருந்தால், தங்கள் போராட்டத்தை மார்ச் முதலாம் திகதியோடு முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அவர்கள் தங்கள் முடிவிலும் போராட்டத்திலும் தீர்க்கமாக நிற்கிறார்கள். போராட்டத்தில் ஈடுபடும் ஒரு தொகுதியினரின் காணிகளை விடுவித்தால், அவர்கள் பின்னர் எஞ்சி நிற்போருக்காகக் குரல் கொடுப்பதை விடுத்து, தங்கள் காணிகளைப் பாதுகாப்பதில்தான் கண்ணாக இருப்பார்கள் என்று அதிகாரத்தரப்பு எண்ணியிருக்கலாம். ஆனால் இப்படிக் கிள்ளிப் போட்டு போராடும் மக்களை கூறுபோடும் தந்திரத்தை மக்கள் நன்றாகவே கணித்து விட்டார்கள். இப்போது விடுவிக்கப்பட்ட 42 ஏக்கரோடு திருப்திப்பட்டுக் கொண்டு போராட்டத்தைக் கைவிட்டால், பின்னர் எந்தக் காலத்திலும் ஏனைய 10 குடும்பங்களுக்குமான காணிகள் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியங் கள் இல்லையென்பதை உணர்ந்தே, தங்கள் கலகக் குரலை இன்னும் ஓயவிடாமல் கேப்பாபுலவு மக்கள் உரக்கத் தெறிக்க விட்டிருக்கிறார்கள்.

கட்டம் கட்டமாக விடுவித்தல் என்பது காலங்காலமாக அதிகாரத் தரப்புக் கையாண்டு வரும் தந்திரம் தான். வலி.வடக்கு, பரவிப்பாஞ்சான் எனப் பல பகுதிகளில் படைத்தரப்பு கையகப்படுத்திய காணிகளை ஒரேயடியாக விடுவிக்காமல், கட்டம், கட்டமாகவே அரசு விடுவித்திருந்தது. வலி.வடக்கில் இன்னும் பல பகுதிகள் அடுத்த கட்ட விடுவிப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன. கேப்பாபுலவு, பரவிப்பாஞ்சான் பகுதிகளில் மக்களின் போராட்ட வெம்மையைத் தாங்கமுடியாமல் படைத்தரப்பு தன் பிடியை இளக்குவதை உணர்ந்த வலி.வடக்கு மக்களும் மீண்டும் தம் நிலமீட்புக் குரலை எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். அவர்களும் கிள்ளித் தெளிப்புகளோடு போராட்டக் குணத்தை ஓயவிடாமல் முழுக் காணிகளையும் மீட்கும் வரை தொடர் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். தங்கள் போராட்டம் வென்ற பின்னும், தங்களோடு கூடப் போராடியவர்களுக்கும் வெற்றி கிட்ட வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கும் கேப்பாபுலவு மக்களின் போராட்ட உறுதியை இனிவரும் நில மீட்புப் போராட்டங்களில் ஈடுபடுவோர் மனதில் கொள்ள வேண்டும். போராட்டம் என்பது தனியே உரத்த குரலெழுப்பலும், கூடிக் கலைவதும் அல்ல. அது ஒற்றுமையோடு இறுதிவரை ஓர்மநெருப்பை அணையவிடாது பாதுகாப்பதில்தான் ஒரு போராட்டத்தின் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



வர்சி

# தலைமையற்ற மக்கள் போராட்டம்

கடந்த ஜனதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் எடுத்த முடிவு. தமது சம்பள உயர்வுக்காகத் தாங்களே போராட்டத்தை நடத்த புறப்பட்ட மலையகம். பொதுபல சேனாவின் அராஜகத்திற்கெதிராகப் போராடப் புறப்பட்ட கிழக்குமாகாண மக்கள் எனப் பல தலைமையற்ற மக்கள் போராட்டம் நடைபெற்றிருக்கின்றன. அவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டவையல்ல. அவை சுயமாகத் தோன்றியவைகள். அதன் வழியே தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் தமது நிலங்களை ஆக்கிரமித்துள்ள அரச படைகளுக்கெதிராகத் தலைமையற்ற ஒரு மக்கள் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்த மக்கள் போராட்டம் வெற்றியளித்துள்ளதாகச் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

அந்த மக்களின் தொடர் போராட்டத்தை அடுத்து, கிளிநொச்சி பரவிப்பாஞ்சானிலும், முல்லைத்தீவு கேப்பாபுலவிலும், புதுக்குடியிருப்பிலும் உள்ள அவர்களது காணிகளை விடுவிக்க அரசும், இராணுவமும் முன்வந்துள்ளதாக தினசரிகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அத்துடன் காணி விடுவிப்புத் தொடர்பில் அரசு, இராணுவம், அரச அதிகாரிகள் ஆகியோர் வழங்கிய வாக்குறுதிகளை மக்கள் நம்பத் தயாரில்லை என்ற நிலையில், தமது போராட்டங்களில் அவர்கள் எவரும் கலந்துகொள்ளக் கூடாதெனவும் மக்கள் தெரிவித்திருந்தனர். மாறாக, "தமது நிலத்திற்குள் தம்மை குடியேற அனுமதித்தால் மட்டுமே போராட்டம் நிறுத்தப்படும்" என அவர்கள் உறுதியாக நின்றதனால், வேறு வழியில்லாமல் அவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அப்படியாயின் யுத்தம்முடிந்தநிலையிலும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்தும் போராட்டைத்தை நடத்த வேண்டுமா? அப்படித் தமிழ் மக்கள் தமக்குரிய ஒவ்வொன்றையும் போராடித்தான் பெற வேண்டுமெனில், நாட்டில் ஜனநாயகம் என்பது நகைச்சுவைக்குரிய விடயமாகாதா?

ஆரம்பத்தில் தமிழரின் உரிமைகள் திட்டமிட்டு பறிக்கப்பட்டதனாலேயே அகிம்சை வழியிலான போராட்டத்தைத் தந்தை செல்வா கையிலெடுத்தார். அவருடன் செய்து கொண்ட பல ஒப்பந்தங்களை அரசு கிழித்தெறிந்தது வரலாறு. பேரினவாத அரசுடன் அகிம்சை வழி பயனற்ற நிலை எனக் கண்ட பின்னரே பிரபாகரனும் ஆயுதத்தைக் கையிலேடுத்தார்..

ஆனால் அந்த ஆயுதப்போராட்ட காலங்களிலும் பல சமாதான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு காணாமல் போயின. ஆயுதப் போராட்டமும் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளைக் கண்டது. இறுதியில் உலக நாடுகளின் துணையோடு முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையிலே தமிழர் பிரச்சனை இன்னமும் தீர்க்கப்படாமலே இருக்கின்றது.

கடந்த முப்பது வருட காலத்திற்கு மேலாகப் போரால் இடம்பெயர்ந்த மக்கள் சொத்தை இழந்துள்ளனர். தமது சுகத்தை இழந்துள்ளனர். உற்றார்,உறவினர் பலர் இறந்துபோக எஞ்சியவர் பலர் காணாமல் போயிருந்தனர். அவர்களில் பலர் காணாமலாக்கப்பட்டுமுள்ளனர்.

முடிவில் சரணடைந்தவர்கள் வவுனியாவிலுள்ள திறந்தவெளிச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு பின்னர் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர். குடியேற அவர்கள் தங்கள் சொந்த நிலத்திற்குச் சென்றபோது அவர்கள் நிலங்கள் அரசபடைகளினால் ஆக்கிரமிப்புக்குள்ளானது கண்டு, கேட்டபோது அவை அனைத்தும் தங்களுக்குரியதொன அவர்கள் வாதிட்டனர். மக்களை பயமுறுத்தினர். அவர்களை உள்ளே வரக் கூடாதென்றனர். வந்தால் சுடப்படுவீர்கள் என அறிவிப்பு பலகை ஒன்றையும் முட்கம்பி வேலியில் தொங்கவிட்டிருந்தனர். இந்த நிலையிலேயே கடந்த எட்டு

(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK



# காத்திருந்து காத்திருந்து...!

சிக்மலிங்கம் ரெஜினோல்ட்

பொங்கல் என்றாலே வாய் இனிக்கிறது. ஆனால், அந்த இனிப்பை வாயில் போட்டுக்கொள்வதுதான் ரொம்பக் கடினம் பாரதிக்கு. போருக்குப் பிறகு, நான்கு ஆண்டுகளாக பொங்கலைத் தவிர்த்து வந்தாள். “எங்கள் வீட்டில் பொங்கல் கிடையாதா அம்மா?” என்று பிள்ளைகள் கேட்டபோது, அவர்களுக்கு என்ன பதிலைச் சொல்வதென்று தெரியவில்லை. பிள்ளைகளை வாரியணைத்துக் கொண்டு ஒரு கணம் விம்மினாள். அதற்கு மேல் என்ன செய்ய முடியும்? அக்கம் பக்கமெல்லாம் பொங்கலுக்காகக் களைகட்டும் போது தங்கள் வீட்டில் மட்டும் பொங்கல் இல்லையென்றால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? அதனால், அடுத்த ஆண்டு பொங்கியே ஆகவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாள் பாரதி.

வன்னி - இறுதிப்போரிலே அவளுடைய கணவன் காணாமல் ஆக்கப்பட்ட பிறகு அவள் பொங்கலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதைப் பற்றிச் சிந்திக்கும் நிலையிலும் அவள் இல்லை. கணவனைத் தேடிக்கொண்டிருக்கும் போது, அவரைப் பற்றிய எந்தத் தகவலுமே கிடைக்காதபோது, அவர் இல்லாத போது எப்படிப் பொங்குவது?

ஆனால், இனிக்கிற மாதிரி வாழ்க்கை இல்லாவிட்டாலும் இனிப்பைத் தேடும் மனதை விட்டுவிட முடியுமா? பிள்ளைகளின் மனம் இனிப்பையே தேடிக் கொண்டிருக்கிறது. இளங்கன்றுகள் எதைத்தான் அறியும்? அவள் கூட இளைய வயதில் இனிப்பை மட்டுமே தேடியவள். முல்லைத்தீவுக்குக் கிழக்கே இருக்கும் குமுழமுனை என்ற சின்னஞ் சிறிய கிராமத்தில் அவளுடைய பொங்கல் நாட்கள். வீடும் சுற்றமும் என இனிப்பாகவே இருந்தன.

பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே வீட்டை ஒழுங்குபடுத்தத் தொடங்கி விடுவா அம்மாச்சி. வேலியையும் வளவையும் சீர்ப்படுத்திப் புதிதாக்கி விடுவார் ஐயா. வருவது தை அல்லவா! மாரி மழையில் புதிதாகத் துளிர்த்திருக்கும் செடிகள் தையை வரவேற்கிற மாதிரியே செழித்துப் பூத்திருக்கும். வயலில் கதிர்கள் முற்றிச் சரியத் தொடங்கும். வயலும் வீடும் என்றிருக்கும் ஐயா பொங்கலுக்காகப் பின்னேரங்களில் வேலையோடே வீட்டுக்கு வந்துவிடுவார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேலை. மண்ணில் அடுப்புகளைப் பிடித்துக் காய வைப்பது, மாட்டுப்பட்டியை துப்புரவாக்குவது, எருதுகளுக்கு கழுத்துச் சலங்கைகளை புதிதாக்கிக் கட்டுவது, சந்தைக்குப் போய்ப் புதுப்பானை, பாத்திரங்கள், பட்டு, பழம், பாக்கு வெற்றிலை, புதிய உடுப்புகள் (புத்தாடைகள்) வெடிப் பெட்டிகள் (பட்டாசு) எல்லாம் வாங்கி வருவது என்று ஆயிரம் வேலைகள். இவை மட்டுமா, தோட்டத்தில் கரும்பு, இளநீர், தேங்காய் எனக் கொண்டு வருவது இன்னொரு வேலை. இதைவிட வீட்டில் எந்த நாளும் தயிர் இருந்தாலும் பொங்கலுக்காக தயிர் போடுவது அம்மாவின் விசேடம். நெய், தேன் வேறு. பொங்கல் என்றால் சும்மாவா? அதிலும் தைப் பொங்கல் என்றால்? தமிழர் திருநாள் அல்லவா! என்பதால் வாரமாக வீடே குதூகலிக்கும். வீடு மட்டுமா, ஊர், தெரு, சந்தை எல்லாம்தான்.

அந்த அளவுக்கு ஈழத்தில் தைப் பொங்கல் எல்லா மக்களிடமும் நிறைந்த கொண்டாட்டம். சூரியனுக்கு விவசாயிகள் காணிக்கை செலுத்தி வணங்கும் நாள் என்று சொல்லப்பட்டாலும் தமிழர்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள்கூட அதைக் கொண்டாடினார்கள். எல்லா வீடுகளும் அந்த நாட்களில் குதூகலித்திருந்தன. பொங்கல் பானையும் கரும்பும் தேனும் நெய்யும் நிறைந்த முற்றங்களே எங்குமிருந்தன. பட்டாசுகள் வெடிக்கும் சத்தமே ஊரில் நிறைந்திருந்தது. ஆட்டமும் பாட்டமும் விருந்தும் கொண்டாட்டமும் என்று நாளே இனித்தது. தைப்பொங்கல் முடிந்தால் மறுநாள் பட்டிப் பொங்கல். உழவுக்கு, உழவர்களுக்கு துணையாக இருக்கும் மாடுகள், பாலையும் எருவையும் தரும் பசுக்கள் எல்லாவற்றுக்கும் மரியாதை செலுத்தும் விதமான பொங்கல். மாடுகளுக்குக் குளிப்பாட்டி, மாலை அணிவித்து, பட்டியையும் மாடுகளையும் அலங்கரித்து நடத்தும் பொங்கல். ஊர்களே அலங்காரத் தோரணத்தின் கீழ்தான் இருந்தன.

எல்லாம் யுத்தம் வராத வரைதான். 1983 இன வன்முறையோடு நாடு தலைகீழாயிற்று. அதற்குப் பிறகு பட்டாசுச் சத்தத்திற்குப் பதிலாக துப்பாக்கிச் சத்தங்களே கேட்டன. ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் புதல்வர்களும் புதல்விகளும் “சொல்லாமற் போனார்கள்” பிள்ளைகள் இல்லாத வீடுகளில் பொங்கல் எதற்கு? கொண்டாட்டம் எதற்கு? என்றாயிற்று நிலைமை. மெல்ல மெல்ல வீடுகள் துயரில் உறைய, ஊர்களும் இருளில் உறைந்தன. யுத்தம் வளர்ந்து கொண்டிருந்தது. முட்காடாக அது வளர வளர, ஊர்களை விட்டுப் பெயர்ந்த மக்கள் மரநிழல்களிலும் பள்ளிகளிலும் அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்தனர்.

முற்றத்தை இழந்த பின் எப்படிப் பொங்குவது? எங்கே பொங்குவது? பொங்கல் ஏறக்குறைய செத்துப்போயிற்று என்ற நிலைதான். எங்காவது சில வீடுகளில் சம்பிரதாயமாக எந்தவிதமான குதூகலங்களும் இல்லாமல் பொங்கிக் கொண்டார்கள். பட்டாசோ, கரும்போ கிடையாது. அப்படிப் பொங்கினாலும் மனதில் அதன் சங்கடம் குற்றவுணர்வாகவே உறுத்திக்கொண்டிருக்கும். பொதுவில் 80 களின் பிறகான பெரும்பாலான குழந்தைகளுக்கு முற்றம் தெரியாது. பொங்கலும் பண்டிகைகளும் தெரியாது. என்றாலும் இடையில் தலைநீட்டிய போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை போன்ற இடை அமைதிக் காலங்களில் பொங்கல் மெல்லத் துளிர்க்கும்.

2002 இல் அப்படித்தான் ரணில் - பிரபாகரன் உடன்படிக்கையை அடுத்து வந்த போர் நிறுத்தக் காலத்தில் ஒரு பொங்கல் நடந்தது. அப்பொழுது புலிகளில் பலவிதமான போக்கை உடையவர்கள் துலக்கமடையத் தொடங்கினார்கள். ஒரு சாரார் தமிழ் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் திருநாள் - தமிழரின் திருநாள் - என்பது தைத்திருநாளே என்று தைப் பொங்கல் நாளைக் கொண்டாடினர். இதற்காக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பில் சிறப்பாக அமைக்கப்பட்ட முற்றத்தில் பொங்கல் நடந்தது. இது வழமையான பொங்கல் அல்ல. தமிழர்களின் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் புதுப்பிக்க வேண்டும் என்ற பிரகடனத்தோடு இறைச்சி வகைகளை பானையிலிட்டு பொங்கல் நடந்தது.

தமிழர்களின் இசை என பறையும் உடுக்கும் முழங்கின. புலிகளின் தளபதிகளில் சிலரும் பொறுப்பாளர்களில் சிலரும் இந்தப் பொங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். பொங்கலை அடுத்து அதைப் பற்றிய ஒரு விளக்க அரங்கும் சில கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. இந்த மாதிரிப் பொங்கல் செய்வதை அனுமதிக்கலாமா? இது சரியானதா? என்ற வாதப்பிரதிவாதங்கள் கிளம்பத்தொடங்கின. பொங்கல் பானையில் இப்படி இறைச்சியைப் போடலாமா? இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அபிப்பிராயங்கள் அன்றே இன்னொரு பக்கத்தில் எழுந்தன. எங்கும் குழப்பம். இது நடந்தது பகலில். இரவு, இந்தப் பொங்கலைப் பற்றி தலைவர் பிரபாகரன் விசாரணைக்கு உத்தரவிட்டார். அந்தப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டவர்கள் தங்களின் தலைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. பின்னர் இரு தரப்பாரும் சமாதானமாகினர். அத்துடன் அந்தப் பொங்கல் முடிந்தது. ஆனால், வன்னிக்கு வெளியே யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் வழமையான பொங்கல் சுமாராக நடந்தது.

இறுதிப்போர் மூண்டது. நாங்கள் கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து தருமபுரத்திலிருந்தோம். அகதிகளால் நிறைந்திருந்தது தருமபுரம். 2009 ஜனவரி 13. மறுநாள் பொங்கல். அந்த நினைவே யாருக்கும் இல்லை. பெரும்பாலானவர்கள் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தனர். வேறு கதியின்றி வயல் நிலப் பகுதிகளில் குடிசைகளை அமைத்திருந்தவர்களை மாரி மழையின் வெள்ளம் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த நிலையில் தான் அன்று மதியம் தருமபுரத்தை நோக்கி வந்தன எறிகணைகள். வந்த நான்கு எறிகணைகளில் மூன்று சனங்களின் குடியிருப்பில் விழ எங்களின் குடிசைக்கு அண்மையாக ஆறு பேர் சிதறி மாண்டனர். 2009 பொங்கல் யாருக்குமே அமையவில்லை.

போர் முடிந்த பிறகு, மீள்குடியேற்றத்தின் மூலம் ஊர் திரும்பினாலும் யாரும் பொங்கல் செய்யக் கூடிய நிலையில் இருக்கவில்லை. வீடுகளும் முற்றங்களும் இரவல் போலவே இருந்த நிலை. யுத்தத்தின் வடுக்கள் எளிதில் ஆறிவிடுவதில்லை அல்லவா! ஆனாலும் காலம் எந்தக் காயத்தையும் ஆற்றி விடும் பெரு மருத்துவனாயிற்றே. இனிக்கிற மாதிரி வாழ்க்கை இல்லாது விட்டாலும் இனிப்பைத் தேடும் மனம் பொங்கல் பானையை முற்றத்தில் வைக்கத் தூண்டுகிறது. அதுதானே இயல்பும் யதார்த்தமும். கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பொங்கல் கொண்டாட்டங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. சந்தைகளும் தெருக்களும் வீடுகளும் களை கட்டுகின்றன. பட்டாசுகளை வெடிக்க வைக்கும் பிள்ளைகளின் முகத்தில் தெரிவது, தன்னுடைய இனிப்பான காலமே என்று தெரிகிறது பாரதிக்கு.

இதுவரையும் பொங்காமல் விட்டது கணவருக்காக. இனிப் பொங்குவது பிள்ளைகளுக்காக.

இது பிள்ளைகளின் உலகம். நாளைய நாட்கள் அவர்களுடையவை, அவர்களுக்கானவையல்லவா! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுவிக்கப்பட்டும் விடிவில்லை

## பரவிப்பாஞ்சான் மக்களின் நிலை

- அகரன்

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய சந்திப்பு மையமாக ஒருகாலத்தில் விளங்கியது கிளிநொச்சி - பரவிப்பாஞ்சான் பகுதிதான். தலைவர் பிரபாகரனும் உயர்மட்டத் தலைவர்களும் இராஜதந்திர, உயர்மட்ட சந்திப்புகளுக்கு இவ்விடத்தினையே பயன்படுத்தி வந்தனர். அப்பகுதியிலுள்ள மக்களின் காணிகளையும், வீடுகளையும் அவர்களின் சம்மதத்துடன் தமது பாதுகாப்புத் தேவைகளுக்காகப் புலிகள் பயன்படுத்தியிருந்தனர். மக்களும் " எங்களுக்காக போராடுற எங்கட பெடியளுக்காக இது கூட செய்யாட்டி தமிழனா இருந்து என்ன பிரயோசனம்?" என்ற எண்ணத்தோடு தமது பகுதிகளை புலிகளின் பயன்பாட்டுக்காக வழங்கி இருந்தனர்.அவ்வேளையில் மக்களின் வாழ்வாதாரம் பாதித்து விடாமல் இருப்பதற்கு மாற்று வழியாக தற்காலிக வீடுகளையும் புலிகள் அவர்களுக்கு அமைத்தும் கொடுத்திருந்தனர்.

### காணியை விழுங்கிய ஆமி

இறுதிப்போரின் போது, 2009 இல் வன்னிநிலப்பரப்பு முழுவதும் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் சிக்கியது. இதன்போதே வன்னி முழுவதிலுமுள்ள விடுதலைப்புலிகளினால் பயன்படுத்தப்பட்ட காணிகளை இராணுவம் கைப்பற்றிக் கொண்டதோடு அதனைச் சூழவுள்ள மக்களின் காணிகள், வீடுகள் என்பனவற்றையும் இராணுவத்தினர் தம்வசப்படுத்திக் கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்திலேயே விடுதலைப்புலிகளின் தலைவர் உட்பட முக்கிய தளபதிகள் சந்திப்புக்களை மேற்கொள்ளும் இடமாக விளங்கிய பரவிப்பாஞ்சானையும் இராணுவம் தம்வசப்படுத்திக் கொண்டது.

### விடுவிக்கப்படாத பிரபாகரனின் வீடு

யுத்தத்தினால் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பரவிப்பாஞ்சானிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். கடந்த 8 ஆண்டுகளாக பரவிப்பாஞ்சானை இராணுவமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. இதனால் அதிருப்தியடைந்த அப்பகுதியைச் சோந்த மக்கள் தமது காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறுபட்ட போராட்டங்களை பல்வேறு கட்டங்களாக மேற்கொண்டுவந்தனர். இந்நிலையிலேயே இராணுவம் மூன்று கட்டங்களாக பரவிப்பாஞ்சானில் காணிகளை விடுவித்துள்ளது. அதன் முதற் கட்டமாக மைத்திரியின் ஆட்சி வந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் எழரை ஏக்கர் காணியையும்; 2016 ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் நான்கரை ஏக்கர் காணியையும் தற்பொழுது 2017ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் இப்பகுதி மக்கள் ஐந்துநாட்கள் மேற்கொண்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து ஒன்பதரை ஏக்கர் காணியையும் இராணுவம் விடுவித்துள்ளது. இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முக்கிய கலந்துரையாடலுக்காக பயன்படுத்துகின்ற வீடு இன்னும் விடுபடவில்லை. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அதுவும் விடுவிக்கப்படும் என அந்த வீட்டின் உரிமையாளருக்கு இராணுவம் உறுதியளித்துள்ளது.

### கையளிக்கப்பட்ட பகுதி இப்போது என்ன நிலையில்..?

கடந்த 8 ஆண்டுகளாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேதான் சிக்குண்டிருந்தது பரவிப்பாஞ்சான். இதனால் இராணுவ நிழல்களே அங்கு நிறைந்திருந்தன. எங்கு திரும்பினாலும் பச்சை நிறமே காட்சியளித்தது. மக்களின் காணிகளுக்கு இருந்த எல்லைகளை இராணுவத்தினர் பிடுங்கி ஒரே காணியாக்கி, முகாம்களை படையினர் அமைத்திருந்தனர். முகாம்களைச் சுற்றி பச்சைத் தகரங்களைக் கொண்ட வேலிகள் உயர எழுந்து , உள்ளே நடப்பவற்றை மறைத்திருந்தன. இப்போது படையினர் அங்கிருந்து அகன்ற பின்னர் ஆக்கிரமிப்பின் சின்னமான அந்த வேலித் தகரங்கள் பரவிப்பாஞ்சானில் இருந்து காணாமல் போய்விட்டன. ஆனால் மக்களின் காணிகளிலிருந்த கிணறுகளைப் படையினர் மூடியுள்ளனர். இதனால் தண்ணீர் வசதி இல்லை .அதேவேளை மலசலகூடங்களையும் இராணுவம் விட்டுவைக்கவில்லை. போரில் சிதைந்த அடையாளங்களோடும் அடிப்படை வசதிகளை இழந்தும் நிற்கிறது பரவிப்பாஞ்சான்.

"ஆமி காணிய விட்டிட்டான். இனியாவது நிம்மதியா எங்கட காணீயில இருக்கலாம் எண்டு வந்தம்.ஆனா இங்க குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கு. எங்கட கிணறுகளையும் இராணுவம் மூடிப்போட்டுது. ரொயிலெட்டுக்களையும் இடிச்சிட்டாங்கள்.மின்சார வசதிகளும்.இல்லை. புதிசா மின்சாரம் எடுக்கிறதெண்டால் 21 ஆயிரம் ரூபா தேவை. இப்ப எங்கட வசதிக்கு அது முடியாத காரியம். இப்பதான் காணியை அளந்து சுற்றிவர வேலி போட்டு, கம்பி அடிக்க ஒண்டரை இலட்சம் ரூபா முடிஞ்சது. அதுவும் எல்லை போட வேண்டும் என்ற அவசரத்தில் கடன் பட்டு போட்டோம். இங்க நிண்ட மரம் ஒன்றைத் தறிப்பதற்கு 15 ஆயிரம் ரூபா கொடுத்து தறித்தோம். இதற்கே எங்கட பணம் எல்லாம் செலவாகிவிட்டது." என்று துயர் சுமக்கும் குரலை பகிர்கிறார்கள் பரவிப்பாஞ்சான் மக்கள்.


### எரிகுண்டில பொசுங்கிய காணி ஆவணங்கள்

" இறுதி யுத்தத்தில நாங்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தோம். அந்தநேரம் அகோரமானஷெல் தாக்குதல். ஒரு கட்டத்தில புதுமாத்தளனில நாங்கள் தங்கியிருக்கும் போது இராணுவம் எரிகுண்டு அடிச்சிது. அதில என்ர அம்மாவும் அப்பாவும் சம்பவ இடத்திலேயே இறந்திட்டினம். அப்போது நாங்கள் கொண்டு போன உடமைகளும் ஆமிக்காரன் போட்ட எரிகுண்டில எரிஞ்சு போட்டுது. அதில இந்த காணி ஆவணமும் இருந்தது. நான் அதைப் பாதுகாக்கிறதோ? இல்லாட்டி என்ர அப்பா அம்மாவை பாக்கிறதோ? அத்தோட என்ர அண்ணான்ர மகன் ஒருவரும் இறந்திட்டார். அதுமட்டுமில்ல திருகோணமலையில் என்ர என்னொரு அண்ணனும் 2007 இல் இனந்தெரியாத ஆக்கள் சுட்டு செத்திட்டார். இப்பிடி ஒரே இழப்புத்தான். நாங்கள் போட்டிருந்த உடுப்பும் பிள்ளைகளும்தான் எங்களுக்கு மிச்சம். போரில இருந்து மீண்டும் மீளாமலும் இருக்க, இப்ப காணியை எங்கட தானெண்டு உறுதிப்படுத்த ஆவணத்தைக் கொண்டு வா எண்டு அதிகாரிகள் குடைச்சல் குடுக்கினம்." என்று பெண் ஒருவர் சாமி வரம் கொடுத்தும் பூசாரிகள் வழிமறிக்கும் விடயத்தைப் போட்டுடைத்தார்.

### தடைபோடுகிறாரா பிரதேச செயலர்?

பரவிப்பாஞ்சான் மக்களினால் 5 நாட்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தால் படைத்தரப்பு தன் இரும்புப்பிடியை மக்கள் காணிகளில் இருந்து தளர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக படைத்தரப்பு அதிகாரிகளும், கிளிநொச்சி அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரும் இவ்விடயம் தொடர்பாக நீண்ட நேர கலந்துரையாடலொன்றினை மேற்கொண்டனர். கலந்துரையாடலின் முடிவில் இராணுவம் தம்வசமிருந்த ஒன்பதரை ஏக்கர் காணியினை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்தது. இருந்தபோதிலும் பிரதேச செயலரினால் மக்களின் காணிகள் அடையாளப்படுத்துமிடத்தே அவர்களிடம் காணிகள் ஒப்படைக்கப்படும் என இராணுவத்தினர் உறுதியளித்திருந்தனர். இதன்போதுதான் காணிகளின் ஆவணங்கள் தொடர்பில் அப்பகுதி மக்களுக்கும், பிரதேச செயலருக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றின. யுத்தத்திலே ஆவணங்களை மக்கள் தொலைத்துவிட்டார்கள் என்று தெரிந்தும் பிரதேசசெயலர் தங்களிடம் ஆவணங்களைக் கேட்டு

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்காட்டிகள் கத்தியபடியிருக்கின்றன

யதார்த்தன்

கேப்பாபுலவு போயிருந்தேன். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது அந்த மக்களின் போராட்டம் வெற்றி பெற்ற செய்திகள் வந்தபடியிருந்தன. எனினும் நான் அங்கு கண்ட வாழ்வையும் போராட்டத்தையும் எழுத வேண்டும் போல் இருந்தது. ஏன் அந்த மக்கள் தங்கள் நிலத்தைக் கேட்கின்றார்கள். வேறு நிலத்தில் ஏன் அவர்களின் வாழ்வை அமைக்க முடியவில்லை. "இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இயற்கைக்கும் கேப்பாபுலவு மக்களுக்கும் இடையே பெரும் தொடர்பு இருக்கிறது" என்பதே பதில்.

நாங்கள் அங்கு போனபோது பெரிய முட்கம்பி வேலிக்கு எதிரில் கொளுத்தும் வெயிலில் கொட்டகைக்கு கீழும் மரத்திற்கு கீழும் மக்கள் குழுமியிருந்தனர். இராணுவத்தினர் துப்பாக்கி ஏந்தியபடி, கைகளில் கமெராக்களால் எங்கள் பக்கம் சுட்டுத்தள்ளிக் கொண்டிருந்தனர். மதிய உணவு பாலை மரத்தின் கீழ் தயாராகிக் கொண்டிருந்தது. நந்திக் கடலின் பின்னணியில் பெரும் காடும் நிலமும் உறைந்து போய்க் கிடந்தன. உத்தரித்து அடங்கிப் போன பூமியின் கனதி அது.

போராட்டக்காரர்களுடன் உரையாடிய பின்னர் அவர்களில் இரண்டு இளைஞர்கள் எங்களை காட்டுக்குள் கூட்டிப்போனார்கள். நந்திக் கடலோரம் நடந்தோம் கடற்கரை சதுப்பு நிலம் பாளமாய் வெடித்துப் போயிருந்தது. இராணுவ எல்லைக்குள் பயமின்றி நுழையும் பட்டி மாடுகளை ஆமிக்காரர்கள் விரட்டிக் கொண்டிருந்தார்கள். கடந்து கடற்கரைக்கு இறங்கினோம்

ஆமை சென்ற தடங்களை அந்த இளைஞர்கள் எங்களுக்கு காட்டினார்கள். ஆமைகளின் பாதைகளை மறித்து நிலத்தில் ஷெல் கோதுகள் கிடந்தன. போர் உக்கிரமாக நடந்த இடங்கள் அவை. மக்களின் நிலங்கள் எங்கும் ஷெல் கோதுகள். மரங்கள் பாறி விழுந்து கிடந்தன. வீதியோரங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் ஏராளம் பெருமரங்கள் பாறிக்கிடந்தன. காட்டுக்குள் இறங்கி நீர் நிலைகளை கடந்து நடந்தோம். கேப்பாபுலவை சேர்ந்த இளைஞர்கள் இருவரும், ஆமை சுரிகளை சோதித்தார்கள். ஆமைகள் இருக்கும் என்றார்கள்.

எங்களுக்கு ஆமைகள் பிடிப்பது பற்றி விளக்கினார்கள். ஆச்சரியமாக கேட்டுக் கொண்டிருந்தோம். காடும் கடலும் சந்திக்கும் அந்த நிலத்தின் உயிரிகளை அவர்கள் மிக நுட்பமாகப்புரிந்து வைத்திருந்தார்கள். காடுகளின் இடையில் ஓடும் பெரு வாய்க்கால்களின் கரைகளில் முதலைகள் புரண்டு இறங்கின. எங்களுக்கு முதலைகளை சட்டென்று பார்க்க இயலவில்லை, அவர்களுக்கு சட்டென்று முதலைகள் தெரிந்தன. அவர்கள் காட்டிய பிறகே அங்கே முதலைகள் இருப்பதைக் கண்டு கொண்டோம். காடு அமைதியாகக் கிடந்தது, நீர் நிலைகளில் இறால்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அவை லேசாக நீரின் மேல் துள்ளுவதைப் பார்த்தே இறால்கள் பற்றிச்சொன்னார்கள்.

அவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம், காட்டின் வேட்டையைப் பற்றிச் சொன்னார்கள். தேன் எடுப்பது, விறகு வெட்டுவது என்று காடு அவர்களுக்கு மிக நெருக்கமாயிருந்ததைப் பார்க்க முடிந்தது. கடலைக்காட்டி அங்கே தொழில் செய்வதைப் பற்றிச் சொன்னார்கள்.

கடற்கரையில் ஆக்காட்டிகள் தொடர்ச்சியாகக் கத்தியபடி இருந்தன. கொக்குகள் "வெடுக் வெடுக்"கென பறந்து சென்றன. இராணுவ நிலைகளின் பக்கமே அவை கத்திக்கொண்டு பறந்தன. அந்நியத் தன்மை எதையோ அவை உணர்ந்திருக்க வேண்டும்.

காட்டையும் கடலையும் பயிர் நிலத்தையும் கடந்து வந்தபின்னர், போராடும் அக்காக்களும் அம்மாக்களும் எங்களுக்கு மதிய உணவைப் பரிமாறினார்கள். நண்டும், மீனும், இறால் கறியும். அவர்கள் ஒவ்வொருத்தர் முகத்திலும் களைப்பும் உற்சாகமும் படிந்து கிடந்தன.

காடுகளுக்கும் கடலுக்கும் போய் வந்த பிறகுதான் எங்களுக்கு அவர்களின் போராட்டத்தின் இதயம் புரியத் தொடங்கியது. சொந்த நிலம் என்பது அந்த நிலத்தின் குழந்தைகளுக்கு எல்லாமுமாக இருக்கின்றது.

கேப்பாபுலவு மக்களுக்கு கடலும், காடும் விளைநிலமுமே ஆதாரம். கேப்பாபுலவு ஆவணமாக்கலின் போது பதிவு செய்யப்பட்ட குரல்களைக் கேட்டேன். ஒவ்வொரு குழந்தைகளும், ஒவ்வொரு பெண்ணும் தங்களின் வீடுகளை இயற்கையின் பெயரிலேயே ஞாபகம் வைத்திருந்தனர். வீட்டில் நின்ற மரமும், தோட்டமும் துரவுமே அவர்களின் ஞாபகமாக நிறைந்திருந்தது. போர் அரக்கன் அவர்களின் வீட்டையும் மரத்தையும் காணியையும் பிடித்துக் கொள்ள முதல், அங்கிருந்து மக்கள் விலக்கிச் செல்ல முதல் அவர்களின் ஞாபகங்கள் அனைத்திலும் மரங்களும் நிலக்காட்சியுமே கிடந்தன. குழந்தைகள் கீறிய படங்கள் பசுமையான மரங்கள் வீடுகளுக்கு மேலாக வளர்ந்து நின்றன. வீட்டின் அருகே இருக்கும் கடல் அவர்களின் படங்களில் அலைந்தபடியிருந்தது.

கொஞ்சம் வளர்ந்தவர்கள் கூட வீட்டையும் நிலத்தையும் இயற்கையின் பெயரிலேயே ஞாபகம் வைத்திருந்தனர். அரசு தந்த வெளிகள், புது வீடுகள் எதுவும் அவர்களுடன் ஒட்டவில்லை. அவர்களின் இதயம் சொந்த நிலத்திலேயே துடித்துக் கொண்டிருந்தது. தொலைவாக்கப்பட்ட கடலையோ, காட்டையோ, நிலத்தையோ அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக வில்லை.ஏற்கவும் முடியாது. இரண்டு இளைஞர்கள் காட்டையும் கடலையும் புரிந்து வைத்திருந்த விதமே எங்களை அவ்வளவு ஆச்சரியம் செய்தன.

ஒட்டு மொத்த மக்களும் எவ்வளவு அந்த நிலத்தினை புரிந்து வைத்திருப்பார்கள். அவர்களை அந்த நிலம் பட்டினியால் சாக விடாது. அந்த நிலம் அவர்களின் வாழ்வின் ஆதாரமாக இருக்கின்றது.

விவசாயம், பட்டிமாடுகள் என்று வயல் நிலங்களுக்கு நெருக்கமாக இருக்கும் கேப்பாப்புலவு கிராமத்தின் உணவு மூலாதாரம் ஒரு சாராருக்கும், கடல், மீன்பிடி என்பன இன்னொரு சாராருக்கும் முக்கியமாக இருந்தன. பல மாதங்கள் முகாம் வாழ்வில் அல்லல் பட்ட பிறகு ஆவலோடு ஊருக்கு திரும்பியவர்களுக்கு எதிரே முட்கம்பிகள் எழும்பி நின்றன. வேறு ஒரு நிலம் அவர்களின் கிராமம் என்று சொல்லி கொடுக்கப்பட்டது. அவர்களின் கூட்டு மனத்தினால் அதனை நினைத்தும் பார்க்க முடியவில்லை. அவர்களால் தொழில் செய்ய முடியவில்லை, அவர்களால் உணவை பெறமுடியவில்லை, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அந்நிய நிலத்தில் நடப்பது போல உணர்வு இருந்தபடியே இருந்தது. அதுதான் அவர்கள் ஒரு சனநாயக போராட்டத்தில் இறங்குவதற்கான அடிப்படையைக் கொண்டு வந்தது.

நிலமெல்லாம் அந்நிய சப்பாத்துக்கள் உலவுகின்றன. போர் முடிந்தபின்னர் மக்கள் இயற்கைக்கு திரும்பும் போது அவை அவர்களை மறிக்கின்றன. பாம்புப் புற்றுகளை வீட்டில் வைத்து கொண்டு யாரும் நிம்மதியாக உறங்க முடியாது. பறவைகளும் மாடுகளும் நாய்களும் கூட அந்த அந்நிய முகங்களையும் முள்வேலிகளையும் உணர்ந்து கொண்டன. கேப்பாபுலவில் மட்டுமல்ல தமிழர் பிராந்தியங்கள் எங்கும் இந்த நிலை இருக்கின்றது.

இனிவரும் சனநாயக போராட்டங்களின் மூலம் நிலம் மீட்டு இயற்கை வாழ்விற்கு திரும்ப நினைக்கும் மக்களிற்கான பெரும் செய்தியை கேப்பாபுலவு நிலமீட்பு வெற்றி சொல்லுகின்றது. எல்லா மக்களுக்கும் முழு உரித்துடைய இயற்கை வாழ்வு காத்திருக்கின்றது.

அங்கே இன்னும் ஆக்காட்டிகள் கத்திக் கொண்டேயிருக்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
ஆன்ம பலம். புதிய ஏற்பாடு. உண்மை நிலை. ஆரோக்கியம். சமூக சிந்தனை.

**ரிஷபம்**
நினைத்த காரிய சித்தி. பக்குவநிலை. உறவு விருத்தி. கோபம். ஜெயம்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசை நிறைவு. உறவு சேர்தல். மனைச் சிறப்பு.

**கடகம்**
வாக்கு வசீகரம். சம நிலை. காரிய சித்தி. கனவு பலிதம். புதிய முயற்சி.

**சிம்மம்**
தெய்வ அனுகூலம். மனை விருத்தி. எதிர்ப்பாலால் சஞ்சலம்.

**கன்னி**
ஆன்ம பலம். யாத்திரை. பயிர் பலிதம். உயர்வு நிலை. கல்வி விருத்தி. காரிய சித்தி.

**துலாம்**
வீண் விரயம். சுகக் கேடு. உறவால் உதவி. சிந்தனை. பயம். தொழிலின்மை.

**விருச்சிகம்**
புதிய தேடல். கனவு பலிதம். எழுத்தால் மகிழ்ச்சி. பணிவு. தியானம். துயரம்.

**தனுசு**
பொருள் வரவு. காரியத்தடை. நண்பரால் கவலை. சிந்தனை.

**மகரம்**
தியானம். துயரம். தனித்துவிடப்படல். புதிய முயற்சி. தேடல்.

**கும்பம்**
மனைச் சிறப்பு. மக்கள் வித்யா விருத்தி. பலனற்ற விரயாசம்.

**மீனம்**
அதிகாரப்போக்கு. அரவணைப்பு. தொழில் மந்தம். காதல். தொழில் சிறப்பு.




த .அஜந்தகுமாரின் "அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்" எனும் கவிதை தொகுதி நூல் வெளியீடு நிகழ்வு மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ .சண்முகம் அவர்களின் தலைமையில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 23.02.2017 அன்று நடைபெற்றது. பா.அகிலன், சித்தாந்தன், பொலிகையூர் சிந்துதாசன், இராஜேஷ்கண்ணன் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.




நிகழ்வு கடடைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்க கலாசார பெருமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ் நெல்லியடி மத்திய கல்லூரியில் புத்தக சந்தை நிகழ்வு பெப்ரவரி 24 முதல்`27 வரை மிக சிறப்பாக நடைபெற்றது.




25 . 02 . 2017 இல் கிண்ணியாவில் நடைபெற்ற ரியாஸ் குரானா வாசகர் வட்ட கவிதை, சிறுகதை குறித்தான கலந்துரையாடலின் போது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் மகா சிவராத்தி தினத்தன்று நடைபெற்ற வருடாந்த இரதோற்சவத்தின் சில பதிவுகள்...



ஒளிப்படங்கள் - வடலியூரான்

ஒளிப்படங்கள் - வடலியூரான்



யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா - 2017 நிகழ்வின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்...!



உங்களின்
படைப்புகள் அனைத்தும் புதுவிதியில்
பிரசுரமாக வேண்டுமா?
உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## ராமர் பட்டாபிஷேகமும் குகனும்



கங்கைக் கரை. குகன் வழக்கம்போல படகைத் தொட்டுக் கும்பிட்டு, ஆற்று நீரில் காலை அலம்பிக்கொண்டு படகில் ஏறினான். இராமன், சீதை, லட்சுமணனை சுமந்து சென்ற, புனிதப் படகல்லவா அது!

படகில் அன்றைய தினம் நாலைந்த புதிய நபர்கள் வந்தார்கள். அவர்களில் ஓர் இளைஞன், குகனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"அயோத்தியில் இராமர் பட்டாபிஷேகக் கொண்டாட்டங்கள் அமர்க்களப்பட்டு கொண்டிருக்கின்றன. நீ என்னடாவென்றால் இங்கே படகில் துடுப்பு இழுத்துக் கொண்டிருக்கிறாயே! ஏன், உன்னை இராமர் அழைக்கவில்லையா? நீ அந்த வைபவத்தில் கலந்து கொள்ளத் தகுதியில்லாதவனா?" என்றான்.

குகன் அமைதியாகச் சொன்னான். "ஐயா! இராமபிரானுக்கு என் நினைவு வராதிருக்குமா? உன்னோடு சேர்த்து ஐவரானோம் என்று என்னைத் தன்னுடைய நான்காவது தம்பியாக பாவித்தாரே அவருக்கா என்னை மறக்கும்?" நெகிழ்ச்சியுடன் சொன்னான்.

"அப்படியென்றால் ஏன் உனக்கு அழைப்பு விடுக்கவில்லை?"

"பொதுவாக ஒரு திருமணம், ஒரு விசேஷம் என்றால் நெருங் கினவர்களுக்கெல்லாம் ஒரு சில பொறுப்புகளைக் கொடுத்து நிறைவேற்றச் சொல்வார்கள் இல்லையா, அதுபோல எனக்கும் ராமர்பட்டாபிஷேகத்துக்கு வரும் மக்களை அக்கரையில் இருந்து படகில் அழைத்துவரும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. திருமணத்தின்போது இதுபோன்ற பொறுப்பை நிர்வகிக்கும் ஒருவரால் மணமேடைக்குச் சென்று திருமணத்தைப் பார்க்க முடியாத நிலைமை ஏற்படும். அதுபோலத்தான் எனக்கும். நான் மானசீகமாக இராமர் பட்டாபிஷேகத்தைப் பார்க்கிறேன். என் ராமர் என்னைப் பார்க்கிறார். நட்புடன் புன்னகைக்கிறார். சாப்பிட்டு விட்டு வெகுமதிகளை வாங்கிச் செல் என்று பாசத் துடன் சைகை செய்கிறார். அந்த நிறைவை நான் இங்கேயே பெற்று விடுகிறேன். வேறு என்ன வேண்டும் எனக்கு?"

அந்த இளைஞன் மட்டுமின்றி, பயணித்த அனைவருக்குமே குகனுடைய பதிலால் கண்களில் நீர் திரண்டது.

## சொற்கள்

உங்களை நானும்
என்னை நீங்களும்
உணர்ந்து கொள்வதற்கு
உதவிக்கு வருவதெது?

காதுக்கும் வாய்க்கும்
இடையில் நாள்தோறும்
தூது போய் வருகின்ற
தோழியின் பேரென்ன?


பள்ளி அறையில்
படிக்கும் வேளையிலும்
புத்தகத் தாள்களாம்
மெத்தையிலிருந்து நமக்கு
முத்தம் கொடுக்கின்ற
மோகினி அவள் யார்?

அவள் தான் -
அதிகாரச் சுவர்களில்
அடை பட்டிருந்தாலும்
ஆசையுடன் நாம் தொட்டால்
அர்த்தப் புன்னகையில் - தன்
அடையாளம் காட்டுபவள் !
அவள் - மொழிக் குடும்பத்தின்
மூத்த சகோதரி அனைத்து
மொழிகளிலும்
ஆதாம் ஏவாள்!

அவளைச் சொல் என்றும் சொல்லலாம்
வார்த்தை என்றும்
வழங்கிக் கொள்ளலாம்!
அவள் அசைந்தால் அசை என்பார்
இசைந்தால் இசை என்பார்
இனத்துடன் அவள் இணைந்து
சூழ்ந்து நிற்கும் போது
சொற்கள் என்பர்.

பா.எப்சிபா
தரம் - 11
மிருசுவில் றோ.க.த.க

## பெரியாரின் வாழ்வில்...!



### தலைவணங்காக் கவிஞன்!

இந்திய சுதந்திரப் போர் நடந்து கொண்டிருந்த கால கட்டம் அது. தமிழ்நாட்டின் சென்னைக்கு காந்தி வந்திருந்தார்.

அவரை சந்திக்க தலைப்பாகையும் கோர்ட்டும் அணிந்து ஒருவர் வந்தார். வந்தவர் "மிஸ்டர் காந்தி இன்று மாலை சென்னை கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற் பாடு செய்துள்ளேன். அதில் நீங்கள் பேச வேண்டும் என விரும்புகிறேன். வரமுடியுமா?" எனக் கம்பீரக் கேட்டார்.

காந்திக்கு வந்தவர் யாரெனத் தெரியாது. சிறிதுநேரம் யோசித்து விட்டு "இன்றுவர நேரமில்லை. வேண்டுமானால், கூட்டத்தை நாளை வையுங்கள் வருகிறேன்" என்றார்.

உடனே அவர் "நான் கூட்டத்தை யாருக்காகவும் தள்ளி வைக்க முடியாது வருகிறேன்" என்று கூறிவிட்டு சென்று விட்டார்.

பின்னர்தான் அருகிலிருந்தவர்களிடம் "வந்தவர் யார்?" என காந்தி கேட்டுள்ளார். அவர்கள் "அவர்தான் ஒப்பற்ற கவிஞர் பாரதியார்" என்றிருக்கிறார்கள். அவரின் யாருக்கும் தலைவணங்கா தன்மையைக் கண்டு வியந்து போனாராம் காந்தி.




இ.அனற்ஜென்சிகா
தரம் - 07
மிருசுவில் றோ.க.த.க

## குட்டீஸ் பரிசுப் போதி - 34

✱ 2017 இல் சிறந்த நடிகர், நடிகைகளை ஒஸ்கார் விருதுகளை வென்றவர்கள் யாவர்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்பொதி - 34

முடிவுத்திகதி : 10.03.2017

### குட்டீஸ் பரிசுப் போதி - 32 முடிவுகள்

விடை: 104 செயற்கை கோள்கள்

✱ ராஜேந்திரன் சரஸ்வதி
தரம் - 10A
தி/விக்னேஸ்வரா மகா வித்தி யாலயம் திருகோணமலை

✱ இ.தனஞ்செயன்
தரம்-8
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
(தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழகத்தில் வண்டிகள்

முனைவர் ஜெ.அரங்கராஜ்
(ஆய்வறிஞர், யாழ்ப்பாணம்)

02



வண்டியில் அளவுக்குக் கூடுதலாக பொருட்களை ஏற்றியதாலும் மிகுந்த ஈரமான தரைப் பகுதியில் வண்டி சென்றமையாலும் வண்டியின் பார்கள் குழைந்து ஈரமண்ணில் உருள்கள் புதைந்து கொண்டன. அவ்வாறு புதைந்து கொள்ளும் உருள்களை வெளியே மீட்க இன்று பலவகை எளிய நவீன தாங்கி முறைகள் வந்துவிட்டன. பண்டைய நாளில் நீரற்ற வறண்ட மணல்களையும் கற்களையும் பயன்படுத்தி அவற்றை ஈரநிலத்தில் இட்டு வண்டிகளை மீட்டுள்ளனர். தொழில் நுட்பத்தின் தேவைப் பெருக்கத்திற்கு இவ்வாறான நிகழ்வுகள் பெருந்துணையாக அமைந்தன எனலாம்.

**அச்சொடு தாக்குப் பாருற் றியங்கிய**
**பண்டைச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய**
**அரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்**
**பெருமிதப் பகட்டுக்குத் துறையு**
**முண்டோ**

புறம்-90:6-9

எனும் மேற்கண்ட அடிகளின் வழி வண்டிகள் சேற்றில் அகப் பட்டமையும் அவை மீட்பதற்கு எடுத்தாண்ட முயற்சிகளையும் அறியலாம்.

ஒரு வண்டியினை இயக்குதலுக்கு அவ்வண்டியோட்டுவோரின் திறனும் நுட்பமுமே இன்றியமையாததாக உள்ளது. பண்டைய நாளில் தேர்களை ஓட்டுவதற்கு பாகன் எனும் தொழில் முனைவோர் தேர் ஓட்டுதலிலும் பயணிகள் வண்டிகளைச் சிறப்புற இயக்குதலிலும் சிறந்து விளங்கியமை போல சரக்கு வண்டிகளை இயக்குதலுக்கு என்று ஒரு தொழில் முனைக் குழு இருந்ததா என எண்ணவேண்டியுள்ளது. ஆனால் உப்பு வணிகர்களைப் பொறுத்தவரையில் அவ்வணிகர்களே வண்டியை இயக்கியதாகக் கருத வேண்டியுள்ளது. பாதுகாப்பு வீரரல்லாத தனிப்பட்ட ஓட்டுநர்களை அவர்கள் கொண்டதாக அறியவில்லை. ஏனெனில் அவர்கள் குடும்பம் குடும்பமாக வணிகப் பணியை மேற்கொண்டிருந்தபடியால் அவர்களாகவே வண்டியியக்கும் பணியை மேற்கொண்டிருந்தார்கள் என எண்ண இடமளிக்கிறது. சரக்கு வண்டிகளை கவனமாக நுட்பத்துடன் செலுத்த வேண்டும். இல்லையெனில் தடுமாற்றம் ஏற்படும் என்பதினை

**கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்**
**காவற் சாகா டுகைப்போன் மாணின்**
**ஊறின் றாகி யாறினிது படுமே**
**உய்த்த நேற்றா னாயின் வைகலும்**
**பகைக்கூ ழள்ளற் பட்டு**
**மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே**

புறம் -185

மேற்கண்ட அடிகளின் வழி அறியலாம். வண்டியை இயக்கும் கலையினை ஆடவர் அனைவரும் பயிலும் ஒரு கலையாக பண்டைய நாளில் விளங்கியமையினைக் காணலாம்.

**2) மெல்லிய இனிய மேவரு தருந**
**இவையொழி யாமெனச் செல்லினு மவை நீ**

குறுந் - 306:1-2

(மேன்மையுடையனவும் இன்பம் பயப்பனவுமான விரும்பத் தகுவனவுமாகிய அத்தகைய மொழிகளை அவரைக் கண்ட பொழுது கூறமாட்டோம்.)

**3) நாளிரை கவர மாட்டித்தன்**
**பேடை நோக்கிய பெருந்தகு நிலையே**

(தன் பேடைக்கு ஊட்டவேண்டி அப்பெடையை நோக்கிய பெருமை தங்கியிருக்கின்ற நிலையை இங்கே பாராய்)

மேற்கண்ட அடிகளில் தகு எனும் சொல் உயர்வு, பெருமை நிலை எனும்பொருளில் வழங்கியுள்ள மையை அறியலாம். முரணற்ற அமைதியான வாழ்வை தமிழர்கள் போற்றினபடியால் அத் தன்மையினை தரு என அடை கொடுத்தனர். மானம் எனும் சொல் ஒரு குறிப்பிட்ட அளவைக் குறிக்கும் சொல்லாகும். தகுணம் என்பது ஏற்புடையது இணையானது. தாழ்வில்லாதது எனும் பொருளில் முரணற்ற தன்மை (சமாதானம்) குறிக்க வழங்கிற்றெனலாம். கொங்கு வழக்கில் இச் சொல் இன்றும் ஆட்சியுள்ளமை எனத்தகும். இதனை,

1) அண்ணனும் தம்பியும் சண்டை போட்டுக்கிட்டாங்க தகுமானம் பண்ணிக்கப் போறேன்.

2) நாளைக்கு எனக்கு கட்டாயம் பணம் வேணும் வேற தகுமானம் சொல்லக் கூடாது.

என்பனவாகவும் வழங்கும் இத் தகுமானம் எனும் சொல் இருந்த இடத்தில் சமாதானம் எனும் சொல் பிற தமிழக வழக்குகளில் இடம்பெற கொங்கில் மாத்திரம் தகுமானமே நிலைத்து நிற்கின்றது.

## மொளசாறு

மொளசாறு எனும் சொல் கொங்கு வழக்கில் ரசம் எனும் சொல்லுக்கு மாற்றாக வழங்கப்பட்டது. ஆனால் இச் சொல் இன்று வழக்கிழந்து வருகிறது. மிளகுச்சாறு என்பதே மொளசாறு எனத் திரிந்து வழங்குகின்றமையை அறியலாம். இம்மிளகுச்சாறு கொங்கு வழக்கின் தனித்தன்மையாக விளங்கியது குறித்து ஒரு நாட்டார் வழங்கு கொடு முடிப்பகுதியில் கொங்கு வேளாளர்களிடம் வழங்கிவருகின்றது. அது யாதெனில் ஒரு ஐயங்கார் வீட்டுத் திருமணம் ஒன்றிற்கு ஒரு கொங்கு வேளாளர் பூனூலணிந்த சோடிப்புடன் சென்று பந்தியில் அமர்ந்து உண்டுள்ளார். உண்டு கொண்டுள்ளபோது அவருக்கு மிளகுச் சாறு தேவைப்பட்டுள்ளது, அதை ஐயங்கார்க ளின் வழக்கான ரசம் எனும் சொல்லால் அழைக்காது இவரது இயல்பான வழக்கில் கொஞ்சம் மொளசாறு கொடுங்க எனக் கேட்க இவரின் உண்மை இனம் வெளிப்பட்டு இவரை அவர்கள் சூத்திராள் என வெளியேற்றியதாக ஒரு வழக்கு உண்டு. ஆனால் இன்று கொங்கு மக்களிடம் மொளசாறு மறைந்து ரசமே மேலோங்கி வருகிறது.

ஒரு இனக்குழு சமூகத்தின் தொன்மைமிகு மரபுகளை காத்து வரும் பகுதியாக கொங்குமண்டலத்தைக் குறிப்பிடலாம். இனக்குழு சமூகத்தின் தொன்மங்களான 60 வகைக் கூட்ட முறைகள் இன்றும் இம் மக்களிடம் வழக்கிலுள்ளன.

மேலும் கொங்கு வேளாளர், கொங்கு வேட்டுவர், கொங்குகு நாவிதர், கொங்குப் பறையர், கொங்குநாடர், கொங்கு வண்ணார் முதலாய அனைவரது வாழ்வியற் சடங்குகளும் ஒன்றுபட்டனவாகவே தொல்தன்மையுடன் காணப்படுகின்றன.

இம்மக்களின் பல்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளும் சொற்களும் அவர்களின் தொல் தன்மையைக் காட்டும் ஆய்வுக்குரியன.

காட்டாக ஆரியம் (கேப்பை), வேட்சியம் (உற்றார்பகை), குன்றுமாயம் (இரகசியம்), நறுவிசு (துப்புரவு), அல்லை (பக்கம்), சல்லை (நீண்ட குச்சி), முச்சூடம்

## முடிவுரை

(முழுதும்), மறுக்கா (மீண்டும்), எத்தனிப்பு (முயற்சி), உள்ளொளவு (உள்ஒற்று), ஐயன், வெய்க்கானம் (கவனம்), வெட்டாப்பு (மழைவிடும் இடைவெளி), துப்பனை எனக் காட்டிக் கொண்டே போகலாம். இதுபோல பல ஏனப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், குடிப்பெயர்கள, அணிகலன்கள், சீலை கட்டும் முறைகள், உணவு முறைகள், திருமண மற்றும் வாழ்வியல் முறைமைகள் யாவும் ஆராயப்பட வேண்டியவைகளாக உள்ளன.

ஏனெனில் பல வழக்கிழந்து விட்டன. ஆணம் (குழம்பு), அம்புலி (கூழி) முதலாய பல சொற்களும் சீலை கட்டும் முறைகளும் மாறிவிட்டன என்றே கொள்ளலாம். சில முதியவர்கள் மாத்திரமே இவற்றை அறிந்துள்ளனர். அவர்களுடன் இச் சொற்களும் வழமைகளும் மறைவதற்கு முன் அவற்றை ஆவணப்படுத்துவது ஆய்வாளர்களின் கடனாகும்.

**(முற்றும்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வராகவனின் இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக ரகுல் ப்ரீத் சிங் ஒப்பந்தமாகியுள்ளார்.

சூர்யா இப்போது 'தானா சேர்ந்த கூட்டம்' படத்தில் நடித்து வருகிறார். புதிய படத்தின் படப்பிடிப்பு ஏப்ரல் மாத இறுதியில் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினி நடித்துவரும் '2.0' படத்தின் பெர்ஸ்ட் லுக் வெளியீடு வரும் 20ஆம் திகதி மும்பையில் நடக்கவுள்ளது.

இதை மிகப் பிரமாண்டமாக நடத்த வேலைகள் வேகமாக நடக்கின்றனவாம். இந்தப் படத்துக்காக 350 கோடி இந்திய ரூபாவை (இலங்கை மதிப்பில் சுமார் 875 கோடி ரூபா) லைக்கா நிறுவனம் ஒதுக்கியுள்ளதாம்.






மகேஷ் பாபுவை நாயகனாக வைத்து தமிழ், தெலுங்கு மொழிகளில் ஏ.ஆர்.முருகதாஸ் படம் ஒன்றை இயக்கி வருகிறார்.

இன்னும் தலைப்பிடப்படாத இந்தப் படம் வரும் ஜூன் 23 ஆம் திகதி திரைக்கு வரும் என முருகதாஸ் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்தப் படத்தில் ரகுல் ப்ரீத் சிங், எஸ்.ஜே.சூர்யா மற்றும் பலர் நடித்துள்ளனர். ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.



இயக்குநர் ஹரி - விக்ரம் -த்ரிஷா கூட்டணி 'சாமி -2' படத்துக்காக ஒன்றிணைந்துள்ளது.

இதை உறுதிப்படுத்தும் விதமாக நடிகை த்ரிஷா தனது ட்விட்டர் பக்கத்தில் "மூன்றாவது முறையாக மீண்டும் விக்ரம், ஹரியுடன் இணைந்து பணியாற்றவுள்ளேன். சாமி -2 இல் ஒப்பந்தமாகியுள்ளேன்" என்று பதிவிட்டுள்ளார்.

படத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு மே மாதம் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



'என்னை அறிந்தால்' படத்திற்குப் பிறகு 'குற்றம் 23' படத்தில் நடித்துள்ளார் அருண் விஜய்.

இதில் அவர் பொலிஸ் அதிகாரியாக அவர் நடித்துள்ளார். இதுவே அருண் விஜய் முதன்முதலாக நடித்துள்ள பொலிஸ் வேடப் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்து வேலைகளும் நிறைவடைந்து விட்டதால் படம் இந்த வாரம் திரைக்கு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகளில் நடித்து பிரபலமானவர் அமலா பால். தமிழில் முன்னணி நடிகையாக வளர்ந்தபோதே இயக்குநர் விஜயை காதல் திருமணம் செய்தார். ஆனாலும் இருவரின் மணவாழ்வும் துரதிர்ஷ்டவசமாக விவகாரத்தில் முடிந்தது.

இந்நிலையில் கன்னட நடிகர் சுதீப்புடன் அமலா பால் நடித்த 'ஹெப்புலி' படத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால் அமலாபால் கன்னடத்தில் ஒரு வலம் வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



ஆரம்பத்தில் காமெடி கலந்த காதல் படங்களில் நடித்த உதயநிதி ஸ்டாலின், இப்போது அரசியல் கலந்த படங்களில் நடித்து வருகிறார்.

இவர் இப்போது நடித்து வரும் 'பொதுவாக எம் மனசு தங்கம்' படத்தில் பார்த்தீபன் வில்லனாக நடித்து வருகிறார்.

அரசியல் வாடை சற்றுத் தூக்கலாக உள்ளதால் காமெடிக்கு முக்கியம் கொடுக்கும் விதமாக கதையில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் வில்லன் பார்த்தீபனை காமெடி கலந்த வில்லனாக்கியிருக்கிறார்களாம்.

பிரபல பின்னணிப் பாடகர் கே.ஜேசுதாஸின் மகன் விஜய் ஜேசுதாஸ் நாயகனாக அறிமுகமாகவுள்ளார்.



தந்தையைப் போலவே பின்னணிப் பாடகராக வலம் வந்தவருக்கு நடிப்பின் மீது ஆர்வம் வரவே மலையாளப் படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்து வந்தார்.

தற்போது 'படை வீரன்' படத்தில் நாயகனாக அறிமுகமாகிறார். நாயகியாக அம்ரிதா அறிமுகமாகிறார். முக்கிய பாத்திரத்தில் இயக்குநர் ராஜா நடிக்கிறார்.



நடிகர் கமல்ஹாசனின் மகள் என்ற அடையாளத்துடன் சினிமாவில் களமிறங்கியவர் ஸ்ருதிஹாசன்.

பாடகியாக அறிமுகமான இவர் இசையமைப்பாளர், நடிகை என தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர்.

சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் " என்னை சினிமாவே வலிமைப்படுத்தியது. என் மனதில் என்ன தோன்றுகிறதோ அதை செய்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.







சிபிராஜ் நடித்துள்ள 'கட்டப்பாவ காணோம்' வரும் 17 ஆம் திகதி திரைக்கு வருகிறது.

சிபிராஜ், முன்னர் நடித்த 'நாய்கள் ஜாக்கிரதை' படத்தில் நாய்க்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. இதேபோல இந்தப் படத்தில் மீனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதில் நாயகியாக ஐஸ்வர்யா ராஜேஸ் மற்றும் லிவிங்ஸ்டன் நடித்துள்ளனர்.




பாகுபலி இந்திய சினிமாவில் பெரும் சாதனை படைத்த படமாகும்.

இந்நிலையில் பாகுபலி 2 ஆம் பாகமான 'பாகுபலி தி கென்குளுஷன்' படப்பிடிப்பு அனைத்தும் நிறைவடைந்து விட்டது.

தற்போது படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் சிவராத்திரி தினத்தன்று படத்தின் போஸ்டர் வெளியிடப்பட்டது.

நடிகை பாவனா கடத்தப்பட்டமையும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான விவகாரமும் திரை வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த விவகாரத்தின் பின்னால் அவரின் கார் சாரதியே இருந்தார் என்பதால் கார் பயணம் என்றாலே பல நடிகைகளுக்கு இப்போது கிலி கிளம்புகிறது.

இதனால் பல நடிகைகளும் தாங்களே இனி கார் ஓட்டுவது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். கார் ஓட்டத் தெரியாதவர்கள் சிலர் இப்போது கார் ஓடப் பழகுகின்றனராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




03

# உன்னை நீயே அறிவாய்!

## நீங்களும் உங்களது முன்னோடிகளும்!

உற்பத்தி, வர்த்தகம், சேவைத் துறைகளில் கொடிகட்டிப் பறந்த முன்னோடிகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நாமே அடிபட்டு அடிபட்டு கற்றுக் கொள்ள சில வருடங்கள் ஆகின்றன என்றால், ஏற்கெனவே அடிபட்டு, அனுபவப்பட்டு வெற்றி அடைந்த முன்னோடிகளைப் பற்றித் தெரிந்து கொண்டால், சில மாதங்களில் நீங்கள் செய்யும் தொழிலின் சூட்சுமங்களைத் தெரிந்துகொள்ளலாம். சாதனை படைத்தவர்கள் மட்டுமல்ல, முன்பின் தெரியாதவர்கள் கூட நமக்கு சில விடயங்களைக் கற்றுத்தருவார்கள். எனவே நீங்கள் கற்றுக் கொள்ள விரும்பும் ஒரு மாணவனாக எப்போதும் இருக்க முயற்சி செய்யுங்கள்.

எந்தத் துறை உங்களுக்குச் சரியாக இருக்கும், எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அப்படி முடிவு செய்யும் முன், நீங்கள் உங்களைப் பற்றி முழுதாகத் தெரிந்திருப்பது அவசியம். பிறரைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டும் நாம் நம்மைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்று யோசிப்பதே இல்லை.

நம்மை எப்படித் தெரிந்துகொள்வது? நம் பலம் என்ன?, பலவீனம் என்ன? நம் திறமை என்ன? அவற்றை நம்முடைய தொழிலுக்கு எப்படிப் பயன்படுத்துவது.? அடுத்த பகுதியில் ஒரு சோதனைப் பயிற்சியுடன் பார்க்கலாம். தொழில் செய்வதென முடிவெடுத்ததும், அடுத்து எழும் கேள்வி என்ன தொழில் என்பதுதான். எல்லா தொழில்களையும் எல்லோரும் செய்துவிட முடியாது.

நமக்கான தொழில் எது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு நம்மை நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நம் பலம் என்ன?, பலவீனம் என்ன? நம்மிடம் உள்ள திறமை என்ன? நாம் என்ன படித்திருக்கிறோம்? நம் ஆர்வம் எதில் இருக்கிறது? இவற்றை எல்லாம் நாம் தெரிந்து கொண்டால்தான் நம்முடைய தொழிலின் பாதையை நம்மால் சரியாகக் கண்டுபிடிக்க முடியும்.

தொழில் செய்ய விரும்பும் நீங்கள் எந்தத் துறையில் தொழிலைச் செய்ய விரும்புகிறீர்களோ, அது சார்ந்த அறிவும், அனுபவமும் அவசியம் தேவை.

அப்போது தான் அவற்றை நீங்கள் திட்டமிட்டு செயற்படுத்த முடியும். முன்பின் அனுபவமில்லாத துறையாக இருந்தால், அதற்குத் தேவையான அடிப்படைகளைக் கற்றுக்கொண்ட பிறகே அந்தத் தொழிலில் ஈடுபடுவது நல்லது.

பொதுவாக தொழில்கள், உற்பத்தியா ளர், விற்பனையாளர், வாடிக்கையாளர் ஆகிய மூன்று பேரையும், மூலதனம், பொருள், தொழில்நுட்பம், மனிதவளம் ஆகிய நான்கு விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். இவற்றில் எதை வேண்டுமானாலும் ஒருவர் தனது தொழிலாகத் தேர்வு செய்யலாம். ஆனால், அதற்கு உங்களது துறை சார்ந்த திறமை உங்களுக்கு எவ்வளவு இருக்கிறது? எந்தத் துறையை தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் முடிவு செய்தாக வேண்டும்.

1. ஒரு பொருளைத் தயாரிக்கத் தேவையான தொழில்நுட்ப அறிவும் அனுபவமும், அந்தப் பொருளை மேலும் சிறப்பாக தயாரிக்க புதிய யோசனைகளும் உங்களிடம் உள்ளனவா?

2. ஒரு பொருளை விற்பதில் நீங்கள் சிறப்பாகச் செயற்படுபவரா? உங்களுடைய பொருட்களுக்கான வாடிக்கையாளரை சரியாகக் கண்டுபிடித்து விற்கக் கூடியவரா?

3. பணியாளர்களைக் கையாள்வதும், அவர்களிடம் இருந்து வேலை வாங்குவதும் உங்களுக்குக் கைவந்த கலையா?

4. கணனி, இணையம், செயலிகள் போன்ற தொழில்நுட்பங்களில் புகுந்து விளையாடும் அபாரமான திறமை உங்களுக்கு உண்டா?

இந்த நான்கு கேள்விகளையும் பல முறை உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

முதல் கேள்விக்கான திறமை உங்களிடம் இருந்தால், உற்பத்தித்துறை சார்ந்த தொழிலை நீங்கள் தொடங்கலாம். ஆனால், அடுத்த மூன்று திறமைகளையும் கொண்டவர்களை உங்களுடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது கேள்விக்கான திறமை உங்களிடம் இருந்தால், உற்பத்தியாளரிடம் பொருளை வாங்கி விற்கும் விற்பனை சார் தொழிலில் நீங்கள் தாராளமாக ஈடுபடலாம். ஆனால், மூன்றாவது, நான்காவது திறமைகளைக் கொண்டவர்களை உங்களுடன் வைத்துக்கொள்வது உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவும். உங்களுடன் வைத்துக் கொள்ள முடியாவிட்டாலும் அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மூன்றாவது திறமை கொண்டவராக நீங்கள் இருந்தால், உங்களால் சேவைத் துறை சார்ந்த தொழிலைச் செய்ய முடியும். உங்கள் திறமையை வைத்து மற்றவர்களிடம் பணி புரிவதைக் காட்டிலும் அதையே தொழிலாகச் செய்யலாம். தனியாக ஒரு முகவர் நிலையம் அமைத்து நிறுவனங்களுக்கு சேவை வழங்கலாம்.

நான்காவது திறமை உங்களிடம் இருந்தால், மற்ற திறமைகள் உள்ள அனைவருக்கும் நீங்கள் நிச்சயம் தேவைப்படுவீர்கள். சரியான தொழில் முறையுடன் களமிறங்கினால் நிச்சயம் உங்களுக்கான சந்தையைப் பிடித்து விடலாம். உங்களுக்கான துறையை நீங்கள் தேர்ந்தெடுத்து விட்டீர்களா? வெற்றிகரமாகத் தொழிலைத் தொடங்க பின்வரும் நிர்வாகக் கட்டமைப்புகள் அவசியம்.

### இடர் நிர்வாகம்

தொழில் என்பது எப்போதும் சவால்கள் நிறைந்தது என்பதை முதலில் நீங்க வேண்டும். சவால்களுக்கு முகங்கொடுக் காமல் தொழில் ரீதியாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. என்றாலும் நீங்கள் முகங் கொடுக்கும் சவால்கள் உங்களுக்குத் தரும் இலாபத்தையும், நஷ்டத்தையும் பொறுத்தே முடிவு எடுக்க வேண்டும். நாம் முகங்கொடுக்கும் சவால்கள் எந்தளவுக்கு ஈடானது (Worth) என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது அதன் பின் விளைவுகளையும் யோசிக்க வேண்டும்.

### கால நிர்வாகம்

தொழிலுக்கு நேர மேலாண்மை மிக முக்கியம். நம் ஒவ் வொரு நாளையும் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். சிறுசிறு வாய்ப்புகளையும் தவறவிடக் கூடாது.

இரவு 1.30 மணிக்கு அமெரிக்காவில் உள்ள ஒரு வாடிக்கையாளரிடம் நமது தொழில் குறித்து பேச வேண்டும் என்றாலும், அதனைத் தவறவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தவறவிடும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வாய்ப்புகளை முடக்கிவிடும். அதேபோல் உரிய நேரத்தில் சேர்ப்பித்தல், பணக் கொடுக்கல் - வாங்கல் விடயங்களையும் சொன்ன நேரத்தில் முடித்துவிட வேண்டும்.




### மனிதவளம்

நல்ல பணியாளர்களால்தான் ஒரு நல்ல தொழில் நிறுவனத்தை நிறுவ முடியும். அதனால் நம் பணியாளர்களைத் திறமையாகக் கையாள வேண்டும். அவர்களின் பிரச்சினைகளைக் கேட்பது, ஆலோசனைகளைக் கேட்பது, அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவது போன்றவற்றை நம் தொழிலுக்கேற்பத் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

### வாழ்க்கை நிர்வாகம்

வாழ்க்கையையும் தொழிலையும் பிரச்சினை இல்லாமல் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் தொழில் செய்பவர்களுக்கு குடும்பச் சூழ்நிலை என்பது பெரிய தடையாக இருக்கும்.

தொழில் செய்யக் குடும்பத்தினரின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியம் தேவை. அது கிடைக்காமல்தான் தொழில் செய்ய விரும்பும் பலர் திண்டாடுகிறார்கள்.

ஒரு தொழில்முனைபவர், தனது தொழிலைத் தொடங்கும் முன் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று விடயங்கள் உள்ளன.

1. செய்யப் போகிற தொழில் என்ன வகையைச் சேர்ந்தது?

2. நாம் செய்யப்போகிற தொழிலை எப்படிப் பதிவு செய்வது?

3. நமது நிறுவனத்தை எப்படிக் கட்டமைப்பது?

இந்த மூன்று விடயங் களையும் பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இனித் தொழிலின் வகைகளைப் பற்றியும் அவற்றைப் பதிவு செய்வது பற்றியும் பார்ப்போம்.

### தொழில் வகைகள்!

நாம் செய்யப் போகும் தொழிலுக்கான பொருளைப் பொறுத்து, தொழிலை இரண்டு விதமாக வகைப்படுத்தலாம். வீட்டுக்குத் தேவையான பொருட்கள், தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள். இந்த இரண்டில் எந்தப் பொருளை வைத்து நாம் தொழில் செய்யப் போகிறோம் என்பதை முடிவு செய்த பிறகுதான் பதிவு செய்வது பற்றி முடிவு செய்ய முடியும்.

வீட்டுக்குத் தேவையான பொருட்கள் உணவு, வீட்டு உபயோகப் பொருட்கள் என பல விதங்களில் உள்ளன. ஒரு குடும்பம் ஒரு நாளைக்கு காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு மற்றும் தேநீர் நேரம் என பல வகைகளில் உணவுப் பொருட்களை நுகர்கிறது. சாதாரணமாக காலை உணவாக சாப்பிடும் இட்லி மற்றும் சட்னியில்கூட அரிசி, உளுந்து, எண்ணெய், காய்கறிகள், உப்பு போன்ற உணவுப் பொருட்கள் உள்ளன.

இவற்றைப் பயன்படுத்தாமல் இட்டலி மற்றும் சட்னியை செய்ய முடியாது. மேலும் கோப்பை, பாத்திரங்கள், கரண்டி, தண்ணீர் குவளை, தளபாடம் போன்ற பொருட்கள் தேவைப்படுகின்றன. ஒரு நாளைக்கு 25-க்கும் மேலான உணவு பொருட்களையும் ஏராளமான வீட்டு உபயோகப் பொருட்களையும் பயன்படுத்துகிறோம்.

இதில் எந்தப் பொருளை வேண்டுமானாலும் நமது தொழிலுக்கான பொருளாகத்தேர்வு செய்யலாம். இவை இல்லாமல், அழகு சாதனங்கள், குழந்தைகளுக்கான பொருட்கள், வயதானவர்களுக்கான பொருட்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

தொழிற்சாலை மற்றும் நிறுவனங்கள் என்று வரும்போது, உற்பத்தி இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள், தளபாடம், கணனி உள்ளிட்ட பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் நம்முடைய தொழிலுக்கான பொருளாகத் தெரிவு செய்யலாம். இப்படி நாம் செய்யப் போகும் தொழிலுக்கான பொருளைத் தேர்ந்தெடுத்து, பிறரிடம் இருந்து வாங்கியோ அல்லது அவற்றை நாமே உற்பத்தி செய்தோ தொழில் செய்யலாம்.

எந்தப் பொருளாக இருந்தாலும், சந்தையில் செய்யப்படும் வாணிபத்தை நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, மூலப்பொருளாகவே உற்பத்தி செய்தோ அல்லது வாங்கியோ விற்றல், இரண்டு, பொருளை உற்பத்தியாளரிடம் வாங்கி, நம்முடைய நிறுவனத்தின் பெயரில் மீளப் பொதி செய்து விற்பது, மூன்றாவதாக, மூலப் பொருளை மதிப்பு கூட்டு பொருளாக்கி விற்பது, நான்காவது பிரபல நிறுவனத்தின் பொருளை வாங்கி அதன் பெயரிலேயே விற்பது ஆகியவைதான் அந்த நான்கு வகையும்.

(இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசட்டுத் துணிச்சலும் அழகியும்



பணம் கிடைக்கின்றது என்பதால் பல உயிராபத்தான செயல்களில் பலர் ஈடுபடுவதுண்டு. அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருப்பது போல பணம் இருக்கும் இடத்தில் பயங்கரமும் இருக்கலாம் என்பதை நன்றாகவே நமக்கு எடுத்துச் சொல்லும் புதினந்தான் இது. அந்த அழகிக்கு வயது 23. மிகக் கவர்ச்சியாகவும் நிர்வாணமாகவும் போட்டோக்கள் எடுப்பதில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ரஷ்ய படப் பிடிப்பாளர் ஒருவரின் விருப்பப்படி இந்த அழகி ஓடின்ட்கோவா, தன் உயிரைப் பணயம் வைத்து துணிச்சலான போஸ்கள் பல கொடுத்துள்ளாள். இவளுடன் இணைந்து போஸ் கொடுத்தவர்.

சிரியா நாட்டைச்சேர்ந்த 25 வயது இளைஞன் ஒருவர்!. துபாயில் உள்ள 1000 அடி உயரமான கயான் கோபுரத்தில் உயிரைப் பணயம் வைத்து துணிச்சலாகப் போஸ் கொடுத்தது அவர்களின் உயிரை மாய்க்க முயற்சிக்கும் வெறும் முட்டாள்தனம் என்று விமர்ச னங்கள் எழுந்துள்ளன. "எனக்கு பொதுவாகவே உயரம் என்றால் பெரும் பயம்" என்று சொல்லும் இந்த அழகி "இனி நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் இப்படிச் செய்யப் போவ தில்லை" என்று கூறி இருக்கின்றார்.

துபாய் நகருக்கு அழகு சேர்க்கும் இந்த வான்முட்டும் கோபுரம் 73 மாடிகளைக் கொண்டது .

இவள் அசத்தலான துணிச்சலை பல்லாயிரக்கணக்கானவர்கள் பாராட்டி இருந்தாலும் என்னைப் பார்த்து எவருமே இப்படி நடந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுள்ளார்.

"நாங்கள் படப்பிடிப்புக்காக ஒரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்[illegible] கோபுரக் கூரையில் அரைமணி நேரம் வரை செலவிட்டோம். எந்தப் பாதுகாப்பு அதிகா[illegible] எங்க ளிடம் அடையாள அட்டை கேட்க வில்லை. எந்தக் கேள்வியும் கேட்கவில்[illegible] என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கட்டடத்தில் பாதுகாப்பு ஓட்டைகள் உள்ள[illegible] கண்டுபிடித்த எமக்கு அன்பளிப்புகள் தரவேண்டுமென்று இந்த அழகி சம்ப[illegible] அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளாள். சிலருக்கு காலம் கடந்துதா[illegible] வருகின்றது?

# 35 வருட வர்த்தகத்திற்கு மூடுவிழா




புதினப்பூங்கா
ராஜேஷ்மணாளன்

எதிலும் வேகம் என்ற வரிசையில் துரித உணவிற்கு உலகப் பிரபல்யம் கொண்டது தான் மக்டொனால்ட்ஸ் நிறுவனம். இன்று பட்டி தொட்டியெல்லாம் பேசப்படும் அளவிற்கு உலக நாடுகளெங்கும் இது தன் கிளைகளைக் கொண்டுள்ளது. இப்பொழுது 34 வருடங்களாக இயங்கிவந்த இதன் கிளை ஒன்று மூடப்பட இருப்பதுதான் புதினம்.

மக்டொனால்ட்ஸ் இயங்கும் கட்டடங்களுள் மிகப் பழையது இது என்கிறார்கள். இங்கிலாந்தின் சிறுஸ்பெரி என்னும் இடத்தில் 1100 களில் எழுப்ப பட்ட புராதன கட்டடம் இது என்று சொல்கிறார்கள். தங்கள் எதிர்கால திட்டத்திற்கு இந்தக் கட்டடம் பொருத்தமாக இல்லை என்பதால், பெப்ரவரி மாதத் துடன், மிகுந்த கவலையோடு இந்தக் கிளையை மூடுவதாகக் கூறுகின்றது நிர்வாகம்.

இங்கு 20 வருடங்களாக தொடர்ந்து வாடிக்கையாள ராக இருக்கும் ஒரு பெண்மணி தன் பள்ளிக் காலத்தில் கொண்டாட்டங்கள் நடத்திய காலம் தொடக்கம் இன்று வரை சேவை செய்யும் இந்தக் கிளை மூடப்படுவது பெரிய கவலையைத் தருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

117 உலக நாடுகளில் 32,000 க்கு அதிகமான மக்டொனால்ட்ஸ் உணவகங்கள் இருக்கின்றன. 1.7 மில்லியன் தொகையினருக்கு இது வேலை வாய்ப்பு அளித்துள்ளது. 1940 இல் மக்டொனால்ட்ஸ் சகோதரர்கள் ஓர் உணவகத்தை அமெரிக்காவில் ஆரம்பித்துள்ளார்கள். இன்று நாம் காணும் ஹம்பெர்கேர்கள் உணவகம் முதற் தடவையாக 1955 இல் அமெரிக்காவின் இலினோயிஸ் மாநிலத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. முதல் நாள் வியாபாரம் வெறும் 366 டொலர் மாத்திரமே.

எப்படி இருந்த நான் இன்று இப்படி ஆகி இருக்கிறேன் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம்.

# பஞ்சமும் பட்டினியும்



இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆபிரிக்க கண்டத்தின் பல நாடுகளுக்கு பெயருக்கு ஏற்றால்போல இருண்ட பக்கங்கள் தான் அதிகம். எபோலா, எயிட்ஸ் என்று பல பொல்லாத வியாதிகள், உள்நாட்டுப் போர்கள் போன்றன இவர்களை பெருமள வில் அழித்துவர, பஞ்சமும் பட்டினியும் போதாததற்கு ஆட்டிப்படைத்து வருகின்றன.

தற்போதைய நிலையில் நான்கு ஆபிரிக்க நாடுகளின் கோடிக்கணக்கான மக்கள் மகா மோசமான பட்டினியால் வாடுகிறார்கள் . இத் தொகையில் 1.4 மில்லியன் பிள்ளைகளும் அடக்கம் என்பது மனதை உருக்கும் தகவல். நைஜீரியா, சோமாலியா, தென் சூடான், யேமன்-இவைதான் அந்த நான்கு பாவப்பட்ட நாடுகள்.

ஐ நா நிறுவனத்தின் பிள்ளைகளுக்கான யுனிசெப் பிரிவு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவித்துள்ளது. கடந்த ஆறு வருடங்களில் இந்த நாடுகளைத் தாக்கும் மிக மோசமான பஞ்ச நிலை இதுவென்று கருதுகிறார்கள்.

இந்த நான்கும் ஒன்றை ஒன்று அண்டியுள்ள எல்லைப்புற நாடுகள் அல்ல. இந்த நிலைக்கான காரணம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. ஏமனில் கடந்த இரண்டு வருடங்களாகத் தொடரும் உள்நாட்டுப் போர் அவலம் 462,000 பிள்ளைகளை சத்துணவு இல்லாத நிலைக்குத் தள்ளியுள்ளது. மேற்கு ஆபிரிக்காவின் நைஜீரியாவின் இரு பிராந்தியங்களில் 45,000 பிள்ளைகள் சத்துணவு இல்லாத மிக மோசமான நிலையில் இருக்கின்றார்கள். சோமாலியாவில் நிலவும் கடும் வரட்சி 185,000 பிள்ளைகளை பஞ்சத்தின் விளிம்பில் கொண்டுவந்து சேர்த்துள்ளது. அடுத்த சில மாதங்களில் இத் தொகை 270,000 ஆக உயரலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.


சுமாராக 5.5மில்லியன் அதாவது தென் சூடானின் ஜனத்தொகையின் பாதித் தொகையினர் போதிய உணவின்மை காரணமாக மரணிக்கலாம் என்ற அபாயத்தில் இருக்கிறார்கள்.

இந்தஇருண்ட கண்டத்தில் ஒளி பிறக்குமா? இவர்களுக்கான விடியல் எப்பொழுது வரப்போகின்றது ?

# மருந்தும் விருந்தும்

மருந்தைக் கொடுக்கலாம் ஆ[illegible]னால் அதையே விருந்தில் கொடுப்பது போல தாராளமாகக் கொடுக்கலாம[illegible]?

இப்படியான சங்கதிகள் நடப்ப[illegible] அமெரிக்க சுகாதார அதிகாரிகள் கவனத்திற்கு வந்துள்ளது. 2010-15 காலக[illegible]ட்டத்தில் நோயாளிகளுக்கு மருந்தாகக் கொடுக்கப்படும் ஹெரோயின் போ[illegible]தைவஸ்தின் அளவு நான்கு மடங்காக உயர்ந்துள்ளமை தெரியவந்திருக்கி[illegible]ன்றது. 2015 இல் மாத்திரம் 12,989 நோயாளிகள் அளவுக்கு அதிகமா[illegible] ஹெரோயின் உட்கொண்டு சாகடிக்கப் பட்டிருக்கின் றார்கள். இதே மரண[illegible]ங்கள் ஐந்து வருடங்களுக்கு முன்பு 3,306 ஆக இருந்துள்ளது. இந்தப் புள்ளி[illegible]விபரம் எந்த அளவுக்கு போதைவஸ்தின் அதீத பாவனை ஆட்கொல்லியாக[illegible]மாறி இருக்கின்றது என்பதைத் தெரியப் படுத்தி உள்ளது. மருத்துவர்கள் நோ[illegible]யாளிகளுக்கு குறிப்பாக வயதாளிகளுக்கு ஹெரோயின் மருந்தாக எழுதிக் கொ[illegible]டுக்க, அவர்கள் கைவசம் இருப்பது முடிந்ததும் பணம் கொடுத்து மலி[illegible]வான போதைவஸ்து சாதனங்களை உபயோகிக்கத் தொடங்கி உயிரை [illegible]மாய்த்துக் கொள்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. இதில் பரிதாப[illegible]ம் என்னவென்றால் போதைவஸ்துக்கு அடிமையாகும் பெண்களுக்கு பிறக்கும் பிள்ளைகளுக்கும் சிகிச்சை அளிக்கும் நிர்பந்தம் அமெரிக்காவின் சந்தியாகோ மாகாணத்துக்கு வந்து சேர்ந்திருப்பது மகா கொடுமை. ஒரு புள்ளி விபரத்தின்படி 55-64 [illegible]க்குட் பட்டவர்கள்தான் அளவுக்கு [illegible]மான அளவு போதை [illegible] சிக்கு[illegible]வர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் கல்விக் கலங்கரை

# ஒஸ்மானியாக் கல்லூரி




அதிபர் ஜனாப் எம்.எஸ்.எம். அஷ்ரப்

தொகுப்பு :
**அ.றொக்ஷன்**

## வரலாறு

இஸ்லாமியத் தமிழரின் கல்விக் கலங்கரை விளக்காக யாழ். நகரின் சோனகத் தெருவில் அமைந்துள்ளது ஒஸ்மானியக் கல்லூரி. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் இப்பாடசாலை யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி இரு தசாப்த காலம் பொலிவிழந்து, மீண்டு இன்று வீறுநடை போட்டுவருகின்றது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தனது மகுட வாசகத்திற்கேற்ப கல்வி, கலாசார, விழுமியங்களை வினைத்திறனுடன் ஆற்றிக் கொண்டிருக்கின்றது.

ஓர் இனத்தின் இருப்பில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த முஸ்லிம் பெரியார்களின் சிந்தனையில் முகிழ்த்ததே ஒஸ்மானியக் கல்லூரி. 1959ஆம் ஆண்டு வைத்தியர் மர்ஹூம்.ரி.பி.ஜாயாவினால் அடிக்கல் நட்டப்பட்டது. 4 வருட அயராத உழைப்பில் கட்டியெழுப்பப்பட்ட கல்லூரி 1963 ஆம் ஆண்டு வைத்தியர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்தால் திறந்து வைக்கப்பட்டது.

1ஏ.பி. தரத்துடன் சிறப்பான பாரம்பரியங்களை உள்ளடக்கி இயங்கிய இப்பாடசாலை, 1990 ஆம் ஆண்டு முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்தின் பின் இயங்காது - இருண்டு கிடந்தது. யுத்தத்தில் அழிவை சந்தித்து நின்ற கல்லூரியை 2003 ஆம் ஆண்டு முஸ்லிம்களின் மீள் குடியமர்வின் பின் இயக்க முடிவு செய்யப்பட்டது. நல்லுள்ளம் படைத்தவர்களின் அயராத முயற்சியின் பயனாக 41 மாணவர்களுடன் தனது சேவையை மீள ஆரம்பித்து இன்று 450 மாணவர்களுக்கு தனது அளவற்ற சேவையை வழங்கி வருகின்றது.

கல்லூரியின் முதல் அதிபர் என்ற பெருமையை ஜனாப் சி.எம்.ஏ.ஜிப்ரி பெற்றார். தொடர்ந்து ஜனாப் எம். எம். யூசுப், ஜனாப்.எம்.ஏ.ஆர்.ஏ. றஹீம், ஜனாப் ஏ.எச். ஹாமீம் ஆகிய அதிபர்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினர். 2003 ஆம் ஆண்டு மீள இயங்கத் தொடங்கிய பின்னர் பல இன்னல்களுக்கு மத்தியில் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் மற்றும் பதிலதிபர் வ.மகேந்திரராஜா ஆகியோர் சேவையாற்றினர். 2015 ஆம் ஆண்டு இறுதியில் பொறுப்பேற்ற அதிபர் ஜனாப் எம்.எஸ்.எம். அஷ்ரப் விழுமியப் பண்புகளிலும் நிர்வாகக் கட்டமைப்பிலும் சிறந்த கல்லூரியாக வழிநடத்தி வருகின்றார்.

## சாதனைகள்

- ஒஸ்மானியக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் பலர் வைத்தியர்களாகவும் தனியார், அரச நிறுவனங்களில் உயர் அதிகாரிகளாகவும் பதவிகளை வகித்தனர் - வகித்து வருகின்றனர். கல்விக்கு வழங்கியது போன்ற முக்கியத்துவத்தை விளையாட்டுத்துறைக்கும் இக்கல்லூரி வழங்கி வருகின்றது. உதைபந்தாட்டத்தில் தனக்கெனத் தனித்துவமான இடம்பிடித்த இக்கல்லூரி, ஏ.எச்.ஹாமீம் அதிபராக இருந்தபோது இக்கல்லூரி, பல சம்பியன்களைக் கைப்பற்றியது.
- இதேபோன்று மெய்வன்மைப் போட்டிகளிலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. தற்பொழுது தொடர்ச்சியாக மீலாத் விழாப் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்று சாதனைகளைப் படைத்து கல்லூரியின் சிறப்பை மாணவர்கள் மென்மேலும் வளர்த்து வருகிறார்கள். இவைமட்டுமின்றி புலமைப்பரிசில் பரீட்சையில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது.
- க.பொ.த. சாதரண தரத்திலும், உயர்தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கடந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பலர் பல்கலைக்கழகம் புகத் தயாராகி வருகின்றனர்.
- 1971 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் சாரணர் இயக்கத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 6 மாணவர்கள் இலங்கையின் மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லாவினால் இராணியச் சாரணர் பட்டம் பெற்றனர். இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் கையொப்பமுடன் இச்சான்றிதழ்கள் காணப்பட்டன.

## சவால்கள்

யாழ். ஒஸ்மானியக் கல்லூரி நகர்ப் புறத்தில் அமைந்திருந்தாலும் யுத்தத்தின் வடுக்களில் இருந்து இன்னமும் மீளவில்லை.

தனக்கென தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட பாடசாலை என்பதால் தனிமையான பாடசாலையாக இருக்கிறது.


ஆசிரியர் வளப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் பொருளாதார ரீதியாக பின்னிலையில் உள்ளனர்.

மாணவர்களின் ஒழுக்கம், வரவு, அடைவு மட்டம் என்பனவும் மேலும் சீர்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குடை

மூலம் : ஜசுனாரி கவபட்டா (ஜப்பான்)
தமிழில் : சாந்தன்

வசந்தகாலமழை, ஒன்றையும் நனைப்பதற்கே போதாமல் இருந்தது. அது கிட்டத்தட்ட ஒரு பனி மூட்டம் போல் - தோலை மேலாக இசேலாக ஈரலிப்பாக்க மட்டுமே போதுமானதாக இருந்தது. இந்த இளம் பெண் வெளியே ஓடியபோது இளைஞனுடைய குடையைக் கண்ணுற்றாள்.

"ஓ! மழை பெய்கிறதா?"

கடையைத்தாண்டிப் போகும் போது இளைஞன் குடையைவிரித்து வைத்திருந்தான் - மழையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலும் பார்க்க, தன்னுடைய வெட்கத்தை மறைப்பதற்காக.

அப்படியிருந்தும் அவன் குடையை மெளனமாக அவளை நோக்கிப் பிடித்தான். அவள் ஒரு தோளை மட்டும் குடைக்குக் கீழ் கொண்டு வந்தாள். இளைஞன் இப்போது நனையலானான். ஆனால் அவளை நெருங்கி "அக்குடையின் கீழ் தன்னுடன் அவள் வருவாளா?" என்று கேட்க முடியவில்லை. குடையின் கைப்பிடியில் இளைஞனுடைய கையோடு தன்னுடைய கையையும் சேர்த்துப் பிடிக்க அவள் நினைத்தாலும், அதை விட்டு விட்டு ஓடிவிடுபவள் போல அவள் தோன்றினாள்.

இருவரும் ஒரு புகைப்பட நிலையத்திற்குப் போனார்கள். இளைஞனுடைய தகப்பனுக்கு வேலை மாற்றலாகியிருந்தது. இது அவர்களுடைய பிரியாவிடைப் புகைப்படம்.

"இரண்டுபேரும் இதிலே ஒன்றாகத் தயவுசெய்து உட்காருகிறீர்களா?" புகைப்படப் பிடிப்பாளன் சோபாவைக் காட்டினான். ஆனால் பெண்ணுக்கருகில் பையனால் உட்கார முடியவில்லை. அவன் அவளுக்குப் பின்னால் நின்று கொண்டான். சோபாவின் முதுகில் தன் கைகளை வைக்கும்பொழுது அவளுடைய மேலாடையை மெல்லத் தொடுவது போல, ஏதோ ஒரு விதத்தில் இருவரின் உடல்களும் தொடுக்கப்பட்டிருப்பதுபோல அவளை இப்போது தான் அவன் முதல்முதலாகத் தொட்டி ருக்கிறான். அவனுடைய விரல் நுனிகள் ஊடாக அவன் பெற்றுக்கொண்ட அந்த உடல் வெப்பம், அவளை அணைத்துக் கொள்வதன் மூலம் அவன் பெறக் கூடிய கதகதப்பை உணரவைத்தது.

அவனுடைய வாழ்நாள் முழுவதும் இந்தப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுடைய உடலின் கதகதப்பை அவன் நினைவு கூர்வான்.

"நான் இன்னொரு படம் எடுக்கவா? நீங்கள் இருவரும் அருகருகாக இருப்பதை ஒரு அண்மைப் படமாக எடுக்கலாம்"



பையன் வெறுமனே தலையாட்டினான்.

"உன்னுடைய கூந்தல் எப்படி?" பையன் பெண்ணிடம் முணுமுணுத்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு முகம் சிவந்தாள். அவளுடைய கண்கள் பெருமகிழ்வில் ஒளிர்ந்தன. அவள் அடக்கமாக ஓய்வறை நோக்கி விரைந்தாள்.

அப்போது பையன் கடையைத் தாண்டியதை அவள் கண்டபோதே, காலந்தாழ்த்தாமல் அவள் தன்னுடைய தலை அலங்காரத்தைச் சரி செய்வதற்காகப் போயிருந்தாள். இப்போதுதான் குளித்துவிட்டு வந்தவள் போல தன்னுடைய தலைமுடி கலைந்திருப்பது அவளுக்குக் கவலையாய் இருந்தது. கலைந்திருந்த முடிக் கற்றைகளை ஒரு ஆண் பிள்ளையின் முன்னால் ஒழுங்குபடுத்தவே வெட்கப்பட்டாள். ஆனால் அவளுடைய கூந்தலைச் சரிசெய்யுமாறு இன்னொரு தடவை கூறுவது அவளை இன்னமும் சங்கடப்படுத்துமோ, என இளைஞன் நினைத்தான்.

ஓய்வறை நோக்கிஅவள் உற்சாகமாய் ஓடியமை அவனுக்கும் நிறைவாய் இருந்தது. அவள் திரும்பிய போது, அவர்கள் இருவரும் சோபாவில் அருகருகாக உட்கார்ந்து கொண்டார்கள். உலகத்திலேயே அதுதான் மிகவும் இயல்பான விடயம் என்பது போல்.

அவர்கள் புகைப்படப் பிடிப்பு நிலையத்தை விட்டுப் புறப்படுகையில், இளைஞன் தன் குடைக்காக அங்கும், இங்கும் பார்த்தான். அதன் பிறகுதான் அவன் கவனித்தான், அவள் அவனுக்கு முன்பே அதை எடுத்துக் கொண்டுபோய் பிடித்துக் கொண்டு நிற்பதை. பையன் கவனிப்பதை அவள் கண்டதும், தான் அவனுடைய குடையை எடுத்து விட்டேன் என்பது அவளுக்குத் திடீரென உறைத்தது. அந்த எண்ணம் அவளைக் குழப்பிற்று. "தானும் அவனுக்கே உரியவள்தான்" என்று, அவள் உணர்ந் தாள் என்று இந்தக் கவனயீனமான நடவடிக்கை அவனுக்குக் காட்டியிருக்குமா?

குடையைப்பிடிக்க அவன் முன்வரவில்லை. அதைக் கொடுக்க அவளாலும் முடியவில்லை. எப்படியோ அவர்களைப் புகைப்படப்பிடிப்பு நிலையத்திற்குக் கொண்டு வந்தது போலன்றி தெரு இப்போது வித்தியாசமாயிருந்தது. இருவரும் திடீரெனப் பெரியவர்களாகியிருந்தார்கள். மணம் முடித்த ஒரு ஜோடி போல உணர்ந்தவாறே அவர்கள் வீடுதிரும்பினார்கள் - இந்தக் குடை விடயம் ஒன்றிலாவது.

**நன்றி : என் முதல் வாத்து**
**(மொழிபெயர்ப்புக் கதைகள்)**




# மாற்றம் தந்த மரம்

**மாதங்கி**

தலிபான்கள் என்றாலே மதத்தின் பெயரால் அவர்கள் செய்யும் அட்டகாசங்கள் தான் நினைவுக்கு வரும். அந்தளவுக்கு உலகையே சில வருடங்களுக்கு முன் உலுக்கி எடுத்த அமைப்பு அது. மிகக் கடுமையாக இஸ்லாமியச் சட்டங்களை மக்கள் பின்பற்ற வேண்டுமெனக்கூறி, மீறுவோர் மீது தயவு தாட்சண்யமற்ற கொடுந் தண்டனைகளையும் வழங்கிய போராட்ட அமைப்பு தலிபான்.

இந்த தலிபான்கள் பெண் கல்விக்கு எதிரானவர்கள். அவர்களின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கிய மலாலா என்ற சிறுமிதான், இப்போது நோபல் பரிசு பெறுமளவுக்கு உலகளாவிய ரீதியில் பெண் கல்விக்காக உரத்துக் குரல் கொடுத்து வருகிறாள். மிகப் பெரிய ஆளணியும், பணபலமும் கொண்ட தலிபான்கள், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்னர் கொஞ்சம் அடங்கிப் போனார்கள். ஆயினும் இப்போது மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட தொடங்கி இருக்கிறார்கள்.

இப்போது உலகத்தின் கவனம் முழுதும், தலிபான்களை விடவும் 1000 மடங்கு அட்டூழியம் புரியும் ஐ.எஸ் அமைப்பின் மீது இருப்பதால் அதைப் பயன்படுத்தி மீண்டும் தங்கள் மக்கள் செல்வாக்கை உயர்த்த தலிபான்கள் முயன்று வருகிறார்கள்.

இதுநாள் வரையும் "ஆண்கள் தாடி வளர்க்க வேண்டும்" என்று சொல்லி வந்த தலிபான்கள் இப்போது "மரம் வளர்க்க வேண்டும்" என்று கூறத் தொடங்கியுள்ளனர். ஆப்கானிஸ்தானில் வீடுகள் கட்டவும், விறகுக்காகவும் பெருமளவிலான மரங்கள் அழிக்கப்படுவதால், பெரும் இயற்கைச் சமநிலைத் தளம்பல் ஏற்பட்டுள்ளது.

இதிலிருந்து விடுபடவே பசுமை ஆர்வலர்களாக தலிபான்கள் மாறியிருக்கிறார்கள். அதைவிட ஆப்கானிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவராக ஹிபத்துல்லா அகுந்த்ஸதா என்பவர் கடந்த மேமாதம் பொறுப்பேற்று கொண்ட பின்னர் தலிபான்களின் செயற்பாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதில் ஒன்றுதான் "சகல பொதுமக்களும், தலிபான் போராளிகளும் கட்டாயம் ஒன்றுக்கும் மேற்பட்ட மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்" என்ற உத்தரவு.

ஹிபத்துல்லா அகுந்த்ஸதா அடிப்படையில் ஒரு மதகுருவாக இருப்பதால் மக்கள், இயற்கை நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறப்படுகின்றது.

எப்படியோ உயிர்ப்பலி வேட்கையோடு அலைந்தவர்கள் மரத்தை வளர்த்து பூமியைக் காக்க முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்டும் விடிவில்லை



### பரவிப்பாஞ்சான் மக்களின் நிலை

(07 ஆம் பக்க தொடர்ச்சி...)

முரண்டு பிடிக்கிறார் எனக் குற்றம் சாட்டுகின்றனர் மக்கள். இதனாலேயே தமது மீளக்குடியமர்வில் தாமதம் ஏற்பட்டதாகவும் பின்னர் இராணுவமே தலையிட்டு, காணிகளை தங்களிடத்தே ஒப்படைத்து மீளக்குடியமர்த்தியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**கோவணத்தோட வந்த எங்களிட்ட ஆவணத்தைக் கேக்கிறாங்கள்**

"யுத்தத்தில நாங்கள் எல்லாத்தையும் இழந்திட்டம். இப்ப எங்கிட்ட ஒண்டுமே இல்ல. இங்குள்ள அதிகாரிகள் எங்களிட்ட காணி ஆவணத்தைத் தந்தால்தான் உங்களை இங்க இருத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். சண்டையில இருந்து தப்பி கோவணத்தோட வந்த எங்களிட்ட ஆவணத்தைக் கேக்கிறாங்கள். உங்கட காணி ஒப்பு வைக்கப்பட்டிருக்கு (ஈடு) என்றும் வேறு நபர்களுக்கு விக்கப்பட்ட காணி என்றும் சொல்லினம். அப்படி எதுவுமே இல்லை. ஒப்பு வைக்கப்பட்டதோ, விக்கப்பட்டதோ அது தனி நபர் பிரச்சினை. அதைப் பார்க்க கோர்ட் இருக்கு. அதைப் பற்றி இவை ஏன் கேட்கணும்? அரச காணியை விடுத்து அதிகாரிகள் சனத்தின்ட காணியைக் கொடுக்கணும். அதுதான் இவை செய்ய வேண்டியது. காணி ஆவணத்துக்குப் பதிலாக தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சாண்றிதழ், வாக்காளர் அட்டை போன்ற ஆவணங்களைச் 'செக்' பண்ணலாம். தனியார் உறுதிக்காணி, அரச உறுதிக்காணி, மத்திய வகுப்பு உறுதிக்காணி, அரச போமிட் காணி என்று இருக்கிறது. இதில தனியார் உறுதிக்காணிகளை தரும்படிதான் கேக்கிறோம்" என்று தங்கள் மனக்கிடக்கைகளை மக்கள் சொல்கிறார்கள்.

இறுதி யுத்தத்தில் வன்னி மக்கள் நிலத்தை இழந்து, சொத்துக்களை இழந்து, இடம்பெயர்ந்து, அவயங்களை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துள்ளனர். போர் வன்னி மக்களை மட்டுமில்லை ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பாதித்துள்ளது. அந்தப் பாதிப்பிலிருந்து மக்கள் மெல்ல மெல்ல மீண்டுகொண்டிருக்கையில், மக்கள் அரசியல்வாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை தாம் கையிலெடுத்து வீதியில் இறங்கி தமது காணிக்காக இராணுவத்தினாரிடம் போராடி வருகின்றனர். இந்நிலையிலேயே பரவிபாஞ்சான் , கேப்பாபுலவு, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் மக்கள் காணிகளை படைத்தரப்பு விடுவித்துள்ளது. இருந்த போதிலும் ஆவணப் பிரச்சினையை கையிலேடுத்து மீளக்குடியேறிய மக்களுக்கு அதிகாரிகள் தடை போடுவது வேதனைக்குரிய விடயமாகும். பனையால் விழுந்த மக்களுக்கு அதிகாரிகள் ஒத்தடம் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, ஏறி மிதிக்காமல் இருந்தாலே போதும், மக்கள் தாமாகவே மீண்டெழுந்து விடுவார்கள்.

# தலைமையற்ற மக்கள் போராட்டம்

(05 ஆம் பக்க தொடர்ச்சி...)

நிலங்கள் முப்படையினரின் ஆக்கிரமிப்பில்தான் உள்ளன.

மன்னார் முள்ளிக்குளம் கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகளின் சொந்தக்காரர்களாகிய தமிழர்கள் அருகிலுள்ள காட்டுப்பகுதியில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி குடியேற்றப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

அதேபோன்று வலி. வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் செய்கின்றனர். ஆனால் அந்த காணிகளுக்குரிய மக்களோ நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். இராணுவம் செய்யும் இந்தத் தோட்டத்தை பராமரிக்க தண்ணீர் பாய்ச்ச, களை பிடுங்க ஒவ்வொரு நாளும் கிளிநொச்சியிலிருந்து பலாலிக்கு குறிக்கப்பட்ட இடத்தில் குறிப்பிட்ட தொகை மக்களை காலையில் ஏற்றிக் கொண்டு வந்து விட்டுவிட்டு மாலையில் திரும்பவும் கொண்டு போய் விடுவதாகவும் அதற்காக தனியார் வாடகை வண்டியொன்று அமர்த்தப்பட்டு நாளொன்றுக்கு 7000ரூபா கொடுக்கப்படுவதாகவும் அறியக்கிடக்கின்றது. அண்மையில் தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவரிடமிருந்து கசிந்த செய்தி இது.

வருடங்களுக்கு மேலாக தமது காணிகளுக்கருகிலேயே இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இவ்வாறு இருந்து வந்த நிலையிலேயே, இனியும் பொறுக்க முடியாது. எமது நிலம் எமக்கு வேண்டும். காணி கிடைக்கும்வரை அந்த இடத்தை விட்டு அகலமாட்டோம் எனவும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர். இதன்போது போராட்டத்தை நிறுத்தும் வகையில் அரசும், அரசியல்வாதிகளும் பல்வேறு தரப்பினரூடாகப் பல உறுதிமொழிகளை வழங்கிய போதிலும் மக்கள் அவற்றை நம்பத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் கடந்த காலத்தில் அவர்கள் அரசின் பல்வேறு உறுதிமொழிகளை நம்பியவர்கள். அந்த உறுதிமொழிகள் எப்படியெல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன என்பதனை கண்கூடாகக் கண்டவர்கள். எனவே அவர்கள் தங்கள் நிலையிலும், மன உறுதியிலும் எந்தவித மாற்றங் களையும் ஏற்ப்படுத்தாத நிலையில், போராட்டம் வெற்றியளித்துள்ளது.

அப்படியென்றால் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறஇவ்வாறான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா? இன்னும் வடக்கு கிழக்கில் தமிழரின் பெருமளவு

அப்படியென்றால் சொந்த மக்களையே அவர்களின் வாழ்விடங்களில் இருந்து துரத்திவிட்டு அரச படைத்தரப்பிற்குச் சுகபோகமாக வாழ்வதைத் தருவதுதான் ஜனநாயக அரசு சார்ந்த கொள்கையா? மனித உரிமை பேணப்படுவதென்பது இதுதானா?

இதுதான் ஜனநாயகம் என்றால் மக்கள் தமது பாதைகளைத் தாமே தீர்மானிப்பர் என்பது கடந்தகால அனுபவம்.

# அலம்பல் ஆச்சி



**செல்வி**

எனன பிள்ளையள் சுகமா இருக்கிறியளோ? ஆச்சியும் கனகாலமாய் பிள்ளையளைச் சந்திக்கேல்லை. கடும் வேலை ஆச்சிக்கு. அதுசரி பெடியள். எங்கை பார்த்தாலும் ஒரே போராட்டங்களாய்க் கிடக்கிது. தமிழனின்ரை போராட்ட குணம் முத்திப் போச்சோ எண்டு நானும் வலுசந்தோசமா இருந்தனான்.

பிறகுபார்த்தா, போராட்டமெல்லாம் புசுக்கெண்டு போய்க்கொண்டிருக்கிது. மகிந்தவின்ரை காலத்திலை போராட்டம் எண்டாலே பயந்துபோய்க் கிடந்தவை எல்லாம் இண்டைக்கு நல்லாட்சியின்ரை காலத்திலை அங்க இங்கையெண்டு ஓடித் திரியினை. போராட்டத்திலை சனங்களுக்கு இருக்கிற நம்பிக்கையை சிதைக்கிறதுக்கு நல்லாட்சி அரசாங்கம் நல்லா வேலை செய்யிது கண்டியளோ.

அங்கைஇஞ்சையெண்டுபோராட்டங்கள்மலிஞ்சுபோய்க்கிடக்கு. மண்டபத் திறப்புவிழாக்கும் மண்ணாங்கட்டிக்கும் வாற எங்கடை துரைமாருக்கு எங்கடை சனத்தை ஒருக்காபோய் பார்க்கேலாமை கிடக்கிது. குஞ்சு குருமனெல்லாம் உந்த நந்திக்கடல் வெளியுக்கை கிட்டத்தட்டஒரு மாசமா இருக்குதுகள் – பாவத்தானுகள். எங்கடை இனத்திலை பிறந்ததைத் தவிர அதுகள் வேறை ஒரு பாவமும் செய்திருக்காதுகள். உந்தப் போராட்டத்தை உண்மையா கம்பஸ் பெடியள் கையிலை எடுத்திருக்கோணும். யாழ்ப்பாண கம்பசும் மட்டக்களப்பு கம்பசும் சேர்ந்திருந்தா உதுக்கு ஒரு முடிவு கட்டியிருக்கலாம். ஒரு காலத்திலை கம்பஸ் பெடியள் ஒருகதை சொன்னாங்களெண்டா சனம் அடுத்தகதை கதைக்காதுகள். இண்டைக்கு??

நீங்கள் புறப்படலையாலை மாற, ஆரின்ரை கையிலை போராட்டங்கள் போகக்கூடாதெண்டு நினைக்கிறமோ, அவையிட்டைப் போய் சேர்ந்திட்டுது. அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும் எண்டு காத்திருக்கினம். ஒரு ஊட்டு கிடைச்சாலும் சட்டெண்டு உள்ள பூந்திடுகினம். ஓதுறது வேதம் எண்டதுக்காக சாத்தான்களை வேதம் ஓத விடேலாதுதானே. யோசியுங்கோ் பிள்ளையள். சமூகப் பொறுப்பை உணர்ந்து கொள்ளுங்கோ. படிக்கும் வரைக்கும் அங்கினேக்கை குடிச்சுப்போட்டு கிடந்திட்டு, பிறகு வேலை இல்லா பட்டதாரி எண்டு இன்னொரு பட்டத்தையும் சந்தோசமா வாங்கிக்கொண்டு றோட்டிலை நிக்காதேங்கோ.

கேப்பாபுலவுச் சனமும் எத்தினை நாளாய் பனிக்கையும் வெயிலுக்கையும் கிடந்துதுகள். அதுகளிட்டை போகவர ஒரு மனிசரில்லை. வேலை குடு வேலை குடு எண்டு கச்சேரிக்கு முன்னாலை குந்திக் கொண்டிருக்கினமாம். உதைவிட சன்னதியானிட்டை போனியளெண்டா இன்னும் சுகம். உங்களானை கேக்கிறன். அரசாங்கமென்ன மடமே நடத்துது? காசு வாங்காம படிப்பிச்சு விட்டுது. பிறகு அவைக்கு வேலை குடு வேலை குடு எண்டு இரவு பகலா குந்திக்கொண்டு இருக்கப் போகினமாம். உதிலை முசுப்பாத்தி என்னெண்டா அவையின்ரை பதாகை ஒண்டிலை பட்டதாரிகளுக்கு தகுதியில்லையா? பரீட்சை எதுக்கு? எண்டு கேள்விகேக்கினம். தகுதியானவை எண்டா ஏன் போராட்டம் பண்ணுறியள். பரீட்சை வைக்கிற அரசாங்கத்துக்கு சவாலா உங்கடை தகுதியளை காட்டுறதுதானே. இப்ப கிட்டடியிலை நடந்த சோதினையிலை உங்கடை வண்டவாளமெல்லாம் தண்டவாளம் ஏறினது மறந்து போட்டுதோ? மனசாட்சியை தொட்டு சொல்லுங்கோடாப்பா.

உங்கடை பிள்ளை குட்டியளை சாதாரண கணித அறிவோ, பொதுஅறிவோ இல்லாத வாத்திமாரிட்டை படிக்க விடுவியளோ? உத்தியோகத்தர்மாரின்ரை பிள்ளையள் இங்கிலீசு மீடியத்திலை படிக்கோணும் எண்டு ஓடித்திரிஞ்சு அல்லோலகல்லோலப்பட்டு அம்பத்தெட்டு வகுப்புக்கு விடுவியள். ..ச்சைக்.. முந்தியுமொருக்கா சொன்னனான் எண்டு நினைக்கிறன். ஏன்டாப்பா.. அரசாங்கத்தை பொம்பிளை குடு. மாப்பிளை குடு எண்டும் கேப்பியள் போலை. போற போக்கை பாத்தாஅப்பிடிதான் கிடக்கிது.

அடுத்த பகிடி என்னெண்டா மகிந்தவின்ரை காலம் வரைக்கும் இரவிலை ஒண்டுக்கு வாறதுக்குக் கூட பயந்த ஆக்களெல்லாம் இண்டைக்கு இரவு பகலா தொடர் போராட்டமாம். வேலையில்லா பட்டதாரி எண்டு சொல்லிக் கொண்டு றோட்டிலை இருக்க வெக்கமில்லையே உங்களுக்கு? அது சரி இப்ப என்னத்துக்கு உந்த எடுவை? பட்டதாரி நியமனமெண்டு உங்கடை ஆக்கள் கச்சேரி வழிய தேச்சுக்கொண்டிருக்கிறது காணாமை நீங்களும் கதிரையளின்ரை எண்ணுக் கணக்குக்கு போகப்போறியளே? உங்களிட்டை போய் இதைக் கேக்கிற நான்தான் அறளைபேந்த கிழவி. வேலை செய்யாம இருக்கிறதாலையும் வேலை செய்யாம சம்பளம் வாங்குறதுக்கும் தானே உங்களுக்கு அரச உத்தியோகம்.

உங்கடை க்தையள கதைக்க எனக்கு இப்ப பத்திக்கொண்டு வருகிது. இனி என்னத்தை சொல்றது. ஆச்சிக்கு மனசு சரியில்லை. உந்த சன்னதியானிட்டை போய் அயரப் போறன். சரி வாறன் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அகதியின் கதை

ச.திருச்செந்தூரன்

**- ஞாபகக் குறிப்பு**

மகாகவி பாரதிக்கும் எனக்கும் ஒரு வகையில் தொடர்பு உண்டு. இருவரும் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் பிறந்தவர்கள் என்பதுதான் அந்தத் தொடர்பு. இந்தியாவிலுள்ள, இலங்கை அகதிகள் முகாம் ஒன்றில் பிறக்கும் போதே 'அகதி' என்ற பட்டத்துடன் பிறந்த எனது முகாம் கதைகளும் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையையும் ஈழத்து மக்கள் அதிகளவில் அறிந்திருக்க நியாயமில்லை. அங்குள்ள செய்திகள் அதிகம் வெளிவருவதுவும் இல்லை.

1990களில் எனது அம்மாவும், அப்பாவும் திருமணம் செய்து கொண்டனர். அப்போதுதான் சாம்பல்தீவுப் பாலம் உடைக்கப்பட்டது. பின்பு தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஒற்றைத்தடிப் பாலத்தின் மீது நடந்து தூக்கிய சைக்கிளோடு பாலத்தைக்கடந்து திருகோணமலையை வந்தடைந்தனர். பின்பு அங்கிருந்து வெளியேறிய அவர்கள் மன்னார் வழியாக இயந்திர மீன்பிடிப்படகொன்றின் மூலமாக இந்தியாவை அடைந்தனர் என எனது பெற்றோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள 110 தமிழகத்தில் மண்டபம், கொட்டப்பட்டு ஆகியவை இடைத்தங்கல் முகாம்களாக அமைக்கப்பட்டு தற்போது தற்காலிக முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள கும்முடிப்பூண்டி, புழல், ஈரோட்டில் உள்ள பவாணிசாகர், திருச்சியில் உள்ள கொட்டப்பட்டு, வாழவந்தான்கோட்டை, இராமநாதபுரத்தில் உள்ள மண்டபம் ஆகிய முகாம்களே அளவில் பெரிய முகாம்கள். இங்கு ஒவ்வொரு முகாமிலும் சுமார் 500 முதல் 1500 குடும்பங்கள் வரை தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓரளவு பொருளாதார வசதியுடன் வருகை தந்தவர்கள் காவல்துறைப் பதிவுடன் முகாம்களுக்கு வெளியே சென்று வசிக்க அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை காவல் நிலையம் அல்லது மாவட்ட நிர்வாகத்திடம் தங்களது பதிவுகளை அல்லது அனுமதிகளை புதுப்பித்துக் கொள்ள அறிவுறுத்தப்படுவதுடன் காவல்துறையினரால் அவதானிக்கவும் படுகின்றனர்.



இதற்கப்பால், தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்த நான் திருநெல்வேலி மாவட்டத்தின் கடைய நல்லூர் என்ற இடத்தில் பத்தாம் வகுப்பு வரை படித்துப் பதினைந்து வயது வரை அகதியாக வாழ்ந்திருக்கிறேன். அங்குள்ள நூற்றுக் கணக்கான முகாம்களில் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் வரை அகதிகளாக வாழ்கின்றனர். அங்கு வாழும் அகதிகளின் அடிப்படைத்தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். சில முகாம்களில் சேரிப் புற வீடுகள் போன்று தற்காலிக வீடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களே தற்காலிக இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டு அகதிகளாகத் தமிழகத்திற்கு வருகை தருபவர்கள் தங்கவிடப்பட்டிருந்தனர். இலங்கையிலிருந்து அகதியாக வரும் மக்கள் இங்கு வைத்தே "அவர்கள் உண்மையான அகதிகள்தானா? இல்லையா?" என்பதை உறுதி செய்கின்றனர். அதன் பின்னர் அங்கிருந்தே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமை.இந்தத் தடுப்பு விசாரணை ஒருகிழமை அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் கூட இடம்பெறும். வரும் அகதிகள் போராளிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பட்சத்தில் மண்டபத்தில் உள்ள தடுப்பு முகாம்களிலோ அல்லது செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லியில் இருந்த சிறப்பு முகாம்களிலோ தடுத்து வைக்கப்படுவர்.

முகாம்களில் சராசரியாக சுமார் 20 ஆயிரம் குடும்பங்களைச் சார்ந்த 65 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். இவர்களைத் தவிர முகாம்களுக்கு வெளியே சுமார் 35 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் சிலர் இலங்கைக்கு மீளவும் திரும்பி வருகின்றனர். ஒருசிலர் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கும் புலம்பெயர்ந்து செல்கின்றனர். இவ்வாறு வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கை முறை அசாதாரணமானது.

### தொழில்கள்

இவர்களில் ஆண்கள் அத்திபாரம் வெட்டுகின்றவர்களாகவும், கட்டடம் கட்டும் கூலியாகவும், மூட்டை தூக்கும் தொழிலாளியாகவும், வீடுகளிற்கு வர்ணம் பூசுகின்றவர்களாகவும், கோழிப்பண்ணையில் கூலியாகவும், துறைமுகக் கூலியாளராகவும் தொழில் செய்கின்றனர். பெண்கள் பஞ்சாலைகளிற்கு செல்லுதல், அரிசியாலைகளுக்குச் செல்லுதல். இவ்வாறு பல்வேறு தொழில்களிற்குச் செல்கின்றனர்.


### கல்வி

ஒருசில முகாம்களில் வாழ்கின்ற மாணவர்கள் தத்தமது முகாம்களில் உள்ள ஈழத்து ஆசிரியர்களிடம் ஆரம்பக் கல்வியைக் கற்கின்றனர். பல மாணவர்கள் பணம் செலுத்தி தமிழக ஆரம்ப வகுப்புக்களிலும், தமிழக அரச பள்ளிகளிலும், தனியார் பாடசாலைகளிலும் கல்வி கற்று வருவதுடன் மேற்படிப்பினைத் தனியார்

20ஆம் பக்கம் பார்க்க

**பார்வை நயம் 12**

# பயணமும் பாராட்டும்



கணபதி சர்வானந்தா

பஸ் வந்தது. நீண்ட பயணத்திற்காக காத்திருந்த அனைவரும் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். சிலர் இருந்தனர். சிலர் இருக்கைகளின் இலக்கத்தைச் சரி பார்த்து கொண்டிருந்தனர். சிலர் தலைக்குமேலுள்ள கம்பி சட்டங்களில் தங்கள் உடைமைகளை செருகிக் கொண்டிருந்தனர். மக்களை ஒழுங்குபடுத்த வேண்டிய நடத்துநரைக் காணவில்லை. பஸ் சாரதி மட்டும் இருக்கையில் இருந்தபடி வெற்றிலையை குதப்பிக்கொண்டிருந்தான். அவனது கண்கள் சிவந்திருந்தன. எனது கிராமத்திலுள்ள ஆடுகளும் இவனைப்போலவே, எந்த நேரமும் வாயசைத்துக் கொண்டே இருக்கும். அவன் இடையிடையே வலது பக்க யன்னல் வழியாக எச்சிலைத் துப்புவதும், பின்னர் அழுக்குப் படிந்திருந்த பழைய பிளாஸ்ரிக் போத்தலிலுள்ள நீரால் வாய் கொப்பளிப்பதுவும், பின்னர் மீண்டும் வெற்றிலை போடுவதுமாக இருந்தான். பஸ்ஸின் வலது பக்கமாகத் தெருவில் சென்று கொண்டிருந்த வண்டிகள் பல அவனது எச்சில் மழையில் நனைந்தபடி சென்றுகொண்டிருந்தன. அவனுக்கு அது பற்றிக் கவலையில்லை.

பஸ்ஸின் பின் கதவு வழியாகப் "புறப்படலாம்" என்று கூக்குரலிட்டவாறு மணியை அழுத்திக் கொண்டு உள்ளே வந்தான் நடத்துநர். அவன் வாயிலும் வெற்றிலை இருந்தது. அவன் உதடுகள் "லிப்ஸ்ரிக்" பூசிய பெண்கள் உதட்டைப்போல சிவந்து கிடந்தது. அவன் பேசும்போதும் அவன் முன்னிருந்தவர் மீது வாய் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது. அவன் பயணச்சீட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தான். எனக்குப் பக்கமாக இருந்த இருக்கையில் யாரும் இல்லை. "வருகிறவர் எனக்குத் தொந்தரவு தரத்தக்கவராக இல்லாதிருக்க வேண்டும்", என ஆண்டவனை ஒருமுறை பிரார்த்தித்துக் கொண்டேன்.

பஸ் நகர ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. திடீரென இளவயதுப் பெண்ணொருத்தி சிறுவனொருவனைக் கையில் பிடித்தபடி அவசர அவசரமாக ஏறிக் கொண்டாள். வெறுமையாய் இரு இருக்கைகள் மாத்திரமிருந்தன. அதில் ஒன்று என் அருகில் இருந்தது. அதில் சிறுவனை அமரச் செய்து விட்டு இன்னும் சற்றுப் பின்னே சென்று வயோதிபர் ஒருவருக்கு அருகாமையிலிருந்த இருக்கையில் தான் அமர்ந்து கொண்டாள். அந்தச் சிறுவனின் வயது ஐந்துக்கு முன்பின்னாகத்தானிருக்கும். அவனது கையில் ஒரு ஆங்கில மொழி அச்சுக்களைக் கொண்ட சிறுவருக்குரிய புத்தகமும், 'ரிப்பி ரிப்பி' பைக்கற் ஒன்றும் இருந்தது.

பஸ் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. சிறுவன் எழுந்துபோய் நடத்துநரிடம் எதையோ சொன்னான். அவன் வாயைத் திறக்காமலே இடமும் வலமும் தலையசைத்து "இல்லை" என்று பதில் சொன்னான். பின்பு தன்னுடன் வந்த பெண்ணை "அம்மா" எனக் கூப்பிட்டவாறு அவள் அருகில் சென்று எதையொ சொன்னான். அவள் மடியில் அமர்ந்து கொண்டான். அது அவனுக்கும் அவளுக்கும் அசௌகரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும். பின்னர் திடீரென என்னருகே உள்ள இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டான். என்னை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். இப்போது 'ரிப்பி ரிப்பி' பைக்கற் பாதியாயிருந்தது. மீண்டும் எழுந்து சென்றான். நடத்துநரிடம் எதையோ கேட்டான்.

நடத்துநர் அந்தச் சிறுவனின் தாயாருக்கு அருகில் இருந்தவரிடம் போய் எதையோ சொன்னான். அவர் பேசாது, மறுப்பதுபோல் மௌனமாயிருந்தார். என்னிடம் வந்தார். "அந்தச் சிறுவன் தாயாருடன் சேர்ந்திருந்து பயணிக்க விரும்புகிறான். இருக்கையில் மாறி இருக்க முடியுமா?" என்று கேட்டான். மறுக்காது மாறி அமர்ந்து கொண்டேன். தற்போது சிறுவன் தாயாருடன் இணைந்து இருந்தான். அவள் அரவணைப்பில் இருந்தான். அவன் தன் இருக்கையிலிருந்தவாறு என்னை எட்டிப் பார்த்துச் சிரித்தான். திடீரென எழுந்து வந்தான். எனது காதருகில் வந்து "நன்றி" என ஆங்கிலத்தில் சொன்னான். தனது கையிலிருந்த 'ரிப்பி ரிப்பி'யை நீட்டினான்.

வாங்க மறுத்த என்னை வற்புறுத்தினான். அவனைச் சந்தோஷப்படுத்துவதற்காக ஒன்றிரண்டை எடுத்துக் கொண்டேன். தனது இருக்கையிலிருந்து அடிக்கடி என்னைப் பார்ப்பதுவும் சிரிப்பதுவுமாயிருந்தான். பயண இடையில் தேநீருக்காக வண்டி நிறுத்தப்பட்டது. சிறுவனும், தாயாரும் இறங்கிப் பின் ஏறிக்கொண்டனர். சிறுவனின் விரல் இடுக்கில் இரண்டு மூன்று "மென்ரோஸ்கள்" காணப்பட்டன. ஒன்றை நடத்துநருக்கு நீட்டினான். இன்னொன்றை எனக்குத் தந்தான். மீண்டும் அவன் எனக்கு நன்றி சொன்னான். பயண நெடுகிலும் பல வழிகளிலும் அவன் என்னைப் பாராட்டிக் கொண்டே இருந்தான்.

பாராட்டுவது எந்த வடிவத்திலும் இருக்கலாம். அது ஒரு தனிமனிதன் சார்ந்தது மட்டுமல்லாது ஒரு சமூகம் சார்ந்து அடிப்படையில் நின்று எழுகின்ற பண்புகளில் ஒன்று என்றே நான் எண்ணிக் கொள்ளுகிறேன். திருப்தியுடனான மனது ஆரோக்கியப் படுகிறது. அந்த ஆரோக்கியத்தின் வெளிப்பாடே பாராட்டவேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்துகிறது. பாராட்டுபவரும் பாராட்டைப் பெறுபவரும் ஆன்ம ஆரோக்கியத்தைப் பெறுகின்ற தருணம் அது. பாராட்டுவது ஒரு தர்மம். அதையும் ஆன்மிகம் தனது அங்கங்களில் ஒன்றெனக் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவின் டயரி



சுதந்திரத்தின் நீள அகலங்களை கணக்கெடுப்பதிலேயே காலத்திடம் அடிமைப்பட்டு போய்விடுகின்றோம். உயிருள்ள அனைத்துமே விடுதலையை விரும்புபவை. ஆனால் நம் சுதந்திரம் என்பதோ பிறரைப் போல் ஆக வேண்டும் என்பதாகவே இருக்கின்றது. இன்னொன்றினுடைய நகலாகவோ அல்லது போலியாகவோ இருப்பதற்காகவே போராடுகின்றோம். ஆனால் அது முழுமையான அடிமைத்தனமாக மாறிவிடுவதைத்தான் அன்றாட வாழ்வில் உணர முடிகின்றது.

பெண்ணினுடைய விடுதலை என்பது பொருளாதாரத்திலிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை பெண் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மாதத்தின் இறுதியில் எங்கள் வீடுகளிலெல்லாம் கடன் பிரச்சினை இன்றி வட்டிப் பிரச்சினையின்றி நிம்மதியாக வரவு - செலவைக் கொண்டு நடத்த முடிகின்றது என்றால் அது அம்மாவின் திட்டமிட்ட வரவு - செலவு முறையாலேயே நடக்கின்றது என்பதை நம்மில் பலர் அறிந்திருப்போம்.

நான் எப்பொழுதும் சமையலறையையே மிகப் பெரும் பொருளாதார மையமாகப் பார்க்கின்றேன். சுதந்திரத்திற்கான, விடுதலைக்கான திறவுகோல்கள் அங்குதான் இருப்பதாக உணர்கின்றேன். பெண்ணியம் என்கின்ற கருத்தின், விவாதத்தின் அடிப்படையில் சமையல் செய்வதையும் வீட்டு வேலைகள் செய்வதையும் விட்டு வெளிவரவேண்டும் என்கின்ற மன நிலையே ஓங்கி இருக்கின்றது. உண்மையில் அந்த சமையலறைப் பொருளாதாரத்தின் மூலம் நாம் எவ்வாறு முன்னேற்றம் அடையலாம் என்பதை சிந்திப்பதுதான் விவேகமானது.

"பெண், முதலாளியச் சமூக உற்பத்தி முறையில் நுழையும் போது அவளுடைய விடுதலை சாத்தியம் ஆகும்" என்னும் ஏங்கல்ஸின் கருத்தை நாம் கொஞ்சம் கவனத்தில் எடுத்துத் தான் ஆக வேண்டும்.

பொருளாதாரம் என்கின்ற பலமான விடயம் அவளுடன் இருப்பதை அவள் உணர வேண்டும்.

ஆனால் ஏங்கல்ஸின் கருத்தும் தோற்றுப்போன நிலையே காணப்படுகின்றது. ஏனெனில் முதலாளியாகி சமூக உற்பத்தியில் ஈடுபடுகின்ற பெண் அதற்கு சமாந்தரமாக வீட்டிலும் தன்னுடைய உழைப்பை கொடுக்க வேண்டிய தேவையே இங்கு நிலவுகின்றது.

நம்மூரில் குடும்பம் என்கின்ற சமூகத்தின் அடிப்படை கட்டமைப்பு வெறுமனவே ஆண்வழி (அப்பாவின்) சம்பாத்தியத்தில் மட்டும் தங்கியிருப்பதில்லை. அங்கு பெரும்பான்மையான வெளியக உழைப்பு என்பது ஆணின் கரங்களிலும் அதனைக் கட்டுப் பாத்திற்குள் வைத்திருக்கும் பொருள் முதல்வாதியாக பெண்ணே இருக்கின்றாள். இருப்பினும் அந்த பொருள் முதல்வாதம் என்பது அன்பின்பாற்பட்டதாக நலிந்து போகின்றது என்பதுதான் கண்கூடு.

சமத்துவம் என்கின்ற கோஷங்களின் அடிப்படையில் நமக்கு வழங்கப்படுகின்ற அனைத்துமே சலுகைகள் மட்டுமே. அவை முழுமையான விடுதலை ஆகாது. விடுதலை பற்றிய தெளிவு பெண்ணிற்குள் எப்போது பூரணமாக உணரப்படுகின்றதோ அன்றுதான் அவள் அதற்கான ஒரு கல்லைத்தன்னும் நகர்த்தத் தொடங்கியிருப்பாள்.

சுதந்திரம் பற்றி என்னுடைய தோழி ஒருத்தியுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அவளுக்கு சுதந்திரம் என்பது முக்கால் பங்கு கிடைத்துவிட்ட ஒரு போலி நம்பிக்கை உருவாகியிருந்தது. விரும்பிய உடை, உணவு, ஓரளவுக்கு கல்வி, நல்ல குடும்ப வாழ்க்கை இத்தனையும் இணைந்ததுதான் சுதந்திரம் என்பதாக அவள் மிகப்பெரும் நம்பிக்கை கொண்டிருந்தாள். நம்மில் பலரும் சமூகம் நமக்கு விதித்துள்ள தடைகள் அத்தனையையும் பெரும் கௌரவமாக நம்பிக் கொண்டிருக்கின்றோம். அந்த நம்பிக்கை எண்ணங்கள் உளவியலில் ஆழமாகப் பாதிக்கப்பட்டு விட்டது. அந்த அடிப்படை மன நிலையை உடைப்பது என்பதுதான் சுதந்திரத்தின் முன்னே உள்ள மிகப் பெரும் தளை.

குடும்பம் பாதுகாப்பின் உறைவிடம் என்பதாக நம்பவைக்கப்படுகின்றோம். குடும்பம் என்பது வெறும் பந்தங்களின் உறைவிடம். நான் அறிந்து குடும்பம் என்கின்ற அலகில்தான் அரசியலை விட அதிக அதிகாரத்துவத்தை ஆண் கொண்டுள்ளான்.

உண்மையில் பெண்ணினுடைய சமவுரிமை, சுதந்திரம் பற்றி அன்றிலிருந்து இன்று வரை பெண்ணை விட அதிகம் புரிந்து வைத்திருப்பது ஆண்கள் தான். இருப்பினும் நடைமுறையில் ஆண்களால் அதை செயற்படுத்த முடியாது போயுள்ளமை என்பது சமூகத்தின் விதிமுறைகளின் பாற்பட்டது. ஆணே சுதந்திரத்தை அளித்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்ற உளவியலில் பெண்கள் இல்லை. காலம் காலமாக கட்டமைக்கப்பட்ட அடிமைத்தனத்திலேயே நாம் சகிக்கத் தொடங்கி விட்டோம். அதுவே நம் துயரம்.

கற்பிதங்களிலிருந்து நம்மைக் கொஞ்சம் ஒதுக்கி வைப்போம். நமக்குள் இருந்து சுதந்திரத்தை தேடத் தொடங்குவோம். அது நமக்குள்தான் உள்ளது.

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



# ஓர் அகதியின் கதை

பாடசாலைகளிலும் கல்வி கற்று வருவதுடன் மேற்படிப்பினைத் தனியார் மற்றும் அரச கல்லூரிகளிலும் கற்று வருகின்றனர்.

### வாழ்க்கை முறை

எதுவுமே இங்கே எமக்கு சொந்தமில்லை இருக்கும் மட்டும் இருந்து விட்டு நாட்டிற்குத் திரும்பி விடுவோம் என்ற நப்பாசையுடன் தமிழகத்தில் வாழும் எமது மக்கள் அன்றாடம் உழைத்து சாப்பிடுவதுடன் நாளும் பொழுதும் தொலைக் காட்சி பார்த்தல் மாலையில் கரப்பந்து விளையாட்டு. பொது வாசிப்பிடத்தில் பத்திரிகை பார்த்தல் என நாளைக் கழிப்பது குறிப்பிடத்தக்கது.

### பாதுகாப்புக் கெடுபிடி

தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிற்கு அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வருகை தரும் நாட்களில் அகதிகள் தத்தமது முகாம்களை விட்டு வெளியே செல்ல முடியாது. புலனாய்வாளர்களின் தீவிர கெடுபிடிகளின் கீழ் தான் மக்களின் வாழ்க்கை நகர்கிறது.

### விளையாட்டு

நான் இலங்கைக்கு 2009 களில் இடம்பெயரும் வரை பெரிய அளவில் முகாம் மக்களை இணையத்தளம், முகநூல் பாவனை கவரவில்லை. பாரம்பரிய விளையாட்டுக்களான கபடி, கிளித்தட்டு, கிட்டுப்புல்லு போன்ற பல விளையாட்டுக்களும் ஆடப்படுவது குறிப்பிடத்தக்கது. இதுதவிர மலசலகூட வசதி இல்லாத படியினால் மலம் கழிக்க காடுகளிற்குள் வெகுதூரம் சென்ற திரும்பும் வழியில் சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாட்டை விளையாடி வருகின்றனர்.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



# நெடுவாசல்: இயற்கையைக் காக்க இன்னொரு புரட்சி

விவசாயிகளின் நிலத்தைப் பறித்துத்தான் வளர்ச்சியைக் காட்ட வேண்டுமென்றால் அப்படியொரு வளர்ச்சி தேவையில்லை என்று உரக்கச் சொல்லலாம். தனியார் நிறுவனங்கள் லாபம் கொழிக்க எளிய கிராம மக்களின் வயிற்றில்தான் அடிக்க வேண்டுமா என்பதை இல.கணேசன் மாதிரியானவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### காவு கொடுக்கப்படும் கிராமங்கள்

இந்தியாவின் எரிபொருள் தேவைகளைச் சமாளிக்க வெளிநாடுகளை எதிர் பார்ப்பதைக் குறைத்துக் கொள்ளலாம் என்று பிரதமர் மோடி சொல்வது நல்ல விஷயம்தான். ஆனால் அதற்காக எத்தனை கிராமங்களைக் காவு கொடுக்கப் போகிறோம்? எரிபொருளுக்காக பல கிராமங்கள், சாலை மேம்பாட்டுக்காக பல கிராமங்கள், தொழிற்சாலைகளுக்காக இன்னும் பல கிராமங்கள் என்று ஏதாவதொரு காரணத்தைச் சொல்லிச் சொல்லி கிராமங்களை அழித்து விவசாயிகளுக்கு நஷ்டஈடு என்ற பெயரில் ஒரு தொகையைக் கொடுத்து அவர்களை விரட்டியடித்துவிட்டு எதைச் சாதிக்கப் போகிறோம்?

தனியார் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் கொழிப்பதற்கு அப்பாவி கிராமத்து மக்களை பலி கொடுப்பது பாவமில்லையா? இந்தியாவின் முதுகெலும்பே கிராமங்கள்தான் என்பதையெல்லாம் வெறும் ஏடுகளில் மட்டும் தான் வாசித்துக் கொண்டேயிருக்கப் போகிறோமா? நாக்கில் நரம்பில்லாமல் பேசுவதற்கு முன்பாக இல.கணேசன் மாதிரியான பெரிய மனிதர்கள் எளிய மக்களை ஒரேயொரு வினாடி நினைத்துப் பார்க்கட்டும். ஆனால் அந்த எளிய மக்கள் தங்களை மட்டுமல்லாது, தங்கள் முதுகில் சவாரி செய்யும் பணக்கார முதலைகளையும் வாழவைக்கும் இயற்கையை காப்பாற்றப் புறப்பட்டு விட்டார்கள். இன்னொரு மெரீனாவாக நெடுவாசல் மாறத் தொடங்குகிறது. இது தனிமனித நலனுக்கான புரட்சியல்ல. இயற்கையைக் காப்பதற்கான எழுச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வடமோடி தென்மோடி கூத்து

“யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட கூத்துக்களே மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன” என்ற கருத்தை மௌனகுரு தமது ஆய்வில் எடுத்து முன்வைத்துள்ளார். “மட்டக்களப்பில் ஆடப்படும் பெரும்பாலான கூத்துக்கள், யாழ்ப்பாணத்திலும் ஆடப்பட்டன. ஆகவே மட்டக்களப்பிற் காணப்படும் வடமோடி தென்மோடி மரபுக்கும் யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் வடமோடி தென்மோடி மரபுக்கும் தொடர்புண்டு” என்பதை மறுக்கவியலாதே.

வடமோடி,தென்மோடிக் கூத்துக்களில் முதற்கண் காப்புப் பாடவேண்டும். பெரும்பாலும் வடமோடியிலே காப்பு வெண்பாவாகவும், தென்மோடியிலே விருத்தப்பாவாகவும் இருக்கும். உதாரணமாக வடமோடியாக ஆடப்படும் இராம நாடகத்தில் பின்வரும் வெண்பா பாடப்பகின்றது

“ஆனைமுகத் தோனே அரனார் திருமகனே
பானை வயிற்றுப் பரம்பொருளே- கானம்
கடந்த ஸ்ரீராமன் காதைதனை ஈண்டு
தொடர்ந்தேன் அருள்வாய் துணை” - சின்னையா.



வடமோடிக் கூத்தார் பாரமான உடைகளையே அணிகின்றனர். இவர்கள் அணியும் முடி பாரமானது. அது பலாமரம், வெக்கிளுவை மரங்களினால் செய்யப்படுகின்றன. முடியின் மீது கண்ணாடிகள் பதிக்கப்படும். முடியின் உச்சியில் சந்திரவட்டக்குடை அமைக்கப்படும். மட்டக்களப்புக் கூத்துகளிலும் இவ்வாறே அணிகின்றனர். “மட்டக்களப்புக் கலைஞர்கள் ஒப்பனைக் கலையை யாழ்ப்பாணத்திலேயே க்ற்றுக்கொண்டனர் என்பர். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தவரே மட்டக்களப்பினர்க்கும் உடுப்புக்களையும் ஏனைய அணிகலன்களையும் வழங்கி வந்தனர்.” - ஒப்பனை கலைஞர் ஐ. பிலிப்பு

“தென்மோடிக் கூத்தர்கள் பாரம் குறைந்த முடிகளை அணிவர். இவை முள்முருக்கு மரத்தினால் செய்யப்பட்டு கண்ணாடி முதலிய பதிக்கப்படும். வெக்கிளுவை மரமும் பாரமில்லாத வொன்றாகையால் இம்மரமும் தென்மோடிக் கூத்தர்களால் பயன்படுத்தப்படும்.”

வடமோடியினர் அணியும் உடுப்பை கரப்பு உடுப்பென்பர். அரசர், மந்திரி சேனாதிபதி ஆகியோர் ஐந்து தட்டுள்ள கரப்புடுப்பை அணிவர். சாதாரண பாத்திரங்கள் மூன்று தட்டுள்ள கரப்புடுப்பை அணிவதைக் காணலாம். கரப்புடுப்பு ஒவ்வொரு தட்டுக்கும் ஒவ்வொரு பிரப்பம் கம்பு வளையம் செய்து பொம்மி நிற்கச் செய்வர். கரப்புடுப்பின் அடியில் பளிங்கு மணியும் பட்டு நூலும் தொங்கவிடுவர்.

தென்மோடியினர் கரப்புடுப்பு அணிவதிவில்லை. அவர்கள் பட்டுச்சேலையை தாறு பாய்ச்சிக் கட்டி மேலே மணிகள் பொருத்தப்பட்ட சட்டைகளை அணிவர்,இவர்களுடைய ஆட்ட நுணுக்கங்களைப் பார்க்க வசதியாக இவ்வகை உடுப்புக்கள் உதவுகின்றன. வடமோடியினர் வில் அம்பு தண்டாயுதம் பட்டாரி ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்துவர். ஆனால் தென்மோடியினர் வாள் ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு ஆடுவர்.சில பாத்திரங்கள் வாளுக்குப்பதிலாக நன்றாக சீவி எடுத்தக தடிகளை பயன்படுத்தக் காணலாம்.

இரு சாரரும் கைப்புயம், தோட்புயம் என்பவற்றையும் அணிவர். இவையும் முருக்கம் செத்தல்களால் செய்யப்பட்டு கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருக்கும். இவ்விடயம் அரங்கம் ஆடல்,பாடல் ஒப்பனை என்பன பற்றிய இயலில் மேலும் விரிவாக ஆராயப்படும். இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து வடமோடி தென்மோடி பற்றிய பின்வரும் உண்மைகள் தெரிய வருகின்றது.

வடமோடிக்கூத்து இதிகாச புராண கதைப்பொருளைப் பயன்படுத்தி நாடகத்தை அமைக்கின்றது. தென்மோடிக் கூத்து நாட்டு கற்பனைக் கதைகளை கையாண்டு நாடகத்தின் வடிவத்தினை உருவாக்குகின்றனர்

நாட்டுக்கூத்தின் மோடிகளுள் தென்மோடிக் கூத்தே பழமைவாய்ந்ததாக காணப்படுகின்றது. அலங்காரரூபன் நாடகம், அநுருத்திரன் நாடகம் என்பன தொன்மை வாய்ந்த தென்மோடிக்கூத்துக்கள் ஆகும். வடமோடிக் கூத்தில் போர் சார்ந்த காட்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். தென்மோடிக் கூத்தில் காதல் சார்ந்த காட்சிகளுக்கு முதன்மை அளிக்கப்படும் இதன் காரணமாக வடமோடிக் கூத்தில் வீர உணர்வு முதன்மை பெறும்.தென்மோடி கூத்தில் சிருங்கார சுவை அதிகமாகக் காணப்படும்.

வடமோடிக் கூத்தில் ஆடல்கள் வேகமானதாக அமைந்திருக்கும் தென்மோடிக் கூத்தில் ஆடல்கள் நுணுக்கம் வாய்ந்ததாக காணப்படும். வடமோடிக் கூத்தில் நடிகனது பாதம் முழுவதும் நிலத்தில் படும் வகையில் ஆடல் மேற்கொள்ளப்படும். தென்மோடிக் கூத்தில் பாதத்தின் முற்பகுதி அல்லது குதிக்கால் நிலத்தில் படும்வகையில் ஆடல் மேற்கொள்ளப்படும். இதன் காரணமாக தென்மோடியுடன் ஒப்பிடுகையில் நடிகனின் ஆடல் இலகுவானதாக அமைந்தது. பாதத்தின் முற்பகுதி அல்லது குதிக்கால் நிலத்தில் படும் வகையில் ஆடல் மேற்கொள்வதனால் நடிகனின் ஆடல் கடினமாக அமைந்து விடுகின்றது.

வடமோடியில் நடிகன் வரவு ஆட்டத்தை நிகழ்த்திய பின் தனக்குரிய வரவுப்பாடலை பாடுவான். தென்மோடியில் வரவு ஆட்டத்துடன் நடிகன் களைத்துப் போவதனால் நடிகனுக்குரிய வரவிற்கு மட்டும் வரவுப்பாடல் பாடப்படும். ஏனைய சந்தர்ப்பங்களில் வரவுப்பாடல் பாடப்படுவதில்லை.

வடமோடிக்கூத்துக்கள் பெரும்பாலும் வட்டப்பாங்கில் ஆடல் இடம் பெறும். தென்மோடிக்கூத்தில் நேர்கோட்டுபாங்கில் ஆடல் நிகழும்.

வடமோடியில் பொடியடி விசனம்(வட்டமாக ஆடுதல்) குத்திமிதி பாய்ச்சல் போன்ற ஆடல்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர். தென்மோடிக்கூத்தில் சீரணிஉலா ஒய்யாரம் போன்ற ஆடல் வகைகள் பயன்படுத்துகின்றனர்.



## சங்கிலியன் தோப்பு

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாறுடைய யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி சங்கிலி குமாரன் என்று அறியப்படும் எட்டாம் செகராசசேகரன் போர்த்துக்கேய ஆக்கிரமிப்பாளர்களினால் 1619ஆம் ஆண்டு கொல்லப்பட்டதுடன் முற்றுப்பெற்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் சான்றுகளாக இப்பொழுது எஞ்சியிருப்பவை நல்லூர் - சங்கிலித்தோப்பு குறிச்சியில் எஞ்சியிருக்கும் அரண்மனை வாயிலும், மந்திரி மனையும், மன்னன் சங்கிலியனின் சிலையுமே. இவற்றில் அரண்மனை வாயிலும்,

மந்திரி மனையும் எந்தவித பராமரிப்புகளும் இன்றி அழிவடைந்து கொண்டிருக்கின்றன



## தாலாட்டு

யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்ற நாட்டார் இலக்கியங்களிலே சிறப்பு பெற்றதாக தாலாட்டு காணப்படுகின்றது. குழந்தை பிறந்து 31ஆம் நாள் குழந்தையின் மாமன் அக் குழந்தையை தொட்டிலில் இடும் போது பெரியதாய், சிறியதாய் முதலியவர்களினால் தாலாட்டு முதலில் பாடப்படும்.

“ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

சீரார் பசுங் கிளியே
தெவிட்டாத
செந்தேனே

பேரார் குலக்
கொழுந்தே
பெருமானே
ஆராரோ....”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook

## கடந்தவார சமூக இணையத்தர வரிசையிலிருந்து...




### தேசத்துப் பாடகனுக்கு அஞ்சலி

புரட்சிப் பாடகர் எஸ்.ஜி.சாந்தனின் மரணம் உலகெங்கும் வாழும் தமிழர்களை சோகத்தில் ஆழ்த்தியது. இதன் பிரதிபலிப்பை சமூக வலைதளங்களில் காண முடிந்தது.

சாந்தன் இறப்பதற்கு முன்னரே சில தகவல் சொல்லிகள் தவறான செய்தியைப் பதிவிட்டிருந்தனர். இதனால் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் சில மணி நேரங்களிலேயே சாந்தன் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

தங்களின் அபிமான பாடகர் சாந்தனின் மரணத்தால் நொந்துபோன ரசிகர்கள் அவரின் புகைப்படங்களுடன் கண்ணீர் அஞ்சலிகளாகவும், அனுதாப செய்திகளாகவும் தங்கள் பதிவுகளை பதிந்தனர். கூடவே அவருக்கு முகவரி கொடுத்த புரட்சிப் பாடல்களும் அவற்றின் இணைப்புகளும் (லிங்க்) சுவர்களை நிறைத்திருந்தன.

சாந்தனின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் பலரும் நிகழ்வை சமூக வலைதளங்கள் வழியே நேரடியாக அஞ்சல் செய்தும் இருந்தனர். இதனால் கடந்த வாரம் சமூகவலைத் தளங்களுக்கும் பதிவர்களுக்கும் உணர்ச்சி வாரமாக அமைந்து விட்டது.




### நவீனத்தில் பக்தி வெளிப்பாடு

கடந்த வாரம் சமூகவலைத் தளங்களில் இரண்டாவது இடம்பிடித்த விடயம் சிவ ராத்திரி விரதம்தான்.

இளம் சமூகத்திடம் பக்தி இல்லை என்று குறைகூறுவோருக்கு தங்கள் பதிவுகளால் பதில் சொல்லியிருக்கிறார்கள் இளம் பதிவர்கள். நண்பர்கள் புடைசூழ கோவில்களில் நிற்கும் புகைப்படங்களால் நிறைந்து வழிந்தன சமூகவலைதளங்கள்.

கோவில்களை எட்டிப் பார்க்காதவர்களும் கூட ஆலயங்களின் முகப்புப்பகுதியிலும் சுவாமி சிலைகளின் அருகேயும் நின்று படங்களை அதிலும் குறிப்பாக செல்பிகளை எடுத்து தங்களின் பக்தியை(?) பகிர்ந்து வெளிப்படுத்தியிருந்தனர்.

விரதம் அனுட்டித்தவர்கள், அனுட்டிக்காதவர்கள் என்ற வேறுபாடின்றி சிவராத்திரி தொடர்பான பதிவுகளும் படங்களும் சமூகவலைத் தளங்களை நிறைத்து இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

### நெடுவாசல் எகிறும் எதிர்ப்பு




தமிழகத்தின் நெடுவாசலில் எரிவாயு திட்டத்தை நடைமுறைப் படுத்த இந்திய அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

சூழலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இந்தத் திட்டத்துக்கு பெரும் எதிர்ப்புக் கிளம்பி வருகின்றது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களிலும் கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன.

எப்போதும் போராட்டங்களை எதிர்நோக்கிக் காத்திருக்கும் முகப் புத்தகப் போராளிகளுக்கு நெடுவாசல் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

சிலர் அமேசனில் அமெரிக்கா முன்னெடுத்த திட்டத்தின் பாதிப்புக் குறித்த தகவல்களையும் வெளியிட்டு அசாடித்தனர்.

## சுவரில் கொய்தவை

**Yarl Theepan**

என்னதான் எங்களைச்சுற்றி எவளவு உறவுகள் இருந்தாலும்
அம்மா என்ற உறவைப்போல எப்பவும் வராது
அனுபவம்

**மயூரப்பிரியன் mayurapriyan**

" தனக்கு உதவியவர்கள்கூட வாழ்க்கையில் முன்னேறக் கூடாது என்கிற சுயநல எண்ணத்தோடு இருப்பார். 'நான் மட்டுமே வெற்றி பெற வேண்டும்' என்கிற எண்ணம் இவருக்கு எப்போதும் தலைதூக்கி இருக்கும்."

இது தான் தோல்வியின் முதல் படி.


**Jegan Janakeswaran**

"என்ன மாத்தயா...நீங்க பாட்டுக்கு காணிகளை விடுவிக்கிறீங்கள்....நீங்கள் இப்பிடிச் செய்தால் எங்களுக்கு என்ன மரியாதை?எங்களுக்குப் பிரச்சினையில்லை வெளிநாட்டிலை செட்டிலாயிடுவம்...யோசிச்சுப் பாருங்கோ ..அவர் வந்தால் உங்கள் நிலைமை என்னாகும்?....இனிமேலாவது எதைச் செய்தாலும் எங்களுக்குள்ளாலை செய்யுங்கோ?இல்லாட்டி அவர் வந்திடுவார்....

**Thangarajah Thavaruban**


வேலையற்ற #பட்டதாரிகள் போராடிய செய்தி தேடினால் சிம்பாவே, நபீபியா ,இலங்கையில் மட்டுமே அறியக்கிடக்கிறது. பட்டம் தந்தா வேலையும் கொடுக்கோணும் என்பது அரசியல்வாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வாக்கு வங்கி சந்தைப்படுத்தல் முறைமை. அரசு இந்த முறையினை ஒழிக்கவேண்டும் எல்லாவற்றுக்கும் போட்டிப்பரீட்சை வைப்பதே நல்லது. திறமையிருந்தால் வேலை நிச்சயம் கிடைக்கும். நிறைய இடத்தில் வேலை இருக்கு அதற்கு திறைமையானவர்கள் இல்லை.

## இந்தவார மீம்ஸ் (Meme)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து மடப்பண்பாடும் தெருமூடி மடமும் 03

யதார்த்தன்

## சத்திரங்களாகச் செயற்பட்ட மடங்கள்

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பெரிய ஆலயங்களில் மடங்கள் காணப்படுகின்றன. அவை அன்னதான மடங்களாக இருக்கின்றன. செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார், நயினை நாகபூசணி, தெல்லிப்பழை துர்க்கை அம்மை கோவில் போன்றவற்றில் காணப்படும் மடங்கள் பழமையானவை. கோயில் மடங்கள் பெரும்பாலும் சமயப்பெரியவர்களின் குருபூசை மடங்களாகவும் நினைவு மடங்களாகவும் உள்ளன.

## நேர்த்தி முதலான சடங்குகளும் நம்பிக்கைகளும்

யாழ்ப்பாணத்தில் மடங்கள் நேர்த்தி (நிவர்த்தி) முதலான நம்பிக்கையின் பொருட்டு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கர்பிணிப்பெண்கள் இறந்தால் அவர்களின் ஆன்ம சாந்திக்காக மடம், சுமைதாங்கி, ஆவுரஞ்சிக்கல், கிணறு, தொட்டி அல்லது கேணி கொண்ட மடத் தொகுதியை அமைக்கும் நம்பிக்கைகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இரவுப்பயணம் என்பவற்றின் போது திருடர் பயம் தவிர, பேய், முனி போன்ற நம்பிக்கைகளின் பொருட்டும் மடங்கள் அமைக்கப்பட்டன. அத்தோடு திண்ணைக் கல்வி முறைக்கும் மடங்கள் பயன்பட்டதாயும் அறிய முடிகின்றது.

## பொழுதுபோக்கு

ஊர்களில் காணப்படும் மடங்கள் மாலைவேளைகளில் மக்கள் ஒன்று கூடும் இடங்களாகவும் அரட்டை, சிறு விளையாட்டுக்களை ஆடும் இடங்களாகவும் இருந்துள்ளன. இன்றும் மடங்கள் இளைப்பாறி அரட்டை செய்யும், மனித பகிர்வுகளுக்கான இடமாக இருக்கின்றன.

## தெருமூடிமடங்கள்

குமுதா சோமசுந்தரக்குருக்கள் போன்ற மடங்களை ஆய்வு செய்யும் கலை வரலாற்று, தொல்லியல் வரலாற்று ஆய்வாளர்கள் அவற்றைப் பொதுவில் சமயம் சார்ந்தவை, சமூகம் சார்ந்தவை என்றே வகைப்படுத்துகின்றார்கள்.

அதாவது மடங்களை அவர்கள் நோக்க அடிப்படையில் பிரிக்கின்றனர். அதன் மூலம் மடங்களின் நோக்கம், இயல்பு, பயன்பாடு பற்றி வியாக்கியானிக்கலாம். ஆயினும் யாழ்ப்பாணத்தில் உள்ள மடங்களை அமைப்பு அடிப்படையில் பாகுபடுத்தும் போது இவை எல்லாவற்றிலிருந்தும் தெருமூடி மடம் தனித்து நிற்பதனைக் காணலாம்.

நோக்க அடிப்படையில் அவை ஏனைய மடங்களின் பொதுப் பண்புகளைப் பகிர்ந்துகொண்டாலும் தெருவை மூடி அமைக்கும் அமைப்பிலும் தேவை சார்ந்தும் நுட்பமான வேறுபாட்டினையும் கொண்டுள்ளன.

வடக்குப் பகுதியினைப் பொறுத்த வரை இரண்டு வகையான தெருமூடி மடங்கள் இருக்கின்றன.

1. தற்காலிகமாக அமைக்கப்படும் தெருமூடிமடங்கள்.
2. நிரந்தரமான தெருமூடிமடங்கள்.

தற்காலிக தெருமூடி மடங்கள் பெரும்பாலும் கோயில் திருவிழாக்களை ஒட்டி தண்ணீர்ப் பந்தலுடன் கூடிய கொட்டகை அமைப்பினதாக மரங்கள் சலாகைகள், கிடுகு என்பனவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் மடங்களாக இருக்கின்றன. நல்லூர்த் திருவிழா போன்ற கோயில் உற்சவங்களில் போது இப்பொழுதுவரை தற்காலிக மடவமைப்பு வழக்கத்தைக் காணக் கூடியதாகவுள்ளது.

நிரந்தரமான தெருமூடிமடங்கள் அமைக்கும் பண்பாடு போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்பிருந்தே தொடர்ந்து வந்திருக்கின்றது. கி.பி.16 ஆம் நூற்றாண்டின் பின் இலங்கையில் இத்தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டு போர்த்துக்கேயர் காலத்தில் பெருமளவு அழிக்கப்பட்டுமுள்ளது. குறிப்பாக வடமராட்சிப் பிரதேசத்திலும் வலிகாமப் பிரதேசத்திலும் இவ்வாறான தெருமூடிமடங்கள் அதிகமாக அமைக்கப்பட்டன என்று சொல்லபடுகின்றது.

துறைமுக நகரங்களாகவும், கடல் முகப்புத் தளங்களாகவும் இருந்த காங்கேசன் துறை, பருத்தித்துறை போன்ற துறைமுகங்களுக்கான தெருக்கள் மற்றும் பெருந்தெருக்களில் இத்தகைய தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. காரணம் துறைமுகங்கள், சந்தைகள், நகர, கிராம பரம்பல்களுக்கு இடையிலான பயணங்களின் போது ஓய்வு, உணவு, நீர் என்பவற்றிற்காக பயன்படுத்தும் வகையில் இவை அமைக்கப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று மற்றும் தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் இன்று பருத்தித்துறை-தும்பளை வீதியில் பருத்தித்துறை கடல் முகப்புத் தளம், மற்றும் பருத்தித்துறை நகரத்திற்கு அண்மையில் காணப்படும் தெருமூடி மடம் மட்டுமே நிலைத்து நிற்கின்றது.

பல்வேறு காலங்களில் திருத்தப்பட்டும் புனரமைக்கப்பட்டும் வந்த இம் மடம் பழைய தெருமூடிமடப் பண்பாட்டின் தொடர்ச்சியின் அடையாளமாக வாசிக்கப்பட வேண்டியது.

ஆய்வுகளின்படி சுமார் 150 வருடங்கள் பழமை வாய்ந்த மடமாக இது காணப்படுகின்றது.

பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தெருமூடிமடம் அமைந்திருக்கும் இடத்தில் தொடங்கி அதன் வரலாற்று வாசிப்பின் வகிபங்கை மனம் கொள்ள வேண்டும். பருத்தித்துறை வரலாற்றுக் காலம் தொட்டு முக்கியமான கடல் முகப்புத்தளத்திலான துறைமுக நகராக இருந்து வந்துள்ளது, அங்கிருந்து கிளைந்து ஓடும் வீதிகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் இருந்து இயங்கி வரும் ஏனைய கடல் முகப்புத்தளங்களான வல்வெட்டித்துறை, நெடியகாடு, ஊறணி, கந்தவன், கடவை, இன்பருட்டி, வல்லிபுரம், மணல்காடு போன்ற கடல் முகப்புத் தளங்களை நோக்கியும், தென்மராட்சி, யாழ்ப்பாணப் பட்டினம் முதலான குடியிருப்புகளின் பரம்பல்களை நோக்கியும் செல்கின்றன. அவ்வகையில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு அண்மையில் சொல்லப்போனால் துறைமுக நகரின் வாசலாகவே இத் தெருமூடிமடம் இருக்கின்றது.

மேலும் இத்தெருமூடிமடம் அருகில் உள்ள சிவன் ஆலயத்தின் எல்லையில் அமைந்துள்ளதோடு அத்தெருமூடிமடத்தினைச் சூழ இந்தியாவின் சிதம்பரத்துடன் சம்பந்தமான பிராமண குடிமை சிவன் கோயிலை மையம் கொண்டு தமது வாழ்வியலை அமைத்துக் கொண்டிருக்கின்ற தகவல்களும் இங்கு முக்கியமானது.

இத் தெருமூடி மடத்தின் அருகில் துலாக் கிணறும், ஆவுரஞ்சிக் கல்லும், கற்றொட்டியும், சுமைதாங்கிக் கல்லும் காணப்படுகின்றமை முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

## அமைப்பும் கலைப்பாணியும்

தெருமூடி மடத்தின் அமைப்பினைப் பொறுத்தவரையில் திராவிட கட்டட பாணியில் அமைந்துள்ள இதன் அடித்தளம், தூண்கள் மற்றும் சுவர்களும் திராவிடப்பாணி தழுவியவையாக இருக்கின்றன. வெண்வைரச் சுண்ணக் கல்லினால் பொழியப்பட்டு உருவாக்கப்பட்ட தூண்கள், அதன் கபோதகங்கள், மற்றும் தளம் ஆகியன நாகவடிவம் உள்ளிட்ட சிறந்த கொத்து வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

பொழிந்த வெண் வைரக் கற்சதுரங்கள் பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள உயர்ந்த திண்ணை போன்ற தளத்திற்கு மிக நேர்த்தியாக பரவப்பட்டு ஒழுங்கமைக்கப் பட்டிருக்கின்றது.

இரு பக்கத்திண்ணைகளிலும் கல் பரவப்பட்ட தளத்தில் இருந்து நான்கு பக்கச் சதுரப்பட்டையமைப்புடன் ஆரம்பிக்கும் கற்றூண்கள் அவற்றின் கூரையைத் தாங்கும் பகுதியில் தூண் போதத்துடன் காணப்படுகின்றது. இரு பக்கமும் சேர்த்து மொத்தமாக 16 தூண்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஆறு தூண்களில் வரிவடிவ சாசனங்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. அவை இம்மடத்தைக் கட்டிய உபயகாரர்களின் பெயர்கள் என்று ஆய்வாளர்கள் ஊகிக்கின்றனர். இச்சாசனங்கள் 19 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் வரிவடிவ வளர்ச்சியினை கொண்ட சாசனங்களாகக் காணப்படுகின்றன.

தூண்களின் அமைப்பு தனித்துவமான தொன்று. ஒற்றைக் கற்றூண்களான இவை நடுவில் எண்பக்கப் பட்டையுடனான, தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தூணின் கபோதம் உள்ளிட்ட முழுத் தோற்றமும் பல்லவர்கால கலை மரபினைத் தழுவி உருவாக்கப்பட்டிருப்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டும். பொதுவாக இந்துக் கலைமரபின் தொடர்ச்சியான ஊடுகடத்தலின் விளைவாக இப்பாணியைப் பார்க்க இயலும்.

மேலும் இத்தெருமூடிமடத்தின் இரு புறங்களிலும் உயர்ந்த மேடைபோல் காணப்படும் இருபக்கத் திண்ணைகளினதும் வெளிப்புறச்சுவர்கள் சுண்ணச் சாந்தினால் கட்டப்பட்டவையாக உள்ளன. பொதுவாக காலனிய கட்டட மரபின் வருகைக்குப் பின்னர், கடல் முகப் புத்தளங்களுக்கு நெருக்கமான கட்டடங்கள் முருகைக்கற்களால், அல்லது செங்கற்களால் கட்டப்பட்டன. எனினும் கோயில்கள், மடங்கள் போன்றன பாரம்பரியமாக பொழிந்த சுண்ணக்கற்களாலேயே வடக்கில் கட்டப்பட்டன. வடக்கின் முக்கிய புவியியல் கனிமமான சுண்ணக் கற்களிலேயே ஆவுரஞ்சிக்கல், கற்றொட்டி, கிணறு முதலிய மரபார்ந்த கட்டட அமைப்புத் தொகுதிகளும் கட்டப்படுகின்றமையை இங்கே ஞாபகப்படுத்த வேண்டும்.

(அடுத்தவாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த வாரம் நடைபெற்ற WWE போட்டி ஒன்றின் ரணகளத்துக்கு மத்தியிலும் ஆட்டம்போடும் சீமஸ் - சிசாரோ ஜோடி

# இன்பமும் துன்பமும்

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் நடப்புச் சம்பியனான லீசெஸ்ரர் சிற்றியின் முகாமையாளர் கிளாடியோ ரனேரி அதிரடியாகத் தற்போது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் லீசெஸ்ரர் சிற்றி இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் முதன்முறையாக சம்பியன் பட்டம் வெல்வதற்கு மூலகாரணமாக இருந்தவர் இத்தாலியின் முன்னாள் வீரரான கிளாடியோ ரனேரியே. இதனால் பிஃபாவினால் சென்ற வருடத்தின் சிறந்த ஆண்கள் உதைபந்தாட்டப் பயிற்சியாளருக்கான விருதையும் பிபிசியின் சென்ற வருட விளையாட்டு ஆளுமைக்கான விருதையும் ஒருங்குசேரப் பெற்ற பெருமைக்குரியவர்.

ஆனால் தற்போது நடைபெற்று வரும் பிறீமியர் லீக் தொடரில் லீசெஸ்ரர் சிற்றி 25 போட்டிகளின் முடிவில் 6 போட்டிகளில் மட்டும் வெற்றிபெற்று 21 புள்ளிகளுடன் 18ஆவது இடத்திலேயே உள்ளது. 20 கழகங்கள் பங்குபற்றும் பிறீமியர் லீக் தொடரின் முடிவில் இறுதி மூன்று இடங்களைப் பிடிக்கும் அணிகள் நடப்புத்தொடரில் இருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக மூன்று புதிய கழகங்கள் அடுத்த பருவகாலத்துக்கு உள்வாங்கப்படும். லீசெஸ்ரர் சிற்றிக்கு இன்னும் 13 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் சம்பியன் பட்டம் வெல்லாவிட்டாலும் பரவாயில்லை அடுத்த பருவகாலத்துக்கான அணியிலாவது இடம்பெறவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிளாடியோ ரனேரி சென்ற வருடம் லீசெஸ்ரர் சிற்றி சம்பியனானதும் 'நான் எந்தவொரு நட்சத்திர வீரரையும் நம்பியிருக்கவில்லை. ஏனென்றால் என்னால் பல நட்சத்திர வீரர்களை உருவாக்க முடியும்' என்றே கூறியிருந்தார். ஆனாலும் அது பேச்சளவில் இருந்ததே தவிர அதனைச் செயற்படுத்த அவரால் முடியவில்லை. சென்ற வருடம் லீசெற்றர் சிற்றி சம்பியனானதும் நட்சத்திர வீரர்கள் சிலரின் மதிப்புக்கூடியதனால் அவர்கள் வேறு கழகங்களுக்கு ஒப்பந்தமாகி இருந்தமையும் இவரது வியூகங்களை




எதிரணிகள் உடனடியாகவே புரிந்து கொண்டமையும் அவருக்கு பின்னடைவை ஏற்படுத்தி இந்நிலைக்குத் தள்ளியுள்ளது. தற்போது லீசெஸ்ரர் சிற்றி அணியின் புதிய முகாமையாளராக செல்சி அணியின் முன்னாள் முகாமையாளரான ஹஸ் ஹிட்டிங்கை நியமிப்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

# சொல்வதெல்லாம் உண்மை

இவ்வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகளில் றைசிங் புனே சுப்பர்கியன்ஸ் அணியின் தலைமைப் பதவியில் இருந்து டோனி அதிரடியாக நீக்கப்பட்டு ஸ்ரீபன் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார். சென்ற வருடம் 5 போட்டிகளில் மட்டும் வென்று புனே 7 ஆவது இடத்தைப் பிடித்ததனால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அணி நிர்வாகம் அறிவித்தது. ஆனாலும் நிர்வாகம் தோல்வியைப் பார்த்ததே தவிர டோனியின் தரப்பில் இருந்து இந்தப்பிரச்சினையை நோக்கவில்லை என்றே தோன்றுகிறது. சென்ற வருடம் அணியின் முக்கிய வீரர்களாக விளங்கிய ஸ்ரீபன் ஸ்மித், கெவின் பீற்றர்சன், மிட்செல் மார்ஷ், பிளசிஸ் போன்றவர்கள் ஒரு சில போட்டிகளுடனேயே காயம் காரணமாக தொடரில் இருந்து விலகி இருந்தனர். இந்நிலையில் இருக்கின்ற வீரர்களைக் கொண்டே அணியை நடத்த வேண்டிய பொறுப்பு டோனிக்கு ஏற்பட்டது. இதுவே தோல்விக்குப் பிரதான காரணமாகும்.

ஆனாலும் தற்போது புனே அணியின் உரிமையாளரான சஞ்சீவ் கொயங்கா பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் டோனியை நீக்கியதற்கான 5 காரணங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

1. அணி நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்த முக்கியமான கூட்டங்களுக்கு டோனி வருகை தரவில்லை. அவரோடு தொடர்பை ஏற்படுத்தியபோதிலும் அவரது முகவரான அருண்பாண்டே




பதிலளித்தாரே தவிர டோனி பதிலளிக்கவில்லை.

2. அணியால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டத்தில் பந்துவீச்சாளர்கள் குறித்து தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை மைதானத்தில் அமுல்படுத்தாமல் டோனி தன்முனைப்பாக முடிவுகளை எடுத்திருந்தமை.

3. வலைப்பயிற்சியில் டோனி தொடர்ச்சியாகக் கலந்து கொள்ளாததால் அங்கு இளம் வீரர்களின் செயற்பாடுகள் நன்றாக இருந்தபோதிலும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கத் தவறியமை. குறிப்பாக அவுஸ்ரேலிய சுழற்பந்துவீச்சாளரான அடம் சம்பாவை ஆரம்பத்தில் இருந்து பயன்படுத்தாமல் பாதியிலேயே பயன்படுத்தியமை.

4. பூரண உடற்தகுதியுடன் இல்லாத சௌரவ் திவாரிக்கு தொடர்ச்சியான வாய்ப்புக்களை டோனி அளித்தமை.

5. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் டோனி இருந்தபோது கிரிக்கெட் தவிர்ந்த ஏனைய விடயங்களிலும் அணி நிர்வாகத்துக்கு அவர் ஆலோசனை வழங்கி இருக்கலாம். ஆனால் புனே அணி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கிரிக்கெட் தவிர்ந்த ஏனைய விடயங்களில் டோனி தலையிடுவதை விரும்பவில்லை.

டோனி சென்னையில் விளையாடியபோது அதன் உரிமையாளர்களில் ஒருவரான ஸ்ரீனிவாசனுக்கும் அவருக்கும் இடையில் இருந்த அந்நியோன்னியம் போன்று புனேயிலும் தனக்கு இருக்கும் என்றதொரு நம்பிக்கையிலேயே இந்திய அணியின் ஒருநாள் மற்றும் இருபதுக்கிருபது போட்டிகளின் தலைமைப் பதவியில் இருந்து விலகிய போது புனே அணிக்குத் தொடர்ந்தும் தலைவராக இருப்பேன் என்று உறுதியாகத் தெரிவித்தார். ஆனாலும் புனே அணி நிர்வாகத்தின் குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தால் இத்தகைய உள்முரண்பாடுகளுக்கு மத்தியில் தன்னைத் தொடர்ந்தும் தலைவராக நீடிப்பார்கள் என்று டோனி எந்தக் குருட்டு நம்பிக்கையில் அதனைத் தெரிவித்தார் என்று தெரியவில்லை.


அதேசமயம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி. எல் போட்டிகளில் சூதாட்டத் தடையில் இருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மீளவந்து விளையாடுவது உறுதி என்றே கருதப்படுகின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் டோனியின் தெரிவு சென்னையாகவே இருக்கும். எனவே புனே அணியின் நலனை தூரநோக்கில் சிந்தித்து ஸ்ரீபன் ஸ்மித்தை தலைவராக நியமிப்பதற்காக புனே அணிநிர்வாகத்தால் திட்டமிட்டு இந்தக்குற்றச்சாட்டுக்கள் புனையப்பட்டுள்ளனவா? என்பதும் தெரியவில்லை. டோனியும் இந்தக்குற்றச்சாட்டுக்கள் குறித்து வாய்திறக்காத நிலையில் இந்த விடயம் மர்மமாகவே இருக்கின்றது.

# அஸ்தமனம் நிரந்தரமல்ல

தொகுப்பு : சி.விமலன்

புனேயில் நடைபெற்ற இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா பெற்ற வெற்றி தொடர்ச்சியாக 19 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியைச் சந்திக்காத இந்தியாவுக்கு முற்றுப்புள்ளியாக அமைந்தது. போட்டி நடைபெற்ற மகாராஷ்டா கிரிக்கெட் அசோசியேசன் மைதானத்தில் இதுவரை சர்வதேச ஒருநாள் போட்டிகளும் சர்வதேச 'இருபதுக்கு 20' போட்டிகளும் நடைபெற்றாலும் இந்தப் போட்டியே இம்மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியாகும். இதனை நினைவுகூருமுகமாக சிறப்புத் தபால் தலையும் போட்டியின் முதல்நாள் வெளியிடப்பட்டிருந்தது. எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்தமை ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது.

சென்ற வருடம் கிரிக்கெட் அவுஸ்ரேலியா, இலங்கை சுற்றுப்பயணத்தின் போது முரளிதரனை பந்துவீச்சு ஆலோசகராக நியமித்தாலும் படுதோல்வியைச் சந்தித்தது. ஆனாலும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல இம்முறை தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் ஸ்ரீராமை அவுஸ்ரேலியாவின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக நியமித்தது. இது போதாதென்று ஸ் ரீவ் ஓகீஃவ் இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்து வீரரான மொன்ரி பனேசரிடமும் இந்தியத் தொடருக்கெனப் பிரத்தியேகப் பயிற்சி பெற்றமையும் வெற்றிக்கு வழிசமைத்துள்ளது.



மூன்று நாட்களுக்குள் முடிந்த இந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றதை பலரும் பாராட்டி உள்ளார்கள். ஆனாலும் இதே மூன்று நாளில் இந்தியா இப்போட்டியில் வென்றிருந்தால் நிச்சயம் ஆடுகளத்தை தமக்குச் சாதகமாக அமைத் துவிட்டார்கள் என்ற வழமையான பல்லவியை அவுஸ்ரேலியாவும் ஏனைய நாட்டு ரசிகர்களும் குற்றச்சாட்டாக முன்வைத்திருப்பார்கள்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 04.03.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org